# கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை

# கைத்தறி மற்றும் துணிநூல்

## கொள்கை விளக்கக் குறிப்பு
## 2018–2019

### மானியக் கோரிக்கை எண். 17


**ஓ.எஸ். மணியன்**
**கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்**



©
தமிழ்நாடு அரசு
2018

## அட்டவணை


| வ. எண் | பொருளடக்கம் | பக்கம் எண் |
|---|---|---|
| 1 | முன்னுரை | 1 |
| 2 | துணித் தொழிலின் பல்வேறு பிரிவுகளின் தற்போதைய நிலை | 3 |
| 3 | கைத்தறி மற்றும் துணிநூல் துறை | 27 |
| 4 | துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் சிறப்புத் திட்டங்கள் | 31 |
| 5 | துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்கள் | 50 |
| 6 | துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் நல்வாழ்வு திட்டங்கள் | 103 |
| 7 | துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள் | 140 |

| வ. எண் | பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|---|
| 8 | துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் | | |
| | 8.1 | கூட்டுறவு நூற்பாலைகள் | 157 |
| | 8.2 | தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை | 164 |
| | 8.3 | தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கோயம்புத்தூர் | 171 |
| | 8.4 | தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம் | 175 |
| | 8.5 | தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிமிடெட், ஈரோடு | 179 |
| | 8.6 | தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் லிமிடெட் (டான்ஸ்பின்), சென்னை | 182 |
| | 8.7 | தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் (கோ–ஆப்டெக்ஸ்), சென்னை | 183 |
| 9 | 2018 – 19 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு | | 210 |

# கைத்தறி மற்றும் துணிநூல்

## முன்னுரை

இந்திய ஜவுளித் தொழில், விவசாயம், நாட்டின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்துடன் இயல்பாக தொடர்புடையது. இத்தொழில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கு தகுந்த பல்வகை தயாரிப்புகளை வழங்கி வருகிறது. ஜவுளித் துறையானது நாட்டின் தயாரிப்பு உற்பத்தியில் 10 சதவீதமும், இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2 சதவீதமும், நாட்டின் ஏற்றுமதி வருமானத்தில் 13 சதவீதமும் பங்களிக்கிறது. மேலும், 4.5 கோடிக்கும் அதிகமான மக்களுக்கு நேரடி வேலைவாய்ப்பினை வழங்குவதன் மூலம், நாட்டில் பெருமளவு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தக்கூடிய ஆதாரங்களுள் ஜவுளித் துறை ஒன்றாகத் திகழ்கிறது.

பரந்து விரிந்த இந்திய துணிநூல் துறையானது கையால் நெய்யப்படும் துணிப்பிரிவு முதல் அதிக மூலதனங்களைக் கொண்ட நூற்பாலைப் பிரிவு வரை அனைத்தையும் உள்ளடக்கியது. பரவலாக்கப்பட்ட விசைத்தறி, ஆயத்த ஆடை மற்றும் பின்னலாடைப்பிரிவு, கைத்தறி மற்றும் கைவினைப் பொருள் பிரிவு மற்றும் பருத்தி, பட்டு சணல், கம்பளி மற்றும் செயற்கை நாரிழை ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

ஜவுளித்தொழிலின் உட்பிரிவுகளான நூற்பு, கைத்தறி நெசவு, விசைத்தறி நெசவு, பதனிடுதல், பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை தயாரிப்பு போன்றவற்றில் மிக பெரிய அளவிலான இடத்தினை பெற்றிருப்பதன் மூலம் தமிழ்நாடு பத்தாண்டுகளாக இந்திய ஜவுளித்தொழிலில் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது.

உற்பத்தி, வேலைவாய்ப்பு மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு மிகச்சிறந்த பங்களிப்பினை வழங்கக் கூடிய ஒரு வலிமையான மற்றும் உயிரோட்டமுள்ள ஜவுளித் தொழிலை வளர்ப்பதில் தமிழ்நாடு அரசு உறுதி கொண்டுள்ளது. சீரான வளர்ச்சியை தக்க வைத்துக் கொள்ள, கைத்தறி மற்றும் துணிநூல் துறை, கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்கள் மற்றும் ஜவுளித் தொழிலின் அனைத்து உட்பிரிவுகளின் வளர்ச்சிக்காக, எண்ணற்ற நலத்திட்டங்களையும், முன்னேற்றத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. இத்தொழிலைச் சார்ந்துள்ள அனைத்து பிரிவுகளின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு சரியான சூழலை ஏற்படுத்தவும், தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கவும், அரசு முயற்சி எடுத்து வருகிறது.

**2. துணித் தொழிலின் பல்வேறு பிரிவுகளின் தற்போதைய நிலை**

**(i) கைத்தறிப்பிரிவு**

கைத்தறி நெசவு, தலைமுறை மரபின் மிகச்சிறந்த பகுதியாகத் திகழ்வதோடு, நமது நாட்டின் சிறந்த பன்முகக் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தினையும், நெசவாளர்களின் கைத்திறனையும் உலகிற்கு பறைசாற்றுவதாகத் திகழ்கிறது. கையினால் நெசவு செய்யும் பாரம்பரியமானது நமது நாட்டின் கலாச்சாரப் பண்பாடாகும். கைத்தறித் தொழில், பொருளாதாரச் செயல்பாட்டில், விவசாயத்திற்கு அடுத்து மிகப்பெரிய அளவில் வேலைவாய்ப்பினை வழங்கும் ஒரு பிரிவாகும். இப்பிரிவு ஏறக்குறைய **23.77** இலட்சம் கைத்தறிகளைக் கொண்டு **43.31** இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பினை வழங்குகிறது. கைத்தறி நெசவானது, நாட்டின் துணி உற்பத்தியில் சுமார் **15** சதவீதம் உற்பத்தி செய்வதோடு மட்டுமல்லாமல் நாட்டின் அந்நியச் செலாவணியிலும் பங்களிப்பு செய்கிறது. குறிப்பிடும்படியாக, உலகின் கையினால் நெசவு செய்த துணிகளில் **95** விழுக்காடு இந்தியாவிலிருந்து பெறப்படுகிறது. **(ஆதாரம்: மத்திய அரசு, ஜவுளி அமைச்சகம், ஆண்டறிக்கை 2016–2017)**

இந்தியப் பொருளாதாரத்தில் கைத்தறிப் பிரிவு ஒரு தனித்துவமான இடத்தை பெற்றுள்ளது. ஒரு தலை முறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு திறன் மாறுவதன் மூலம் தனக்கென ஒரு இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. கைத்தறியின் தனித்துவம், தயாரிப்பில் நெகிழ்தன்மை, புதிய கண்டுபிடிப்புகளுக்கான வரவேற்பு, வாங்குவோரின் தேவைக்கேற்ப மாறுபடுதல் மற்றும் அதன் பாரம்பரியம் ஆகியன இப்பிரிவின் பலமாகும்.

நவீன தொழில் நுட்பங்கள் மற்றும் பொருளாதார விரிவாக்கம் ஆகியவை இப்பிரிவில் சில மாற்றங்களைப் புகுத்தியுள்ளது. விசைத்தறி மற்றும் ஆலைப் பிரிவின் கடுமையான போட்டி, வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மலிவு விலைத்துணிகள், அவ்வப்போது மாறிவரும் நுகர்வோரின் விருப்பம் மற்றும் பிற தொழில் வேலைவாய்ப்புகள் ஆகியவை இப்பிரிவின் வளர்ச்சிக்கு அச்சுறுத்தலாக உள்ளன.

**11**–வது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்ப காலத்தில் கைத்தறித் துணி தயாரிப்புகளுக்கு மக்களிடையே அதிக வரவேற்பு இருந்ததால் **6** சதவீதம் முதல் **7** சதவீதம் வரை வளர்ச்சியைப் பெற்றது. அதனைத் தொடர்ந்து வந்த பொருளாதார வீழ்ச்சியில் இந்தியாவின் அனைத்துத் துறைகளும்

பாதிக்கப்பட்டது. இதில் கைத்தறித் துறையும் விதிவிலக்கல்ல. தற்போது இத்துறையில் நேர்மறை அறிகுறி தென்படுவதோடு மட்டுமல்லாமல் தயாரிப்பிலும் ஏறுமுகமான வளர்ச்சியைக் கண்டுள்ளது.



**காஞ்சிபுரம், தேசிய விருது வென்ற நெசவாளர்
தனது கைத்தறியில் நெசவு**

தமிழ்நாட்டின் கைத்தறிப் பிரிவானது, ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக வரலாற்றுச் சிறப்பு மிக்க மதிப்பும், கைத்தறி நெசவாளர்களின் மிகச்சிறந்த கைத்திறனுக்கான பாரம்பரியத்தையும் தக்க வைத்துக் கொண்டுள்ளது. மாநிலத்தில் 1,139 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் கீழ் 2.44 இலட்சம் கைத்தறிகள் இயங்கி வருகின்றன. மொத்தமுள்ள 1,139

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் 1,053 பருத்தி கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் மீதமுள்ள 86 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களாகும். இவை பெரும்பாலும் கைத்தறி நெசவாளர்கள் அதிகம் வசிக்கும் கிராமப்புற மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ளன. கைத்தறி நெசவாளர்களுக்காக மத்திய மற்றும் மாநில அரசுகளின் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் நல்வாழ்வுத் திட்டங்கள் மாநிலத்தில் இயங்கி வரும் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக செயல்படுத்தப்படுகிறது.

2017–2018ஆம் ஆண்டில், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ரூ.695.50 கோடி மதிப்பிலான 790.35 இலட்சம் மீட்டர் கைத்தறித் துணியினை உற்பத்தி செய்து, ரூ.852.93 கோடி அளவிற்கு விற்பனை செய்துள்ளது. 959 நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் இலாபத்தில் இயங்கி வருகின்றன.


கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உள்ள 3,580 கைத்தறிகள் மூலம் விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம், பொங்கல் 2018ன் கீழ் ரூ.8.57 கோடி மதிப்பிலான 3.50 இலட்சம் கைத்தறி சேலைகளையும், ரூ.9.72 கோடி மதிப்பிலான 5.21 இலட்சம் கைத்தறி வேட்டிகளையும் உற்பத்தி செய்து வழங்கியுள்ளன. மேலும், 2017–2018ஆம் கல்வியாண்டில் 436


கைத்தறிகள் மூலம்  விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.**2.61** கோடி மதிப்பிலான **3.77** இலட்சம் மீட்டர் கைத்தறி டிரில்  துணிகளையும், ரூ.**1.22** கோடி மதிப்பிலான **2.31** இலட்சம் மீட்டர் கைத்தறி கேஸ்மெண்ட் துணிகளையும் உற்பத்தி செய்து வழங்கியுள்ளன.

**31.03.2018 முடிய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடு**


| **சரகம்** | **உள்ளடக்கிய மாவட்டம்** | **மொத்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை** | **உறுப்பினர் களின் எண்ணிக்கை** | **உற்பத்தி மதிப்பு (ரூ. கோடியில்)** | **விற்பனை மதிப்பு (ரூ. கோடியில்)** |
|---|---|---|---|---|---|
| கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் | 59 | 23040 | 50.95 | 57.10 |
| | நீலகிரி | | | | |
| கடலூர் | கடலூர் | 56 | 11606 | 28.00 | 32.54 |
| | விழுப்புரம் | | | | |
| திண்டுக்கல் | திண்டுக்கல் | 40 | 6597 | 18.97 | 22.81 |
| ஈரோடு | ஈரோடு | 190 | 65942 | 184.00 | 225.27 |
| காஞ்சிபுரம் | காஞ்சிபுரம் | 74 | 41552 | 73.92 | 105.69 |
| கரூர் | கரூர் | 55 | 11299 | 9.87 | 10.91 |
| கும்பகோணம் | தஞ்சாவூர் | 48 | 13564 | 50.00 | 68.09 |
| | அரியலூர் | | | | |
| | பெரம்பலூர் | | | | |

| சரகம் | உள்ளடக்கிய மாவட்டம் | மொத்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர் களின் எண்ணிக்கை | உற்பத்தி மதிப்பு (ரூ. கோடியில்) | விற்பனை மதிப்பு (ரூ. கோடியில்) |
|---|---|---|---|---|---|
| மதுரை | மதுரை<br>தேனி | 36 | 11737 | 12.76 | 14.96 |
| நாகர்கோவில் | கன்னியாகுமரி | 40 | 6545 | 17.00 | 20.67 |
| பரமக்குடி | இராமநாதபுரம்<br>சிவகங்கை | 86 | 11573 | 25.00 | 32.12 |
| சேலம் | சேலம்<br>தருமபுரி<br>கிருஷ்ணகிரி | 62 | 25243 | 45.83 | 58.79 |
| திருச்செங்கோடு | நாமக்கல்<br>சேலம் | 75 | 17890 | 26.66 | 30.66 |
| திருநெல்வேலி | திருநெல்வேலி<br>தூத்துக்குடி | 45 | 7372 | 11.06 | 13.14 |
| திருவள்ளூர் | திருவள்ளூர்<br>சென்னை | 61 | 5903 | 11.04 | 12.68 |
| திருவாரூர் | திருவாரூர்<br>நாகப்பட்டினம் | 6 | 1053 | 1.03 | 1.31 |
| திருச்சி | திருச்சி<br>புதுக்கோட்டை | 21 | 4120 | 2.24 | 2.59 |
| திருவண்ணா மலை | திருவண்ணா மலை | 29 | 10481 | 15.24 | 17.51 |
| திருப்பூர் | திருப்பூர் | 46 | 16913 | 34.22 | 35.59 |
| வேலூர் | வேலூர் | 54 | 9910 | 16.09 | 18.78 |
| விருதுநகர் | விருதுநகர் | 56 | 17212 | 61.62 | 71.72 |
| **மொத்தம்** | | **1139** | **319552** | **695.50** | **852.93** |





**கடந்த 3 ஆண்டுகளில் கைத்தறி நெசவாளர்**
**கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடு**




**கடந்த 3 ஆண்டுகளில் முகவர்களின் விற்பனை விவரங்கள்**




**கடந்த 3 ஆண்டுகளில் இரக வாரியான விற்பனை விவரங்கள்**



ஆயிரம் புட்டா பரமக்குடி பருத்தி சேலை



அருப்புக்கோட்டை பருத்தி சேலை

**பெடல் தறி**

பெடல் தறியானது கைத்தறியின் மேம்படுத்தப்பட்ட வடிவமைப்பாகும். இதில் மொத்த நெசவு வேலையும் கைத்தறியின் அடிப்படை இயந்திரப் பணிகளை ஒருங்கிணைக்கப்பட்ட பெடல்களை மேலும் கீழும் அழுத்துவதன் மூலம் நெசவு மேற்கொள்ளப்படுகிறது. பெடல் தறிகளில் உற்பத்தியானது கைத்தறியின் உற்பத்தியினைவிட இருமடங்கிற்கும் மேலாகவும், நெசவுக் குறைபாடுகள் குறைவாகவும் இருக்கும். எனவே, நெசவாளர்களின் உடல் உழைப்பினைக் குறைக்கவும், மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் மூலம் அவர்களின் உற்பத்தி திறனை அதிகரித்து அதன் மூலம் கைத்தறி நெசவாளர்களின் வருவாய் ஈட்டும் திறனை அதிகரிக்கவும், தமிழக அரசு **6,000** பெடல் தறிகளை **2013–2014**ஆம் ஆண்டு முதல் **2015–2016**ஆம் ஆண்டு வரை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திலுள்ள நெசவாளர்களுக்கு வழங்கியுள்ளது.

தமிழகத்தில் சுமார் **14,000** பெடல் தறிகள் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் இயங்கி வருகின்றது. அவற்றில் **9,690** பெடல் தறிகள் ஜூலை மாதம் முதல் டிசம்பர் மாதம் முடிய விலையில்லா வேட்டி சேலை உற்பத்தியிலும், **6,960** பெடல் தறிகள் பிப்ரவரி மாதம் முதல் ஜூன் மாதம் முடிய

விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் சீருடை துணிகள் உற்பத்தியிலும் ஈடுபடுத்தப்படுகின்றன. எஞ்சிய பெடல் தறிகள் சந்தை இரகங்கள் உற்பத்தியில் ஈடுபடுத்தப்படுகின்றன.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் பொங்கல் **2018**–ன் கீழ் ரூ.**68.05** கோடி மதிப்பிலான **35.05** இலட்சம் பெடல் தறி சேலைகளையும், ரூ.**16.16** கோடி மதிப்பிலான **11.30** இலட்சம் பெடல் தறி வேட்டிகளையும் உற்பத்தி செய்து வழங்கியுள்ளன. மேலும், **2017–18**–ஆம் கல்வியாண்டில் விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.**15.81** கோடி மதிப்பிலான **41.03** இலட்சம் மீட்டர் பெடல் தறி கேஸ்மெண்ட் துணிகளையும், ரூ.**18.66** கோடி மதிப்பிலான **69.15** இலட்சம் மீட்டர் பெடல் தறி துப்பட்டா துணிகளையும் உற்பத்தி செய்து வழங்கியுள்ளன.

**(ii) விசைத்தறிப் பிரிவு**

ஜவுளித் தொழிலில் பரவலாக அமைந்துள்ள விசைத்தறி பிரிவு, துணி உற்பத்தி மற்றும் வேலை வாய்ப்பு வழங்குவதில் மிக முக்கிய பிரிவாக விளங்குகிறது. இப்பிரிவு, **64.36** இலட்சம் மக்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதோடு, நாட்டின் மொத்த துணி உற்பத்தியில் **60** விழுக்காடு பங்களிக்கிறது. விசைத்தறி பிரிவில் **60** விழுக்காடு துணிகள் செயற்கை இழைகளை கொண்டு உற்பத்தி செய்யப்படுகிறது. மேலும், ஏற்றுமதிக்கான

துணி இரகங்கள் 60 விழுக்காட்டிற்கு மேல் விசைத்தறி பிரிவு மூலம் பெறப்படுகிறது. ஆயத்த ஆடைகள் மற்றும் வீட்டு உபயோக துணிப் பிரிவுகள் ஆகியவை தங்களது மூலப் பொருளான துணித் தேவைக்கு விசைத்தறி தொழிலையே பெருமளவு சார்ந்துள்ளன.

இந்தியாவில் ஏறத்தாழ 25.74 இலட்சம் விசைத்தறிகள் உள்ளன. இப்பிரிவின் தொழில் நுட்பமானது சாதாரண விசைத்தறிகள் முதல் உயர் தொழில்நுட்பம் வாய்ந்த நாடா இல்லாத தானியங்கி விசைத்தறிகள் வரை மாறுபட்டுள்ளன. இப்பிரிவில் ஏறக்குறைய 1.50 இலட்சம் நாடா இல்லா தறிகள் உள்ளன. 75 விழுக்காட்டிற்கும் மேலான சாதாரண விசைத்தறிகள் 15 ஆண்டுகளுக்கு மேலாக பழமை வாய்ந்ததாகவும் காலாவதியானதாகவும் அமைந்துள்ளதுடன் தரக் கட்டுப்பாடு கருவிகள்/இணைப்புகள் இல்லாமலும் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளன.

தமிழகத்தில், விசைத்தறி தொழில் மக்களின் துணி தேவையினை பூர்த்தி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கின்றது. மகாராஷ்டிரா மாநிலத்திற்கு அடுத்தபடியாக எண்ணிக்கையின் அடிப்படையில் விசைத்தறிகள் அதிகம் உள்ள மாநிலமாக தமிழ்நாடு அமைந்துள்ளது. நாட்டில் மொத்தமுள்ள 25.74 இலட்சம் விசைத்தறிகளில், நமது மாநிலத்தில் ஏறத்தாழ 5.67

இலட்சம் விசைத்தறிகள் உள்ளன. அவற்றுள் **46,229** விசைத்தறிகள் **210** விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் செயல்பட்டு வருகின்றன.

விசைத்தறி குழுமங்கள் பெரும்பாலும் நாமக்கல், சேலம், ஈரோடு, கோயம்புத்துார், வேலுார், கடலுார், காஞ்சிபுரம், திருவண்ணாமலை, மதுரை, கரூர், திருவள்ளூர், திருநெல்வேலி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ளன. சேலம், கரூர், திருப்பூர், திருவள்ளூர், பள்ளிப்பாளையம் மற்றும் கொமாரபாளையம் போன்ற பகுதிகளில் உள்ள பெரும்பாலான விசைத்தறிகள், ஏற்றுமதி இரக உற்பத்தியில் ஈடுபட்டுள்ளன. தமிழ்நாட்டில் அதிக அளவு சாதாரண விசைத்தறிகளும் மிகக்குறைந்த அளவு நாடா இல்லா தறிகளும் உள்ளன.

விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் பள்ளி மாணாக்கர்களுக்கான விலையில்லா சீருடை வழங்கும் திட்டம் மற்றும் விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம் ஆகியவற்றிற்குத் தேவைப்படும் துணிவகைகள் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. கடந்த **2017–2018** ஆம் ஆண்டு, அரசுத் திட்டங்களுக்காக ரூ.**399.22** கோடி மதிப்புள்ள **1440.43** இலட்சம் மீட்டர் துணிகளையும், வெளிச்சந்தைக்காக ரூ.**23.08** கோடி மதிப்புள்ள **42.19** இலட்சம் மீட்டர் துணிகளையும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உற்பத்தி செய்து,

அரசுத் திட்டங்களுக்காக ரூ.**386.90** கோடி மற்றும், வெளிச்சந்தையில் ரூ.**38.00** கோடி மதிப்புள்ள துணிகளையும் விற்பனை செய்துள்ளன.

**31.03.2018-இல் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் செயல்பாடு**

| வ. எண் | சரகத்தின் பெயர் | விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை | உறுப்பினர்களின் எண்ணிக்கை | உற்பத்தி | | | | விற்பனை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அரசுத் திட்டங்கள் | | வெளிச் சந்தை | | அரசுத் திட்டங்கள் | வெளிச் சந்தை |
| | | | | இலட்சம் மீட்டர் | ரூ. கோடியில் | இலட்சம் மீட்டர் | ரூ. கோடியில் | ரூ. கோடியில் | ரூ. கோடியில் |
| 1 | ஈரோடு | 48 | 6480 | 665.83 | 189.22 | 1.6 | 3.42 | 195.87 | 3.50 |
| 2 | கோயம்புத்தூர் | 20 | 1141 | 123.00 | 34.14 | 1.2 | 0.65 | 29.15 | 0.65 |
| 3 | சேலம் | 13 | 893 | 9.33 | 2.66 | 15.51 | 12.27 | 2.92 | 5.59 |
| 4 | திருச்செங்கோடு | 68 | 4225 | 521.58 | 139.62 | 23.42 | 6.68 | 141.31 | 28.20 |
| 5 | திருப்பூர் | 21 | 932 | 118.00 | 32.66 | 0 | 0 | 16.76 | 0 |
| 6 | மதுரை | 5 | 79 | 2.69 | 0.93 | 0 | 0 | 0.887 | 0 |
| 7 | விருதுநகர் | 1 | 23 | 0 | 0 | 0.46 | 0.06 | 0 | 0.06 |
| 8 | திருவள்ளூர் | 34 | 1310 | இல்லை | | | | | |
| மொத்தம் | | 210 | 15083 | 1440.43 | 399.22 | 42.19 | 23.08 | 386.90 | 38.00 |



விசைத்தறி, ஈரோடு



ரேப்பியர் நாடாத்தறி, திருச்செங்கோடு



நாடா இல்லாத்தறி, ஈரோடு



தானியங்கி தறி



ஏர் ஜெட் தறி

**(iii) நூற்பாலைப் பிரிவு**

அமைப்பு சார்ந்த ஜவுளித் தொழிலில் சிறு மற்றும் நடுத்தர பிரிவை சார்ந்த **3,400** நூற்பாலைகள் உள்ளன. **52.47** மில்லியன் கதிர்கள் மற்றும் **8,42,000** சுழலிகளுடன் உலகிலேயே இரண்டாவது அதிகமான மொத்தமாக நிறுவப்பட்ட கதிர்கள் உடையதாக நம் நாடு விளங்குகிறது**.** ஆலைப் பிரிவு சுமார் **2500** மில்லியன் சதுர மீட்டர் துணியையும், இவை தவிர, **2500** மில்லியன் கிலோ கிராம் அளவுக்கு மனிதனால் உருவாக்கப்பட்ட இழை மற்றும் செயற்கை நூல் உற்பத்தியையும் மேற்கொள்கிறது**.**

கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள **6** நூற்பாலைகளையும் மற்றும் தேசிய பஞ்சாலை கழகத்தின் கீழ் உள்ள **7** நூற்பாலைகளையும் சேர்த்து மொத்தம் **2,027** நூற்பாலைகளையும் **24** மில்லியன் கதிர்களையும் கொண்டுள்ள தமிழ்நாடு நாட்டிலேயே முன்னணி மாநிலமாக உள்ளது**.**



நூற்பாலை அலகு

தமிழ்நாட்டில் ஆண்டுக்கு சுமார் 2,003 மில்லியன் கிலோகிராம் நூல் உற்பத்தி செய்யப்படுகிறது. இது நாட்டின் மொத்த நூல் உற்பத்தியில் 35 விழுக்காடு ஆகும். **தமிழ்நாடு அனைத்து வகையான பருத்தி நூல் உற்பத்தி மற்றும் செயற்கை இழை உற்பத்தியிலும் நாட்டிலேயே முதல் மாநிலமாக விளங்குகின்றது. கலவை நூல் உற்பத்தியில் தேசிய அளவில் இரண்டாவது இடத்தை வகிக்கிறது. பருத்தி நூல் ஏற்றுமதியில் தமிழகம் தொடர்ந்து நாட்டிலேயே முதல் மாநிலமாக திகழ்ந்து வருகிறது.**

## (iv) ஆயத்த ஆடைகள் மற்றும் பின்னலாடைப் பிரிவு

ஆயத்த ஆடை பிரிவானது, தொழிலாளர்கள் செறிந்த துறைகளில் ஒன்றாகக் திகழ்வதுடன், வளர்ந்துவரும் நாடுகள் உலகச் சந்தையில் நுழைவதற்கு வழிவகை செய்கிறது.

இந்தியத் துணைக் கண்டம், உலகளவில் இரண்டாவது மிகப் பெரிய ஆயத்த ஆடை உற்பத்தியாளராக திகழ்கிறது. இந்தியாவின் பெரும்பாலான ஆயத்த ஆடை உற்பத்தி ஆலைகள் சிறிய மற்றும் நடுத்தர வகையைச் சார்ந்ததாக உள்ளன. இந்தியாவின் ஆயத்த ஆடை தொழில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டு உலகின் மிகச்சிறந்தவற்றுள் ஒன்றாகவும் திகழ்கிறது. இத்தொழில் வடிவமைப்பாளர்கள், தயாரிப்பாளர்கள், ஏற்றுமதியாளர்கள், விநியோகஸ்தர்கள், கொள்முதல் செய்பவர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்கள் ஆகியோரை உள்ளடக்கியது. இந்திய ஆயத்த ஆடைகள் தங்களது தரம், அமைப்பு மற்றும் நீடித்த உழைப்பு போன்றவற்றிற்கென நற்பெயர் ஈட்டி உலகச் சந்தையில் தனக்கென முக்கிய ஒரு சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது. தற்போதுள்ள மாறிவரும் நுகர்வோரின் விருப்பம், எளிதில் கிடைக்கும் வணிகக் குறியீடுள்ள ஆடைகள் மற்றும் அலங்காரப் பொருட்கள், சில்லறை விற்பனையின் பெரும் வளர்ச்சி, தற்போது செலவிடக்கூடிய வருமானத்தின் உயர்வு

காரணமாக வணிக வளாகங்களையும், தள்ளுபடி விற்பனையகங்களையும் அனுகும் மக்களின் வாங்கும் திறன், ஜவுளித்தொழில் ஏற்றுமதியை விரைவுபடுத்துதலில் கவனம் செலுத்தும் அரசின் கொள்கைகள் போன்றவற்றினால், நமது நாட்டின் ஜவுளித்தொழில் அதிக முதலீடுகள் பெறுவதற்கான வாய்ப்பும், தகுந்த சூழ்நிலைக ளையும் ஏற்படுத்தியுள்ளது.



**திருப்பூரில் உள்ள ஆயத்த ஆடை தையல் பிரிவு**

ஆயத்த ஆடைத் தொழில் வளர்ந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கினை வகிக்கிறது. இந்தியாவில் ஆயத்த ஆடை தொழில் 1.23 கோடி நபர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதுடன், 36 இலட்சம் டன் ஆயத்த ஆடைகளை உற்பத்தி செய்து வழங்குகிறது. இந்தியாவின் மொத்த ஜவுளி ஏற்றுமதியில் ஆயத்த ஆடைகளின் பங்கு 43 விழுக்காடு ஆகும். இவற்றில் பருத்தி ஆடைகள், ஆடை சார்ந்த பொருட்கள், செயற்கை இழை

ஆடைகள் மற்றும் இதர ஜவுளி ஆடைகள் அடங்கும். கடந்த சில ஆண்டுகளில் இந்தியாவில் ஆயத்த ஆடை தொழில் துரிதமான வளர்ச்சியைக் கண்டுள்ளது.

தமிழ்நாட்டில், ஆயத்த ஆடைப்பிரிவு ஜவுளித் தொழிலில் வளர்ந்து வரும் ஒரு முக்கிய பிரிவாகும். இந்தியாவில் மொத்தமுள்ள 13,000 ஆயத்த ஆடை நிறுவனங்களில் 6,500 நிறுவனங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. அவற்றில், 3500 நிறுவனங்கள் திருப்பூரிலும், 3000 நிறுவனங்கள் மதுரை, கரூர், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் சென்னை மற்றும் அதன் சுற்றுப்புறத்திலும் அமைந்துள்ளதுடன், 6 இலட்சம் நபர்களுக்கு வேலை வாய்ப்பும் வழங்கி வருகின்றன.

திருப்பூரின் மொத்த ஏற்றுமதி மற்றும் உள்நாட்டு விற்பனை ஆகியவற்றின் அளவு 2017–2018 ஆம் ஆண்டில் தோராயமாக ரூ.34,000 கோடி ஆகும். வியாபாரப் போட்டியின் காரணமாகவும், சுங்க வரி மற்றும் வரி கட்டமைப்பு மாறுதல்களாலும் திருப்பூர் பின்னலாடையின் ஏற்றுமதி கடந்த 2016–2017 ஆம் ஆண்டை விட 5.6% அளவிற்கு குறைந்துள்ளது.

## (v) பதனிடும் பிரிவு

பதனிடும் தொழிலானது துணியின் மதிப்பு, அதன் தரம், புதுமை புகுத்துதலுக்கான வாய்ப்பு மற்றும் துணிகளை சந்தைப்படுத்துதலுக்கான தாக்கம் ஆகியவற்றை நிர்ணயம் செய்கின்றது. ஜவுளி மதிப்பு தொடரில், பதனிடும் தொழிலானது முக்கியமான மதிப்புக்கூட்டும் அங்கமாக திகழ்கிறது.

தமிழ்நாட்டில் பதனிடும் வசதி, முக்கியமாக கைகளால் சாயமிடுதல்/கைகளால் அச்சிடுதல் போன்றவை அமைப்புசாரா நிறுவனங்கள் வசம் உள்ளது. ஜவுளித் தொழிலின் தேவைகளை பூர்த்தி செய்யும் அளவிற்கு நெசவுக்கு முந்தைய மற்றும் நெசவுக்கு பிந்தைய வசதிகள் வளர்ச்சியடையவில்லை.

துணி பதனிடும் தொழிலானது இரு பிரிவுகளை உள்ளடக்கியது :-

1 வீட்டு உபயோக துணி வகைகள் மற்றும் நூல் சாயமிட்ட துணி இரகங்கள் ஆகியவைகளை உற்பத்தி செய்வதற்கு நூலினை வெளுத்தல் மற்றும் சாயமிடுதல்.

2 துணிகளை வெளுத்தல், சாயமிடல் மற்றும் காடா துணிகளை அச்சிட்டு, சேலைகள், லுங்கிகள் மற்றும் இதர வீட்டு உபயோக துணி வகைகளாக மாற்றுதல்.

தற்போதுள்ள பதனிடும் வசதிகள் போதுமானதாக இல்லாததால், பதனிடும் வசதிகள் பெரிய அளவில் அமைந்தால் இத்தொழில் மாநிலத்தில் படிப்படியாக வளர உதவிகரமாக இருக்கும்.



பதனிடும் அலகு

இந்தியாவில் சுமார் **10,397** கையால் இயக்கப்படும் நிறுவனங்களும் **2,510** மின் விசையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்களும் உள்ளன. அவற்றில், **2,614** கையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்கள் மற்றும் **985** மின் விசையால் இயக்கப்படும் பதனிடும் நிறுவனங்களும் தமிழகத்தில் அமைந்துள்ளன.

## 3. கைத்தறி மற்றும் துணிநூல் துறை

தமிழ்நாடு அரசு கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கைத்தறி மற்றும் துணிநூல் துறை செயல்பட்டு வருகிறது.

கைத்தறி, விசைத்தறி மற்றும் ஜவுளித் தொழில் தொடர்புடைய இதர பிரிவுகளின் இணக்கமான வளர்ச்சியை மேம்படுத்துவதுடன் கைத்தறி நெசவாளர்கள் நலனுக்காக செயல்படுவதே கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் முதன்மை நோக்கமாகும்.

கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநர், தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் 1983 மற்றும் விதிகள் 1988–ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில், மாநிலத்தில் உள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு “செயற்பதிவாளராக” செயல்பட்டு வருகிறார். மேலும், கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் “**மாநில துணிநூல் அதிகாரி**” யாகவும் செயல்படுவதால், நூற்பாலைகள் மற்றும் துணிநூல் ஆலைகள், கைத்தறி மற்றும் விசைத்தறி மற்றும் பின்னலாடை அலகுகள் ஆகியவை சீராக செயல்பட தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொதுவான பொறுப்பும் அவருக்கு உள்ளது. ஜவுளித் தொழில் சார்ந்த

அனைத்து பிரிவுகளுக்கும் தேவையான மூலப்பொருட்கள் தங்கு தடையின்றி கிடைப்பதை உறுதி செய்தல், நூல் மற்றும் துணிகளின் உற்பத்தியினை அதிகரித்து நியாய விலையில் கிடைக்கச் செய்தல் மற்றும் தயாரிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கு தேவையான சூழ்நிலையினை ஏற்படுத்துதல் போன்ற ஒட்டுமொத்தப் பொறுப்பும் இத்துறைக்குள்ளது. கூட்டுறவு அமைப்பின் கீழ் செயல்படும் நிறுவனங்களுக்கு தேவையான நூல் மற்றும் இதர மூலப்பொருட்கள் விநியோகம் மற்றும் சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் விற்பனைக்கு தயாராக உள்ள ஜவுளிகள் சொந்த விற்பனை நிலையங்கள், கோ-ஆப்டெக்ஸ் மற்றும் லூம்வேர்ல்டு விற்பனை நிலையங்கள், சங்க விற்பனை நிலையங்கள் மற்றும் பிற விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்ய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் கவனம் செலுத்தும் தனிப்பொறுப்பும் இத்துறைக்குள்ளது. நூல் கிடைப்பதை உறுதி செய்ய கூட்டுறவு நூற்பாலைகள் மூலம் நூல் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நெசவாளர்களின் சமூக, பொருளாதார வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் அவர்களின் நலனுக்கென பல்வேறு நலத்திட்டங்களையும், வளர்ச்சித் திட்டங்களையும் காஞ்சிபுரம், சேலம், வேலூார், திருவண்ணாமலை, கடலூர்,

கும்பகோணம், திருவாரூர், திருச்சிராப்பள்ளி, கரூர், திருச்செங்கோடு, திருவள்ளூர், ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை, பரமக்குடி, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் நாகர்கோவில் ஆகிய இடங்களில் அமைந்துள்ள 20 சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை இயக்குநர்கள் / உதவி இயக்குநர்கள் மூலமாக செயல்படுத்தும் பணியினையும் இத்துறை மேற்கொண்டு வருகிறது.

கைத்தறி மற்றும் துணிநூல்துறை, கைத்தறி நெசவாளர்கள் மற்றும் கைத்தறித் தொழிலை விசைத்தறியிலிருந்து பாதுகாக்கும் நோக்கத்துடன் கைத்தறி ரக ஒதுக்கீடு சட்டம் 1985-னை நடைமுறைப்படுத்தி, சென்னை, சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் அமைந்துள்ள துணை இயக்குநர் (அமலாக்கம்) மற்றும் உதவி அமலாக்க அலுவலர்கள் மூலமாக செயல்படுத்தி வருகிறது.

கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் செயல்பட்டு வரும் பல்வேறு நிறுவனங்களின் விவரம் பின்வருமாறு:-

- **1,139** கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்.

- 45 கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் நிர்வகிக்கப்படும் 99 சொந்த விற்பனை நிலையங்கள் மற்றும் 134 முகவர் விற்பனை நிலையங்கள்.
- 210 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்
- 6 கூட்டுறவு நூற்பாலைகள் (அண்ணா (தேனி), பாரதி (எட்டயபுரம்), புதுக்கோட்டை (அறந்தாங்கி), கன்னியாகுமரி (ஆரல்வாய்மொழி), கிருஷ்ணகிரி (ஊத்தங்கரை) மற்றும் இராமநாதபுரம் (அச்சங்குளம்).
- தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிட். (கோ–ஆப்டெக்ஸ்) சென்னை.
- தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிட், சென்னை.
- தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிட், கோயம்புத்தூர்.
- தமிழ்நாடு சரிகை நிறுவனம் லிட், காஞ்சிபுரம்.
- தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை லிட், ஈரோடு.


- தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் லிட், சென்னை.

## 4. துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் சிறப்புத் திட்டங்கள்

### 4.1 விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம்

தமிழக அரசால் செயல்படுத்தப்படும் மிக சீரிய திட்டங்களில் ஒன்றான விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம் **1983**–ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. பொங்கல் பண்டிகையின்போது கிராமப்புற மற்றும் நகர்புறங்களில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு வேட்டி சேலைகள் வழங்கும் பொருட்டு ஒவ்வொரு ஆண்டும் விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்திற்கு தேவையான மொத்த சேலைகள் மற்றும் வேட்டிகள் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. இத்திட்டம் **14,000** கைத்தறி நெசவாளர்கள் மற்றும் **54,000** விசைத்தறி தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலைவாய்ப்பு வழங்குகிறது. மேலும் இத்திட்டத்தின் மூலம் தமிழகத்திலுள்ள கிராமப்புற மற்றும் நகர்புறங்களில் வசிக்கும் **3.09** கோடி மக்களின் துணி தேவை பூர்த்தி செய்யப்படுகிறது.





விலையில்லா சேலைகள் மற்றும் வேட்டிகள்

அரசு இத்திட்டத்தினை பொங்கல் 2018க்கும் தொடர்ந்து செயல்படுத்தும் பொருட்டு 2017–2018ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.490.45 கோடி ஒதுக்கீடு செய்து வழங்கியது. இத்திட்டத்திற்கு தேவையான நூலினை கொள்முதல் செய்தல் மற்றும் வேட்டி சேலைகள் உற்பத்தி செய்யும் பணிகள் ஆகியவற்றை துறை மேற்கொண்டுள்ளது. உற்பத்தி செய்யப்பட்ட வேட்டி சேலைகளை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்தல் மற்றும் வருவாய்த்துறைக்கு அனுப்புதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள கொள்முதல் முகமை நிறுவனங்களாக கோ–ஆப்டெக்ஸ் மற்றும் தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் (TNTC) ஆகிய நிறுவனங்கள் நியமனம் செய்யப்பட்டது. பொங்கல் 2018ஆம் ஆண்டுக்கு பயனாளிகளுக்கு விநியோகம் செய்யும் பொருட்டு 154.72 இலட்சம் சேலைகள் மற்றும் 154.84

இலட்சம் வேட்டிகள் கீழ்க்கண்டவாறு உற்பத்தி செய்யப்பட்டு வருவாய்த் துறையிடம் வழங்கப்பட்டுள்ளது:-

| வ. எண் | இரகம் | எண்ணிக்கை (இலட்சத்தில்) | | உத்தேச மதிப்பு (ரூபாய் கோடியில்) | |
|---|---|---|---|---|---|
| | | சேலைகள் | வேட்டிகள் | சேலைகள் | வேட்டிகள் |
| 1 | கைத்தறி | 3.51 | 5.21 | 8.60 | 9.72 |
| 2 | பெடல்தறி | 35.11 | 11.32 | 68.19 | 16.19 |
| 3 | விசைத்தறி | 116.10 | 138.31 | 191.17 | 135.13 |
| மொத்தம் | | **154.72** | **154.84** | **267.96** | **161.04** |

இத்திட்டத்தினை பொங்கல் **2019–**க்கும் தொடர்ந்து செயல்படுத்துவதற்காக **2018–19**ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. **490.45** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**முதியோர் ஓய்வூதியதாரர்களுக்கான விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம்**

முதியோர் ஓய்வூதியதாரர்களுக்கு தீபாவளி **2017** மற்றும் பொங்கல் **2018**க்கு தேவையான சேலைகள் மற்றும் வேட்டிகள், கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், **2017–2018**ஆம் ஆண்டில் **40.60** இலட்சம் சேலைகள் மற்றும் **15.82** இலட்சம் வேட்டிகள் உற்பத்தி செய்யப்பட்டு,

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் மூலம் வருவாய்த் துறைக்கு வழங்கப்பட்டன.

**4.2 பள்ளி மாணாக்கர்களுக்கு விலையில்லா சீருடை வழங்குதல்**

பள்ளி மாணாக்கர்களுக்கு விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தினை **1985–1986**ஆம் ஆண்டு முதல் அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் மூலம் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத்திட்டத்தின் கீழ் பயன் பெறும் **1**ஆம் வகுப்பு முதல் **8**–ஆம் வகுப்பு வரை கல்விபயிலும் பள்ளி மாணாக்கர்கள் பயனடைந்து வருகின்றனர். மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பிற்கிணங்க இத்திட்டத்தின் கீழ் **2012–2013**ஆம் கல்வியாண்டிலிருந்து நான்கு இணை சீருடைகள் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கு தேவையான சீருடைத் துணி இரகங்களான டிரில், கேஸ்மெண்ட், துப்பட்டா, சர்ட்டிங் இரகங்கள் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள **10,000** கைத்தறி நெசவாளர்கள் மூலமும், **25,600** விசைத்தறி தொழிலாளர்கள் மூலமும் உற்பத்தி செய்யப்படுகிறது. இத்திட்டத்தினை செயல்படுத்த **2017–2018**ஆம் கல்வியாண்டில் அரசு ரூ.**282.59** கோடி நிதி ஒப்பளிப்பு செய்து

விடுவித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 2017–2018ஆம் கல்வியாண்டில் ரூ.282.59 கோடி மதிப்பிலான 498.81 இலட்சம் மீட்டர் சீருடைத்துணிகள் கீழ்கண்டவாறு உற்பத்தி செய்யப்பட்டு விநியோகம் செய்யப்பட்டுள்ளது:–

| வ. எண் | தறியின் வகை | சீருடைத்துணி அளவு (இலட்சம் மீட்டர்) | உற்பத்தி மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கைத்தறி | 6.88 | 6.42 |
| 2 | பெடல் தறி | 108.40 | 55.15 |
| 3 | விசைத்தறி | 383.53 | 221.02 |
| | மொத்தம் | 498.81 | 282.59 |

2018–2019ஆம் கல்வியாண்டில் விலையில்லா சீருடைத் திட்டத்தினை தொடர்ந்து செயல்டுபடுத்திட அனுமதி அளித்தும், 1ஆம் வகுப்பு முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு புதிய வண்ணத்திலான சீருடைகளை வழங்குவதற்கு ஒப்புதல் அளித்தும் அரசு ஆணை வழங்கியுள்ளது. இதன்படி 1ம் வகுப்பு முதல் 5ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு அக்வா க்ரீன் மற்றும் மெடோ க்ரீன் வண்ணத்திலும் 6ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு லைட் பிரவுன் மற்றும் மெரூன் வண்ணத்திலும் சீருடைகள் வழங்கப்பட உள்ளது.



**1–ஆம் வகுப்பு முதல் 5–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கான புதிய வண்ணச் சீருடை**



**6–ஆம் வகுப்பு முதல் 8–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கானவண்ணச் சீருடை**

அதனடிப்படையில், இத்திட்டத்திற்கு தேவையான சீருடைத் துணிகளை உற்பத்தி மேற்கொள்ள கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு கிரே துணி உற்பத்தி திட்டம் வழங்கப்பட்டு சீருடை உற்பத்தி மற்றும் பதனிடும் பணி நடைபெற்று வருகிறது. முதல் இணைக்கான 130 இலட்சம் மீட்டர் துணிகள் சமூகநலத்துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. இரண்டாவது இணைக்கான சீருடைத்துணிகள் ஜுன் திங்களில் விநியோகம் நிறைவடைய உள்ளது. மூன்றாம் மற்றும் நான்காம் இணைக்கான சீருடை துணிகள் செப்டம்பர் திங்களில் விநியோகம் செய்து முடிக்கப்பட உள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை ஆகிய துறைகளுக்கு தேவையான சீருடைத் துணிகளையும், கைத்தறி மற்றும் துணிநூல் துறையே வழங்கி வருகிறது.

2018–2019ஆம் கல்வி ஆண்டிற்கு பல்வேறு துறைகளுக்கான உத்தேச சீருடைத் துணி தேவை அளவு பின்வருமாறு உள்ளது:–

| துறையின் பெயர் | மொத்த சீருடை துணி தேவை (இலட்சம் மீட்டரில்) | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| சமூக நலத்துறை (ஆதி திராவிடர் நலத்துறை உட்பட) (1–ம் வகுப்பு முதல் 8–ஆம் வகுப்பு வரை) | 494.57 | 40,21,426 |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலத்துறை) (4–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை) | 3.54 | 19,003 |
| பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ( 4–வகுப்பு முதல் 10– ஆம் வகுப்பு வரை பயிலும் விடுதியில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் வகுப்பை சார்ந்த மாணவர்கள்) | 3.71 | 20,298 |
| ஆதிதிராவிடர் நலத்துறை (9–ம் வகுப்பு முதல் 12–ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள்) | 13.50 | 67,043 |
| மொத்தம் | 515.32 | 41,27,770 |

## 4.3 கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்குதல்

தமிழ்நாடு அரசு கைத்தறி நெசவாளர்களுக்கு 100 (இரு மாதங்களுக்கு ஒருமுறை) அலகுகள் விலையில்லா மின்சாரம் வழங்கும் திட்டத்தினை 22.05.2016 வரை செயல்படுத்தி வந்தது. கைத்தறி நெசவாளர்களுக்கான விலையில்லா மின்சாரத்தை இரு

மாதங்களுக்கு 100 அலகிலிருந்து 200 அலகுகள் வரை உயர்த்தி 23.05.2016 முதல் அரசு வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1,11,394 கைத்தறி நெசவாளர் குடும்பங்கள் பயனடைந்து வருகின்றன.

2017–2018 ஆம் ஆண்டு திருத்திய மதிப்பீட்டில் ரூ.2.88 கோடியினை அரசு ஒப்பளிப்பு செய்து விடுவித்துள்ளது.

இத்திட்டம் 2018–2019 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும், இதற்கென வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.4.84 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.4 விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மற்றும் மானியத்துடன் மின்சாரம் வழங்குதல்


விசைத்தறி நெசவாளர்களுக்கு 500 யூனிட் வரை (இரு மாதங்களுக்கு) விலையில்லா மின்சாரம் வழங்கும் திட்டம் 22.05.2016 வரை தமிழக அரசினால் வழங்கப்பட்டு வந்தது. தற்போது விசைத்தறி நெசவாளர்களுக்கான விலையில்லா மின்சாரத்தை இரு மாதங்களுக்கு 500 அலகிலிருந்து 750 அலகுகள் வரை நிரந்தர கட்டணம் உட்பட உயர்த்தி 23.05.2016 முதல் அரசு வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ், 1,24,877 விசைத்தறி அலகுகள்/கூடங்கள் பயனடைந்து வருகின்றன.

மேலும், கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு விசைத்தறிகளுக்கு மின்கட்டணத்தில் தள்ளுபடி வழங்கப்படுகிறது:-

| யூனிட் | ஒரு யூனிட் மின்கட்டணம் | ஒரு யூனிட்டுக்கு அரசு வழங்கும் மானியம் | ஒரு யூனிட்டுக்கு நெசவாளர்கள் செலுத்தும் மின்கட்டணம் |
|---|---|---|---|
| | (மதிப்பு ரூபாயில்) | | |
| 1–500 | 5.20 | 5.20 | இலவசம் |
| 501–750 | 5.75 | 5.75 | இலவசம் |
| 751–1000 | 5.75 | 3.45 | 2.30 |
| 1001–1500 | 5.75 | 2.30 | 3.45 |
| 1500க்கு மேல் | 5.75 | 1.15 | 4.60 |

விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் மற்றும் மின்கட்டணத்தில் தள்ளுபடி வழங்குவதற்காக **2017–2018** ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு ரூ.**387.09** கோடி அரசு ஒப்பளிப்பு செய்து விடுவித்துள்ளது.

இத்திட்டம் **2018–2019** ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும், இதற்கென வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.**436.44** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.




**கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்களுக்கு வழங்கப்படும் விலையில்லா மின்சாரம்**

## 4.5 தள்ளுபடி மானியத் திட்டம்


கைத்தறித் துணி வகைகளின் விற்பனையை மேம்படுத்த தமிழ்நாடு அரசு, தள்ளுபடி மானியம் வழங்கி வருகிறது. இத்திட்டம், தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தின் கைத்தறித் துணி விற்பனையை ஊக்குவிக்கவும், கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர் வேலை வாய்ப்பினை உறுதி செய்யவும் வழிவகை செய்கிறது. இத்திட்டம், தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் ஆகியவற்றின் துணித் தேக்கத்தினைக் குறைக்க உதவுவதோடு மட்டுமல்லாமல்,

கைத்தறித் தொழிலை ஆலை மற்றும் விசைத்தறி தொழில்களால் ஏற்படக்கூடிய பாதிப்பிலிருந்து பாதுகாக்கவும் வழிவகுக்கின்றது.

இத்திட்டத்தின் கீழ், தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தில் விற்பனை செய்யப்படும் கைத்தறித் துணிகளின் சில்லறை மற்றும் மொத்த விற்பனைக்கு ஆண்டு முழுவதும் 20 விழுக்காடு தள்ளுபடி மானியம் மாநில அரசால் வழங்கப்பட்டு வருகிறது. பருத்தி இரகங்களுக்கு உருப்படி ஒன்றுக்கு ரூ.100 அல்லது 20 விழுக்காடு, இதில் எது குறைவோ, அத்தொகை, அதேபோன்று பட்டு துணிகளுக்கு உருப்படி ஒன்றுக்கு ரூ.200 அல்லது 20 விழுக்காடு, இதில் எது குறைவோ, அத்தொகை தள்ளுபடி மானியமாக வழங்கப்படுகிறது.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 15ஆம் தேதி முதல் ஜனவரி 31ஆம் தேதி வரை 139 நாட்களுக்கு வழக்கமாக வழங்கப்படும் 20 விழுக்காடு தள்ளுபடியுடன், கூடுதலாக 10 விழுக்காடு சிறப்பு தள்ளுபடியும் சேர்த்து 30 விழுக்காடு தள்ளுபடி மானியம் வழங்கப்பட்டு வருகிறது. அதாவது, பருத்தி துணி வகைகளுக்கு, அதிகபட்சமாக 30 விழுக்காடு அல்லது ரூ.150 இதில் எது குறைவோ அத்தொகையும், பட்டு துணி வகைகளுக்கு

30 விழுக்காடு அல்லது ரூ.300 இதில் எது குறைவோ அத்தொகையும் தள்ளுபடி மானியமாக வழங்கப்பட்டு வருகிறது.




**கைத்தறி துணி விற்பனைக்கு வழங்கப்பட்ட தள்ளுபடி மானியம்**

இத்திட்டத்திற்கு, 2017–2018ஆம் ஆண்டின் திருத்திய வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டம் 2018–2019ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்கென ரூ.150 கோடி வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.6 வட்டி மானியத் திட்டம்


தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், ஒவ்வோர் ஆண்டும் நபார்டு வங்கியின் மறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் நடைமுறை மூலதனத்தைக் காசுக் கடனாகப் பெற்று வருகின்றன.

தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் காசுக்கடனுக்கு செலுத்த வேண்டிய வட்டிச் சுமையினைக் குறைக்கும் நோக்கத்திலும், கைத்தறி நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு வழங்கவும், "வட்டி மானியத் திட்டம்" தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2017–2018ஆம் ஆண்டில் 1,103 தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.443.07 கோடி காசுக்கடன் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

வட்டி மானியத் திட்டத்தின் கீழ், தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் காசுக்கடன் தொகைக்கு, மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளால் நிர்ணயிக்கப்படும் வட்டி விகிதத்தில், 4 விழுக்காடு வட்டித் தொகை மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. வட்டி மானியத் தொகையினை விரைவாக வழங்க வேண்டுமென்ற நோக்கத்தில், ஒப்பளிப்பு செய்யும் அதிகாரத்தை கைத்தறி மற்றும் துணிநூல் துறை இயக்குநருக்கு வழங்கியதோடு, மூன்று மாதத்திற்கு ஒருமுறை வழங்கப்பட்டு வந்த வட்டி மானியத் தொகை, நவம்பர் 2012 முதல் ஒவ்வொரு மாதமும் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2017–2018ஆம் ஆண்டில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.17.02 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.




**தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்ட வட்டி மானியம்**

இத்திட்டம், 2018–2019ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்கென 2018–2019ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.10.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.7 சிறந்த கைத்தறித் துணி ஏற்றுமதியாளர்கள் விருது

அயல்நாட்டு சந்தையில் கைத்தறித் துணி விற்பனையினை மேம்படுத்தவும், கைத்தறித் துணிகளின் ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கும், தமிழ்நாட்டிலுள்ள சிறந்த

கைத்தறித் துணி ஏற்றுமதியாளர்களுக்கு விருது வழங்கும் திட்டத்தை 1975 ஆம் ஆண்டு முதல் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டம் தனியார் ஏற்றுமதியாளர்கள், நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தையும் உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் மூன்று சிறந்த தனியார் ஏற்றுமதியாளரை தேர்வு செய்யப்பட்டு முதல் பரிசு, இரண்டாம் பரிசு மற்றும் மூன்றாம் பரிசுகளுக்கு கேடயம் மற்றும் சான்றிதழ் வழங்கப்படுகின்றன. மேற்படி, இம்மூன்று விருதுகளுடன் மேலுமொரு விருது ஏற்றுமதியில் சிறந்து விளங்கும் கூட்டுறவு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்திற்கென, அரசால் ஆண்டுதோறும் ரூ.1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 2016–2017 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்) மற்றும் தமிழகத்தைச் சார்ந்த சிறந்த மூன்று ஏற்றுமதியாளர்களுக்கும் கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளன.

2018–2019ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் இதற்கென ரூ.1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.8 புதிய வடிவமைப்பை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம்

பருத்தி மற்றும் பட்டு இரகங்களில் புதிய மற்றும் நவீன வடிவமைப்புகளை அறிமுகப்படுத்துவதை ஊக்குவிக்கும் நோக்கத்தில் மேற்படி இரகங்களில் புதிய வடிவமைப்புகளை உருவாக்கும் சிறந்த நெசவாளர்களுக்கு பரிசு வழங்கும் திட்டம் **1993** ஆம் ஆண்டு முதல் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ், பருத்தி மற்றும் பட்டுத் துணி இரகங்களில் சிறந்த வடிவமைப்புகளை உருவாக்கும் கைத்தறி நெசவாளர்களுக்கு முதல் பரிசாக ரூ.**5,000/–** மும், இரண்டாம் பரிசாக ரூ.**3000/–**மும், மூன்றாம் பரிசாக ரூ.**2000/–**மும் வழங்கப்பட்டு வருகிறது. **2017–2018**ஆம் ஆண்டு **60** சிறந்த கைத்தறி நெசவாளர்களுக்கு புதிய வடிவமைப்பிற்காக ரூ.**2.00** இலட்சம் வழங்கப்பட்டது.

இத்திட்டத்திற்கான செலவினம் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து மேற்கொள்ளப்படுகிறது.

இத்திட்டம் **2018–2019**ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.



விருது வென்ற கைத்தறி சேலை



விருது வென்ற கைத்தறி சேலை



காஞ்சிபுரத்தில் தேசிய விருது வென்ற நெசவாளர் மற்றொரு கைத்தறி நெசவாளருக்கு உத்திகளைபகிர்தல்

## 4.9 மாநில அளவில் சிறந்த நெசவாளர் விருது

**2013–2014**ஆம் ஆண்டு முதல் மாநில அரசு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாகவும் அதிக உற்பத்தி மற்றும் விற்பனையில் குறிப்பிடத்தக்க வகையில் பங்களிப்பினை நல்கிய சிறந்த நெசவாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ‘‘மாநில அளவிலான சிறந்த நெசவாளருக்கான விருதுடன்’’ ரூ.**1,00,000/–**

ரொக்கப்பரிசும், சான்றிதழும் வழங்கும் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது.

2017–2018ஆம் ஆண்டு சிறந்த நெசவாளர் விருது திருபுவனம் பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினருக்கு வழங்கப்பட்டது.

2018–2019ஆம் ஆண்டிலும் இத்திட்டமானது தொடர்ந்து செயல்படுத்த ஏதுவாக வரவு செலவு திட்டத்தில் ரூ.1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5 துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டங்கள்

### 5.1 தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டம்

மத்திய அரசு, 2017–2018 முதல் 2019–2020 வரையிலான ஆண்டுகளுக்கு தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்த திருத்தி அமைக்கப்பட்ட வழிகாட்டுதல்களை அளித்துள்ளது. மத்திய அரசு கூட்டுறவு சார்ந்த மற்றும் சாராத கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காக புதியதாக உருவாக்கப்பட்ட தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குழும வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது.

குழும வளர்ச்சித் திட்டமானது நெசவாளர்களின் குழுக்களை உருவாக்குவதை மையமாகக் கொண்டு செயல்பட்டுவருவதால் குழுக்கள் சுயமாக நிலைக்க முடியும். சந்தையின் தேவைக்கேற்ப அதிக அளவிலான கைத்தறி துணிகளை உற்பத்தி செய்யும் இடத்தில் குழுமங்கள் அமைக்கப்படலாம். ஒரு வட்டாரத்தில் கைத்தறிகளின் அளவினைக் கொண்டு வட்டார நிலை கைத்தறி குழுமங்கள் அமைக்கப்பட்டுவருகிறது. மத்திய அரசு, ஒரு வட்டார நிலை கைத்தறி குழுமத்தை அமைக்க அதிகபட்ச நிதியாக ரூ.200 இலட்சம் கீழ்க்குறிப்பிட்டுள்ள படி வழங்குகிறது:–

| **வ. எண்** | **இனம்** | **நிதியுதவி (ரூபாய் இலட்சத்தில்)** |
|---|---|---|
| 1 | தொழில்நுட்ப மேம்பாடு | 70.00 |
| 2 | பொது சேவை மையத்துடன் கூடிய பொது வசதி மையம் | 50.00 |
| 3 | திறன் மேம்பாடு | 35.00 |
| 4 | வடிவமைப்பாளரை நியமித்தல் | 15.00 |
| 5 | திட்ட மேலாண்மை செலவு | 15.00 |
| 6 | நூல் கிடங்கிற்கான திரண்ட தொகுப்பு நிதி | 5.00 |
| 7 | உற்பத்தி மேம்பாடு மற்றும் கணினி உதவியுடன் ஜவுளி வடிவமைப்பு (CATD) | 10.00 |
| **மொத்தம்** | | **200.00** |

இத்தொகை நீங்கலாக, சுத்திகரிப்பு ஆலையுடன் கூடிய மாவட்ட அளவிலான சாயச்சாலை அமைப்பதற்கு ரூ.50 இலட்சம் பெற்றுக் கொள்ளலாம்.

வட்டார நிலை கைத்தறி குழும செயல்பாட்டின் கீழ், தொடக்க நிலை ஆய்வு, கூர்ந்தாய்வு மேற்கொள்ளுதல், விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல், தறி தொழிலுக்கான தொழில்நுட்ப மேம்பாட்டு நடவடிக்கையின் கீழ், இருக்கும் தறிகளுக்கு மின் மோட்டாருடன் கூடிய ஜாக்கார்டு இழுவை இயந்திரம் வழங்குதல், கைத்தறிகளுக்கு தேவையான பல்வேறு வகையான கருவிகளை வழங்குதல், இரகம் மேம்படுத்துதல்/ இரகம் மாற்றம், ஜவுளி வடிவமைப்பாளர் மற்றும் விற்பனை செயல் அலுவலரை நியமித்தல், கணினி உதவியுடன் ஜவுளி வடிவமைப்பு (CATD) அமைத்தல், அட்டை துளையிடும் அமைப்பு வாங்குதல், நூல் கிடங்கு அமைக்க தேவையான (Corpus fund) திரண்ட தொகுப்பு நிதி, பொது சேவை மையத்துடனான பொது வசதி மையம் அமைத்தல்/சாயச்சாலை, தொழிற்கூடம் (workshed) கட்டுதல் போன்ற இனங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுகின்றது.

**“ஹத்கர்கா சம்வர்தன் சஹாயதா”** (Hathkargha Samvardhan Sahayata) திட்டத்தின் கீழ் தொழில்நுட்ப

மேம்பாடு இனத்தின் நிதியில் மத்திய அரசு 90 சதவிகிதமும் மீதமுள்ள 10 சதவிகிதம் பயனாளிகளால் அளிக்கப்படும்.

மத்திய அரசின் வழிகாட்டுதலின் படி அனுமதிக்கப்பட்ட உபகரணங்களின் விலை விவரங்கள் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு:-

| உபகரணங்கள் | | விலை |
|---|---|---|
| a) | நியூமேடிக் ஜக்கார்டு இயந்திரம் ( 4 கைத்தறிகளுக்கானது) | ரூ.40,000/– |
| b) | கைத்தறிகளில் மோட்டாருடன் கூடிய ஜக்கார்டு இயந்திரம் | ரூ.15,000/– |
| c) | கைத்தறிகளில் இயங்கும் டேக் அப் (Take up) மற்றும் லெட் ஆப் மோஷன் (Let Off Motion) (பொருத்தும் கட்டணம் உட்பட) | ரூ.5,000/– |
| d) | பல நாடா தாங்கும் பெட்டி | ரூ.3,000/– |
| e) | ஒன்றுக்கு மேற்பட்ட புட்டா நெய்யக்கூடிய இயந்திரம் | ரூ.7,000/– |
| f) | இரட்டை துணிளை நெசவு செய்யும் பொறிமுறை (பொருத்தும் கட்டணம் உட்பட) | ரூ.5,000/– |
| g) | முழுமையான தொகுப்புடன் கூடிய ஜக்கார்டு நிறுவுதல் | ரூ.15,000/– |
| h) | டாபி | ரூ.5,000/– |
| i) | அச்சு மற்றும் விழுதுகள், பாபின், நாடா (தொகுப்பு) | ரூ.4,000/– |
| j) | மேசைத் தறி | |
| a) | அ) 60 அங்குலத்திற்குள் | ரூ.25,000/– |
| b) | ஆ) 60 அங்குலத்திற்கு மேல் | ரூ.40,000/– |
| K) | Asu இயந்திரம் (கையால் சுத்துதல்) | ரூ.10,000/– வரை |
| l) | Asu இயந்திரம் (மோட்டார் இணைக்கப்பட்டது ) | ரூ.30,000/– வரை |

| உபகரணங்கள் | | விலை |
|---|---|---|
| m) | பாவு உருளை மற்றும் துணி உருளை | ரூ.5,000/– வரை |
| n) | பாவு சுற்றும் இயந்திரம் | ரூ.25,000/– வரை |
| o) | மின்மோட்டார் பொருத்திய பாவு சுற்றும் இயந்திரம் | ரூ.45,000/– வரை |
| p) | மின்மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரம் | ரூ.3,000/– வரை |
| q) | மின் மோட்டார் பொருத்திய தார் மற்றும் பாபின்/டப்பா சுற்றும் இயந்திரம் | ரூ.4,000/– வரை |
| | தெருவில் கஞ்சி போடுவதற்குரிய உபகரணங்கள் (தூரிகை, குச்சி, தெளிப்பான், முதலியவை) | ரூ.10,000/– வரை |
| r) | இதர இனங்கள் (நிபுணர்கள் குழு பரிந்துரைத்து கைத்தறி ஆணையர் ஒப்புதல் அளிப்பவை) | |



**விருதுநகர் மாபெரும் கைத்தறி குழுமத்தின் கீழ் வத்திராயிருப்பு வட்டாரத்தில், கட்டப்பட்டுள்ள தொழிற்கூடம்**

மத்திய அரசு, தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டம் / விரிவான கைத்தறி குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ், வட்டார நிலை கைத்தறி குழுமம் மற்றும் மாபெரும் கைத்தறி குழுமங்கள் அமைக்க **2015–2016** முதல் **2017–2018** வரையிலான ஆண்டுகளுக்கு கீழ்க்கண்டவாறு நிதி அனுமதிக்கப்பட்டு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது:–

**குழும திட்ட விவரம்**

**(ரூ. இலட்சத்தில்)**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | ஒப்பளிப்பு செய்யப்பட்ட மொத்த தொகை | இதுவரை செலவினம் மேற்கொள்ளப் பட்டது |
|---|---|---|---|---|
| I. | தேசிய கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் கீழ் 10 வட்டார நிலை கைத்தறி குழுமங்கள் | 1579.14 | 1480.36 | 609.00 |
| II. | திருச்சி மாபெரும் கைத்தறி குழுமத்தில், 22 வட்டார நிலை கைத்தறி குழுமங்கள் | 1678.78 | 1323.79 | 785.00 |
| III. | விருதுநகர் மாபெரும் கைத்தறி குழுமத்தில், 16 வட்டார நிலை கைத்தறி குழுமங்கள் | 1755.00 | 546.91 | 306.00 |
| IV. | தேசிய கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் கீழ் 4 புதிய வட்டார நிலை கைத்தறி குழுமங்கள் | 513.09 | 240.69 | 54.71 |
| | **பொது இனங்கள் (திருச்சி கைத்தறி பெருங்குழுமம்)** | | | |
| i) | தஞ்சாவூரில் நினைவு பரிசு விற்பனையகம் | 130.00 | 117.00 | 92.00 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | திட்ட மதிப்பீடு | ஒப்பளிப்பு செய்யப்பட்ட மொத்த தொகை | இதுவரை செலவினம் மேற்கொள்ளப் பட்டது |
|---|---|---|---|---|
| ii) | திருபுவனத்தில் விற்பனை வளாகம் | 600.00 | 48.00 | 0 |
| iii) | சுத்திகரிப்பு ஆலையுடன் கூடிய மாவட்ட அளவிலான 3 சாயச்சாலைகள் | 150.00 | 75.00 | 28.77 |
| iv) | சந்தை மேம்பாடு | 200.00 | 62.80 | 59.95 |
| | **பொது இனங்கள் (விருதுநகர் கைத்தறி பெருங்குழுமம்)** | | | |
| i) | காரைக்குடியில் நினைவு பரிசு விற்பனையகம் | 183.00 | 73.20 | 14.50 |
| ii) | மதுரை மற்றும் திருநெல்வேலியில் விற்பனை வளாகம் | 800.36 | 130.00 | 10.00 |
| iii) | சுத்திகரிப்பு ஆலையுடன் கூடிய மாவட்ட அளவிலான 5 சாயச்சாலைகள் | 250.00 | 125.00 | 45.57 |
| iv) | சந்தை மேம்பாடு | 734.54 | 584.89 | 533.00 |
| v) | பரமக்குடியில் வடிவமைப்பகம் | 25.00 | 18.00 | 18.00 |
| vi) | பேஷன் என்.ஐ..எ.ஃப்.டி /என்.ஐ.டி பயன்படுத்துவதன் மூலம் கைத்தறியை இணைத்தல் | 140.00 | 0 | 0 |
| | **மொத்தம்** | **8738.91** | **4825.64** | **2576.50** |

மத்திய அரசால் அனுமதி வழங்கப்பட்ட திட்டத்தின் கீழ், வட்டார நிலை கைத்தறி குழுமங்களை கீழ்க்கண்டவாறு தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது:–

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் | வட்டார நிலை கைத்தறி குழுமத்தின் பெயர் | மத்திய அரசால் ஒப்புதல் செய்யப்பட்ட மொத்த திட்ட தொகை | விடுவிக்கப்பட்ட மத்திய அரசின் பங்கு தொகை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **I** | **10 வட்டார நிலை கைத்தறி குழுமம்** | | | |
| 1 | மேற்கு ஆரணி | 147.08 | 139.89 | 678 |
| 2 | பல்லடம் | 181.50 | 169.20 | 844 |
| 3 | காஞ்சிபுரம் | 162.33 | 153.16 | 810 |
| 4 | காரமடை – I | 181.40 | 169.39 | 910 |
| 5 | அயோத்தியாபட்டினம் | 171.24 | 160.68 | 954 |
| 6 | சென்னிமலை | 170.74 | 159.44 | 877 |
| 7 | திருப்பூர் | 181.50 | 169.44 | 874 |
| 8 | பரமக்குடி | 123.25 | 115.59 | 1189 |
| 9 | குருத்தங்கோடு | 78.70 | 72.95 | 343 |
| 10 | பொள்ளாச்சி வடக்கு | 181.40 | 170.62 | 912 |
| **II** | **திருச்சி மாபெரும் கைத்தறி குழுமம்** | | | |
| 11 | திருவிடைமருதூர் – I | 130.53 | 57.24 | 407 |
| 12 | திருவிடைமருதூர் – II | 64.29 | 58.00 | 811 |
| 13 | திருவிடைமருதூர் – III | 94.73 | 85.41 | 1020 |
| 14 | திருப்பானந்தாள் | 125.33 | 54.16 | 363 |
| 15 | அம்மாபேட்டை | 116.35 | 50.12 | 292 |
| 16 | செயங்கொண்டம் | 60.62 | 54.99 | 841 |
| 17 | ஆண்டிமடம் | 126.96 | 54.90 | 445 |
| 18 | ட்டி.பாலூர் | 18.74 | 17.03 | 239 |
| 19 | செந்துரை | 21.60 | 19.58 | 279 |
| 20 | தாத்தையங்கார்பேட்டை | 126.88 | 55.60 | 239 |
| 21 | முசிறி | 12.79 | 11.45 | 71 |
| 22 | தொட்டியம் | 19.65 | 17.60 | 423 |
| 23 | கரூர் – I | 129.37 | 56.70 | 243 |
| 24 | கரூர் – II | 50.82 | 46.23 | 300 |
| 25 | தாந்தோணி | 45.28 | 40.77 | 272 |

| வ. எண் | வட்டார நிலை கைத்தறி குழுமத்தின் பெயர் | மத்திய அரசால் ஒப்புதல் செய்யப்பட்ட மொத்த திட்ட தொகை | விடுவிக்கப்பட்ட மத்திய அரசின் பங்கு தொகை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 26 | அரவக்குறிச்சி | 36.81 | 33.14 | 246 |
| 27 | பழநி | 33.49 | 30.15 | 661 |
| 28 | திண்டுக்கல் – I | 89.99 | 79.99 | 2273 |
| 29 | திண்டுக்கல் – II | 90.24 | 80.22 | 2129 |
| 30 | ஆத்தூர் | 91.07 | 81.28 | 1673 |
| 31 | தொப்பம்பட்டி | 123.07 | 53.25 | 357 |
| 32 | மன்னார்குடி | 70.16 | 63.56 | 669 |
| **III** | **விருதுநகர் மாபெரும் கைத்தறி குழுமம்** | | | |
| 33 | அருப்புக்கோட்டை வட்டாரம் – I | 105.00 | 45.00 | 220 |
| 34 | அருப்புக்கோட்டை வட்டாரம் – II | 105.00 | 45.00 | 220 |
| 35 | அருப்புக்கோட்டை வட்டாரம் – III | 105.00 | 45.00 | 220 |
| 36 | அருப்புக்கோட்டை வட்டாரம் – IV | 105.00 | 45.00 | 220 |
| 37 | ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டாரம் | 105.00 | 45.00 | 220 |
| 38 | இராஜபாளையம் வட்டாரம் – I | 105.00 | 45.00 | 220 |
| 39 | இராஜபாளையம் வட்டாரம் – II | 105.00 | 45.00 | 220 |
| 40 | வத்திராயிருப்பு வட்டாரம் | 105.00 | 45.00 | 220 |
| 41 | சங்கரன்கோவில் வட்டாரம் | 105.00 | 45.00 | 220 |
| 42 | பரமக்குடி வட்டாரம் | 105.00 | 45.00 | 220 |
| 43 | காரைக்குடி வட்டாரம் | 105.00 | 45.00 | 220 |

| வ. எண் | வட்டார நிலை கைத்தறி குழுமத்தின் பெயர் | மத்திய அரசால் ஒப்புதல் செய்யப்பட்ட மொத்த திட்ட தொகை | விடுவிக்கப்பட்ட மத்திய அரசின் பங்கு தொகை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 44 | வத்திராயிருப்பு வட்டாரம் – III | 120.00 | 8.58 | 40 |
| 45 | அருப்புக்கோட்டை வட்டாரம் –V | 120.00 | 8.58 | 40 |
| 46 | வத்திராயிருப்பு வட்டாரம் – II | 120.00 | 8.58 | 40 |
| 47 | பரமக்குடி வட்டாரம் – III | 120.00 | 8.58 | 40 |
| 48 | பரமக்குடி வட்டாரம் – II | 120.00 | 8.58 | 40 |
| **IV** | **4 புதிய வட்டார நிலை கைத்தறி குழுமம்** | | | |
| 49 | ஆரணி – I | 167.84 | 80.47 | 703 |
| 50 | ஆரணி – II | 117.84 | 55.47 | 410 |
| 51 | நங்கவள்ளி | 120.38 | 54.20 | 432 |
| 52 | காஞ்சிபுரம் – II | 107.03 | 50.55 | 412 |
| **மொத்தம்** | | **5526.00** | **3360.32** | **27221** |

மேற்கண்ட வட்டார நிலை கைத்தறி குழுமத்தில் கீழ்க்கண்ட விவரங்கள் படி இனங்கள் வாரியாக தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது :–

| வ. எண் | இனங்கள் | மத்திய அரசால் ஒப்புதல் செய்யப்பட்ட தொகை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| தொழில்நுட்ப மேம்பாடு | | | |
| 1 | மோட்டார் பொருத்திய ஜக்கார்டு | 277.10 | 2070 |
| 2 | இருக்கும் கைத்தறிகளில் ஜக்கார்டு நிறுவுதல் | 114.60 | 1864 |
| 3 | இருக்கும் கைத்தறிகளில் டாபி நிறுவுதல் | 20.20 | 449 |
| 4 | அச்சு மற்றும் விழுதுகள் | 312.92 | 9091 |
| 5 | மேசைத் தறி | | |
| | அ) 60 அங்குலத்திற்குள் | 221.99 | 1001 |
| | ஆ) 60 அங்குலத்திற்கு மேல் | 232.41 | 574 |
| 6 | தறிக்கூடம் | 425.39 | 632 |
| 7 | விளக்குகள் | 153.44 | 4598 |
| 8 | கைத்தறிகளில் இயங்கும் டேக் அப் மற்றும் லெட் ஆப் மோஷன் | 11.70 | 260 |
| 9 | பாவு உருளை மற்றும் துணி உருளை | 64.95 | 1475 |
| 10 | ஒன்றுக்கு மேற்பட்ட புட்டா நெய்யக்கூடிய இயந்திரம் | 13.72 | 186 |
| 11 | இதர இனங்கள் | 12.02 | 615 |
| 12 | மின்மோட்டார் பொருத்திய தார் சுற்றும் இயந்திரம் | 12.15 | 270 |
| 13 | மின்மோட்டார் பொருத்திய தார் மற்றும் பாபின்/டப்பா சுற்றும் இயந்திரம் | 2.84 | 79 |
| 14 | மின்மோட்டார் பொருத்திய பாவு சுற்றும் இயந்திரம் | 27.98 | 110 |
| **மொத்தம்** | | **1903.41** | **23274** |

**பல்வேறு வட்டார நிலை கைத்தறி குழுமத்தில் 25 பொதுச் சேவை மையங்கள் (Common Service Center) அமைத்தல்**

**2017–2018** ஆம் ஆண்டு அறிவிப்பின்படி, மத்திய அரசு வட்டார நிலை கைத்தறி குழுமங்களில் உள்ள **25** இடங்களில் பொது சேவை மையங்கள் அமைப்பதற்கு தலா ரூ.**3.78** இலட்சம் மதிப்பீட்டில் மொத்தம் ரூ.**94.50** இலட்சம் ஒப்பளிப்பு அளித்துள்ளது. மேலும், மத்திய அரசின் அங்கீகாரம் பெற்ற முகமையான M/s CSC மின் ஆளுமை சேவை இந்திய நிறுவனத்திற்கு முதல் தவணைத் தொகையாக ரூ.**35.50** இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு தேர்வு செய்யப்பட்ட கைத்தறி குழுமங்களின் பின்வரும் இடங்களில் பொது சேவை மையம் அமைக்கும் பணிகளை முகமை நிறுவனம் துவக்கியுள்ளது:–

| வ. எண் | பொது சேவை மையங்களின் பெயர் | மாவட்டத்தின் பெயர் |
|---|---|---|
| 1 | பல்லடம் வட்டாரம் | திருப்பூர் |
| 2 | காஞ்சிபுரம் வட்டாரம் | காஞ்சிபுரம் |
| 3 | காரைமடை –I வட்டாரம் | கோயம்புத்தூர் |
| 4 | அயோத்தியாப்பட்டினம் வட்டாரம் | சேலம் |
| 5 | சென்னிமலை வட்டாரம் | ஈரோடு |
| 6 | திருப்பூர் வட்டாரம் | திருப்பூர் |
| 7 | பொள்ளாச்சி வடக்கு வட்டாரம் | கோயம்புத்தூர் |
| 8 | திருவிடைமருதூர் – II | தஞ்சாவூர் |
| 9 | திருப்பானந்தால் | |

| வ. எண் | பொது சேவை மையங்களின் பெயர் | மாவட்டத்தின் பெயர் |
|---|---|---|
| 10 | அம்மாபேட்டை | |
| 11 | ஆண்டிமடம் | |
| 12 | தொப்பம்பட்டி | திண்டுக்கல் |
| 13 | கரூர் வட்டாரம் – I | கரூர் |
| 14 | தாத்தையங்கார்பேட்டை | திருச்சி |
| 15 | அருப்புக்கோட்டை வட்டாரம் – I | விருதுநகர் |
| 16 | அருப்புக்கோட்டை வட்டாரம் – II | |
| 17 | அருப்புக்கோட்டை வட்டாரம் – III | |
| 18 | அருப்புக்கோட்டை வட்டாரம் – IV | |
| 19 | ஸ்ரீவில்லிப்புத்தூர் வட்டாரம் | |
| 20 | இராஜபாளையம் வட்டாரம் – I | |
| 21 | இராஜபாளையம் வட்டாரம் – II | |
| 22 | வத்திராயிருப்பு வட்டாரம் | |
| 23 | சங்கரன்கோவில் வட்டாரம் | திருநெல்வேலி |
| 24 | பரமக்குடி வட்டாரம் | இராமநாதபுரம் |
| 25 | காரைக்குடி வட்டாரம் | சிவகங்கை |

**மதுரை மற்றும் திருநெல்வேலியில் வணிக வளாகம் (Marketing Complex) அமைத்தல்**

**2017–2018** ஆம் ஆண்டு அறிவிப்பு படி, மத்திய அரசு, விரிவான கைத்தறி குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விருதுநகர் மாபெரும் கைத்தறி குழுமத்தில், மதுரை மற்றும் திருநெல்வேலியில் வணிக வளாகம் அமைக்க மொத்த திட்ட தொகையான ரூ.**800.36** இலட்சத்தில் மத்திய அரசின் பங்காக ரூ.**647.76** இலட்சமும் மற்றும் மாநில அரசு/ பங்குதாரர்/

பயனாளிகளின் பங்காக ரூ.152.58 இலட்சமும் ஒப்புதல் அளித்துள்ளது. கோ–ஆப்டெக்ஸ், சென்னை முகமை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. மதுரை மற்றும் திருநெல்வேலியில் வணிக வளாக கட்டுவது தொடர்பான பூர்வாங்க பணிகள் நடைபெற்று வருகிறது.

**பரமக்குடியில் ஒரு வடிவமைப்பு மையம் (Design Studio) அமைத்தல்**

2017–2018 ஆம் ஆண்டு அறிவிப்பின் படி, மத்திய அரசு, விரிவான கைத்தறி குழும வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விருதுநகர் மாபெரும் கைத்தறி குழுமத்தில் பரமக்குடியில் ஒரு வடிவமைப்பு மையம் அமைக்க மொத்த திட்ட தொகை ரூ.25 இலட்சத்தில், செயல்படுத்த ஒப்புதல் அளித்துள்ளது. இதனைத் தொடர்ந்து தேவையான உபகரணங்களுடன் பரமக்குடியில் வடிவமைப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளது.




பரமக்குடியில் உள்ள வடிவமைப்பு அரங்கு





பரமக்குடியில் உள்ள வடிவமைப்பு அரங்கின் உட்புறத் தோற்றம்

குழும வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்த, **2018–2019**ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.2 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.2 தேசிய கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் கீழ் விற்பனை ஊக்குவிப்பு திட்டம்

விற்பனை ஊக்குவிப்பு திட்டம் தேசிய கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் ஒரு அங்கமாகும். இத்திட்டத்தில், கைத்தறி நிறுவனங்களின் (தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம்) துணி வகைகளின் விற்பனையினை மேம்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதியுதவி அளிக்கப் படுகிறது. இத்திட்டம் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களை வெளிச்சந்தையில் போட்டியிட்டு நிலைத்திட உதவுகிறது. மேலும் இத்திட்டம், கைத்தறி துணி வகைகளின் விலையினைக் குறைத்திடவும், கைத்தறி துணி வகைகளின் சந்தைப்படுத்தும் நடவடிக்கைகளை மேம்படுத்தவும் உதவுகிறது.

இத்திட்டத்திற்கான மொத்த நிதி அளவு , கடந்த **3** ஆண்டுகால சராசரி விற்பனைத் தொகையில், **10** விழுக்காடு ஆகும். இத்தொகையை மைய மற்றும் மாநில அரசுகள் **50** : 50 அடிப்படையில் பகிர்ந்தளிக்கின்றன.

கடந்த **3** ஆண்டுகளில், விற்பனை ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் நிறுவனத்திற்கும் (கோ–ஆப்டெக்ஸ்) பின்வருமாறு தொகை விடுவிக்கப்பட்டுள்ளது:–

**(ரூ.கோடியில்)**

<table>
<tr><th>வ. எண்</th><th>ஆண்டு</th><th>கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை</th><th>விடுவிக்கப்பட்ட மாநில அரசின் பங்கான விற்பனை ஊக்குவிப்பு தொகை</th><th>விடுவிக்கப்பட்ட மத்திய அரசின் பங்கான விற்பனை ஊக்குவிப்பு தொகை</th></tr>
<tr><td>1</td><td>2014–15</td><td>872</td><td>40.85</td><td>40.85</td></tr>
<tr><td>2</td><td>2015–16</td><td>862</td><td>44.53</td><td>44.53</td></tr>
<tr><td>3</td><td>2016–17</td><td>868</td><td>49.01</td><td rowspan="2">மத்திய அரசால் விடுவிக்கப்பட வேண்டும்</td></tr>
<tr><td>4</td><td>2017–18</td><td>282</td><td>2.35</td></tr>
</table>

தேசிய கைத்தறி வளர்ச்சி திட்டத்தினை, ஏப்ரல் 2017 முதல் மார்ச் 2020 வரையிலான காலத்திற்கு செயல்படுத்துவதற்கான திட்ட வழிமுறைகள் மத்திய அரசால் திருத்தியமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் திருத்திய திட்ட வழிமுறைகளின்படி, சந்தைப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ள அவசியம் நிதி உதவி தேவைப்படும் சங்கங்களுக்கு மட்டுமே விற்பனை ஊக்குவிப்பு தொகை வழங்கப்படும். மேலும், அதிகபட்சமாக 3 ஆண்டுகளுக்கு மட்டுமே விற்பனை ஊக்குவிப்பு தொகை வழங்கப்படும். எனவே, விற்பனை ஊக்குவிப்பு தொகை பெற்ற சங்கங்கள், 3 ஆண்டுகளுக்கு பின் சந்தைப்படுத்தும் நடவடிக்கைகளை சொந்தமாக மேற்கொண்டு நிலைத்திட இயலும். திருத்திய திட்ட வழிமுறைகளின்படி, ஒர் ஆண்டில் உச்சவரம்பாக ரூ.30.00 லட்சம் வரை விற்பனை மேற்கொண்ட சங்கங்கள் மட்டுமே விற்பனை ஊக்குவிப்பு தொகை பெற தகுதி உடையவை ஆகும்.

இத்திட்டத்திற்கு, 2018–2019 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், ரூ.30 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5.3 கைத்தறித் துணிகளை சந்தைப்படுத்துவதற்கான நிதியுதவி

ஏப்ரல் 2017 முதல் மார்ச் 2020 வரையிலான காலத்திற்கு மத்திய அரசு தேசிய கைத்தறி வளர்ச்சித் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. உள்நாடு மற்றும் வெளிநாட்டு சந்தை அமைப்புகளில், விற்பனை வழிமுறைகளை மேம்படுத்தவும், வளர்ச்சியடையச் செய்யவும் ஒருங்கிணைக்கப்பட்ட சூழ்நிலைகளைக் கொண்டு ஒட்டு மொத்த உன்னத நிலையினை உருவாக்குவதே கைத்தறி விற்பனைக்கான நிதியுதவியின் முக்கிய குறிக்கோளாகும். கைத்தறி விற்பனைக்கான நிதியுதவி இனத்தின் உட்கூறுகள் பின்வருமாறு: -

1. உள்நாட்டு சந்தையினை மேம்படுத்துதல்
2. விற்பனை உட்கட்டமைப்பு வசதி ஏற்படுத்துதல்
3. சந்தை அணுகுமுறை உருவாக்குதல்
4. கைத்தறி ஏற்றுமதி அபிவிருத்தி செய்தல்

உள்நாட்டு சந்தையினை மேம்படுத்துதல் என்ற இனத்தின் கீழ், தேசிய அளவிலான கைத்தறி கண்காட்சிகள், சிறப்பு கைத்தறி கண்காட்சிகள், மாவட்ட அளவிலான கண்காட்சிகள்

ஆகியவை நடத்தப்படுகின்றன. இக்கண்காட்சிகள் நடத்துவதற்கு, வழங்கப்படும் நிதியுதவி விபரம் பின்வருமாறு :–

| வ எண் | கண்காட்சியின் விபரம் | வழங்கப்படும் நிதியுதவி (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | தேசிய அளவிலான கைத்தறி கண்காட்சி | 45.00 |
| 2 | சிறப்பு கைத்தறி கண்காட்சி | 12.00 |
| 3 | மாவட்ட அளவிலான கண்காட்சி | 3.50 |

இத்திட்டத்தின் கீழ் நடைபெறும் கண்காட்சிகளுக்கு உட்கட்டமைப்பு, அரங்கு வாடகை, மின் கட்டணம், விளம்பரம் போன்ற இனங்களுக்கு மத்திய அரசால் முழுவதுமாக நிதியுதவி அளிக்கப்படுகிறது.

**2017–2018** ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட ஒரு தேசிய அளவிலான கைத்தறி கண்காட்சியும், ஆறு சிறப்பு கைத்தறி கண்காட்சிகளுக்கான விபரங்கள் பின்வருமாறு:-

| வ. எண் | கண்காட்சியின் வகை மற்றும் இடம் | | மத்திய அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை | விற்பனை விபரம் |
|---|---|---|---|---|
| | கண்காட்சி நடைபெற்ற இடம் | கண்காட்சியின் வகை | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. | சென்னை | தேசிய கைத்தறி கண்காட்சி | 45.00 | 127.16 |
| 2. | கும்பகோணம் | சிறப்பு கைத்தறி கண்காட்சி | 12.00 | 48.70 |
| 3. | திண்டுக்கல் | சிறப்பு கைத்தறி கண்காட்சி | 12.00 | 31.65 |
| 4. | திருச்சி | சிறப்பு கைத்தறி கண்காட்சி | 12.00 | 39.13 |
| 5. | மதுரை | சிறப்பு கைத்தறி கண்காட்சி | 12.00 | 45.39 |
| 6. | நாகர்கோவில் | சிறப்பு கைத்தறி கண்காட்சி | 12.00 | 30.68 |
| 7. | கோயம்புத்தூர் | சிறப்பு கைத்தறி கண்காட்சி | 12.00 | 35.34 |
| **மொத்தம்** | | | **117.00** | **358.05** |

**2018–2019** ஆம் ஆண்டில், ஒரு தேசிய அளவிலான கைத்தறி கண்காட்சியும், ஆறு சிறப்பு கைத்தறி கண்காட்சிகளும் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.




**சிறப்பு கைத்தறி கண்காட்சி, கோயம்புத்தூர்**



**சிறப்பு கைத்தறி கண்காட்சி, திண்டுக்கல்**

### 5.4 பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம், திருப்பூர்

திருப்பூர் ஜவுளி குழுமம், பின்னலாடையின் தலைநகரம் என அறியப்படுவதுடன் நாட்டின் பின்னலாடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முக்கியத்துவம் வாய்ந்த மையமாகவும், உலகிலுள்ள அனைத்து வகையான முதன்மை ஜவுளி பிராண்டுகளின் தேவைகளையும் பூர்த்தி செய்தும் வருகின்றது. இந்த ஆயத்த ஆடை நிறுவனங்களின் பதனிடும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு, 742 சாயச்சாலைகள் ஒரு இலட்சத்திற்கும் அதிகமான நபர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குவதோடு, ஜவுளி மதிப்பு தொடரில் மிகவும் முக்கிய பங்காற்றி வருகிறது.

ஜவுளி சாயத் தொழில் வளர்ச்சியின் காரணமாக நொய்யல் ஆறு மாசு அடைந்து, விவசாயத்தினையும் கடுமையாக பாதித்துள்ளது. பொருள் சார்ந்த வேதியியல் அடிப்படையில் வழக்கமான முறையில் அமைக்கப்பட்ட சில பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களால் இந்த பிரச்சனைக்கு திறம்பட தீர்வுகாண இயலவில்லை. எனவே, ஜவுளி நிறுவனங்கள் எதிர் சவ்வூடு முறையில் (R.O.- Reverse Osmosis) 18 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை ரூ.500.36 கோடி அளவிற்கு கடன் பெற்று அமைக்க திட்டமிட்டன.

பூஜ்ய நிலை கழிவு நீர் வெளியேற்றம் முறை ஜவுளித் தொழிலில் முதன் முறையாக செயல்படுத்தப்பட்டபோது, அனுபவமின்மை மற்றும் போதிய நிபுணத்துவமின்மை காரணமாக, பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் பூஜ்ய நிலை கழிவு நீரை வெளியேற்ற இயலவில்லை. அதன் காரணமாக ஜனவரி 2011 –இல் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்றம் அனைத்து பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களையும் மூடும்படி ஆணையிட்டது. இத்தீர்ப்பின் காரணமாக பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஏறக்குறைய ஒன்றரை ஆண்டு காலம் மூடப்பட்டது.

திருப்பூர் சாயச்சாலைகள் உரிமையாளர்கள் சங்கம், பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களின் நிதிச் சுமையைக் குறைக்கவும், பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை மீண்டும் திறக்கவும் அரசின் உதவியினைக் கோரியது. அக்கோரிக்கையின் அடிப்படையில், மத்திய மற்றும் மாநில அரசு ரூ. 300 கோடியினை மானியமாக 18 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்கியது. இதில், மத்திய அரசின் பங்கு ரூ.187.50 கோடியும், மாநில அரசின் பங்கு ரூ.112.50 கோடியும் ஆகும். ஒப்பளிப்பு செய்யப்பட்ட மான்யத்தொகை 18 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் வங்கியில் பெற்ற கடனுக்கான

அசல் நிலுவைத் தொகையினை நேர் செய்ய வங்கிகளுக்கு விடுவிக்கப்பட்டது.

பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களில் பூஜ்ய நிலை கழிவு நீர் வெளியேற்றும் பணியினை நானோ அல்லது பிரைன் மறுபயன்பாடு தொழிற்நுட்பம் கொண்டு மேற்கொள்வதற்கும், கூடுதல் கருவிகளை கொள்முதல் செய்து நிறுவுவதற்கும் அரசினால் ரூ.203.29 கோடி தொகை வட்டியில்லா கடனாக ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்தொகையானது மேற்படி 18 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கான திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.271.05 கோடியில் 75 விழுக்காடு தொகை ஆகும்.

இதனையடுத்து இந்த வாய்ப்பினை பயன்படுத்தி, தொழில் நிலையங்களில் ஏற்கனவே உள்ள பூஜ்ய நிலை கழிவு நீர் வெளியேற்றத்திற்கான தொழில் நுட்பத்தோடு இணைப்பு இயந்திரங்களை நிறுவியும்/மேம்படுத்தியும் பயனடைந்தன. இதுவரை ரூ.203.29 கோடி அரசால் விடுவிக்கப்பட்டு, அதில் ரூ.168.34 கோடி 18 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஒப்பளிப்பு செய்யப்பட்ட மானியம் மற்றும் வட்டியில்லா கடன் தொகை விபரம் பின்வருமாறு:-

| வ. எண். | பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பெயர் | சுத்திகரிப்பு நிலையத்தின் அலகுகள் | திட்ட மதிப்பீடு (ரூபாய் கோடியில்) | வெளி யேற்றப் படும் கழிவுநீர் அளவு (MLD) | மைய, மாநில அரசுகள் வழங்கிய மானியம் | | | மாநில அரசு ஒப்பளிப்பு செய்துள்ள வட்டியில்லா கடன் தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மைய அரசின் மானியத் தொகை | மாநில அரசின் மானியத் தொகை | மொத்த மானியத் தொகை | |
| | | | | | (ரூபாய் கோடியில்) | | | |
| 1 | வீரபாண்டி | 72 | 74.86 | 12.00 | 20.04 | 12.02 | 32.06 | 23.14 |
| 2 | அங்கேரி பாளையம் | 77 | 60.72 | 10.00 | 15.42 | 9.25 | 24.67 | 18.10 |
| 3 | பார்க் | 3 | 26.59 | 2.00 | 6.97 | 4.18 | 11.15 | 4.75 |
| 4 | மண்ணரை | 28 | 28.74 | 4.20 | 8.28 | 4.97 | 13.25 | 8.32 |
| 5 | எஸ். பெரியபாளையம் | 7 | 14.15 | 1.50 | 3.94 | 2.36 | 6.30 | 7.52 |
| 6 | சிறுபூலுவாப்பட்டி | 24 | 53.01 | 5.00 | 13.05 | 7.83 | 20.88 | 11.94 |
| 7 | காரைப்புதூர் | 25 | 33.00 | 4.50 | 7.64 | 4.59 | 12.23 | 12.84 |
| 8 | ஆண்டிப் பாளையம் | 20 | 23.00 | 4.50 | 5.03 | 3.02 | 8.05 | 6.35 |
| 9 | வேட்டுவபாளையம் | 9 | 6.90 | 1.50 | 1.47 | 0.88 | 2.35 | 3.31 |
| நொய்யல் (SPV) | | | | | 50.89 | 30.54 | 81.43 | 0 |
| 10 | அருள்புரம் | 15 | 46.09 | 5.50 | 0 | 0 | 0 | 11.33 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 11 | கள்ளிக்காடு | 12 | 22.08 | 3.00 | 0 | 0 | 0 | 4.87 |
| 12 | முருகம் பாளையம் | 67 | 89.22 | 11.00 | 0 | 0 | 0 | 22.65 |
| 13 | ராயபுரம் | 25 | 46.46 | 5.50 | 0 | 0 | 0 | 11.33 |
| மங்களம் ஈஸ்டர்ன் (SPV) | | | | | 22.43 | 13.46 | 35.89 | 0 |
| 14 | மங்களம் | 17 | 35.49 | 4.00 | 0 | 0 | 0 | 8.90 |
| 15 | ஈஸ்டர்ன் | 27 | 54.82 | 5.80 | 0 | 0 | 0 | 11.09 |
| திருப்பூர் தொழிலியல் (SPV) | | | | | 32.34 | 19.40 | 51.74 | 0 |
| 16 | அ) சின்னக்கரை | 29 | 53.64 | 8.00 | 0 | 0 | 0 | 16.47 |
| 17 | ஆ) காசிப்பாளையம் | 14 | 33.84 | 4.40 | 0 | 0 | 0 | 9.06 |
| 18 | இ) குண்ணங்கல் பாளையம் | 19 | 40.23 | 5.50 | 0 | 0 | 0 | 11.32 |
| மொத்தம் | | 490 | 742.84 | 97.90 | 187.50 | 112.50 | 300.00 | 203.29 |

நீண்ட காலம் மூடிய காரணத்தால், பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களால் வங்கிகளின் கடன் நிலுவைத் தொகையினை (அசல் மற்றும் வட்டித்தொகை) செலுத்த இயலாத நிலை ஏற்பட்டதால், திருப்பூர் சாயச்சாலை உரிமையாளர்கள் சங்கம் வங்கிகளின் கடன் நிலுவைத் தொகையினை நேர் செய்ய சிறப்பு நிதியுதவியாக ரூ.200 கோடி வழங்க மீண்டும் அரசைக் கோரியது.

மத்திய அரசு ரூ.200/– கோடியை ஒப்பளிப்பு செய்து வட்டியில்லா கடனாக 18 பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு விடுவித்துள்ளது. இத்தொகை முதலில் வட்டியில்லா கடனாக வழங்கப்பட்டு, பொது சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்திறனின் அடிப்படையில் தொடர்ந்து வரும் ஆண்டுகளில் மானியமாக மாற்றப்படும் எனவும் மத்திய அரசின் நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. இத்தொகையில் 11 தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் பெறப்பட்ட கடன் தொகையினை ஒரே தவணையில் செலுத்தும் திட்டத்தின்படி கடனை நேர் செய்ய ரூ.147.49 கோடியும் பொது சுத்திகரிப்பு நிலையங்கள் மேம்பாட்டிற்கு பயன்படுத்த வழங்கப்பட்ட தொகை ரூ.52.51 கோடியும் அடங்கும். இத்தொகை முழுவதுமாக 18 பொது கழிவு

நீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது. இதன் விவரம் பின்வருமாறு:

**மைய அரசால் வழங்கப்பட்ட சிறப்பு நிதி உதவி**

**(ரூ.கோடியில்)**

| வ. எண். | பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பெயர் | விரிவான திட்ட அறிக்கையின் படி திட்ட மதிப்பீடு | வங்கிகளுக்கு வழங்கப்பட்ட ஒரே தவணைத் தொகை | பூஜ்ய நிலை கழிவுநீர் வெளியேற்ற திட்டத் தொகையின் படி பிரித்து வழங்கப்பட்ட விபரம் | மொத்த வட்டியில்லா கடன் தொகை |
|---|---|---|---|---|---|
| 1 | அருள்புரம் | 15.10 | 5.95 | 2.93 | 8.88 |
| 2 | சின்னக்கரை | 21.96 | 7.70 | 4.25 | 11.95 |
| 3 | ராயபுரம் | 15.10 | 5.95 | 2.92 | 8.88 |
| 4 | வீரபாண்டி | 30.85 | 8.49 | 5.98 | 14.46 |
| 5 | காசிப்பாளையம் | 12.08 | 4.24 | 2.34 | 6.58 |
| 6 | குண்ணங்கல் பாளையம் | 15.10 | 5.30 | 2.93 | 8.23 |
| 7 | முருகம் பாளையம் | 30.20 | 11.91 | 5.85 | 17.76 |
| 8 | ஈஸ்டர்ன் | 14.79 | 7.59 | 2.86 | 10.45 |
| 9 | சிறுபூலுவாப்பட்டி | 15.92 | 20.54 | 3.08 | 23.62 |
| 10 | காரைப்புதூர் | 17.12 | 22.46 | 3.32 | 25.77 |
| 11 | மங்களம் | 11.87 | 5.06 | 2.30 | 7.36 |
| 12 | அங்கேரி பாளையம் | 24.14 | 10.55 | 4.67 | 15.23 |
| 13 | கள்ளிக்காடு | 6.50 | 3.25 | 1.26 | 4.51 |
| 14 | ஆண்டிப் பாளையம் | 8.47 | 14.23 | 1.64 | 15.87 |
| 15 | மண்ணரை | 11.10 | 3.99 | 2.15 | 6.14 |
| 16 | பார்க் | 6.33 | 3.94 | 1.23 | 5.17 |
| 17 | வேட்டுவபாளையம் | 4.40 | 1.47 | 0.86 | 2.33 |
| 18 | எஸ். பெரியபாளையம் | 10.02 | 4.87 | 1.94 | 6.81 |
| **மொத்தம்** | | 271.05 | 147.49 | 52.51 | 200.00 |

தற்போதுள்ள அனைத்து 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில், பூஜ்ய நிலை கழிவு நீர் எட்டும் பணியினை நிறைவேற்றுவதற்கான கூடுதல் இயந்திரங்களை பொருத்தும் பணி நடைபெற்று வருகிறது. அவற்றில், மேற்குறிப்பிட்ட பணியினை 6 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் 100 சதவீதம் முழுமையாகவும் வெற்றிகரமாகவும் நிறைவு செய்துள்ளன. மீதமுள்ள பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் 5 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் 90 சதவீதத்திற்கு மேலாகவும், 3 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் 80 சதவீதமும், 3 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் 70 சதவீதமும், மீதமுள்ள ஒரு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் 50 சதவீதமும் பூஜ்ய நிலை கழிவு நீர் எட்டும் பணியினை நிறைவு செய்துள்ளன.

18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் பூஜ்ய நிலை கழிவு நீர் எட்டும் பணியின் தற்போதைய முன்னேற்ற நிலை மற்றும் விடுவிக்கப்பட்டுள்ள தொகை விவரம்:-

| வ. எண் | பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பெயர் | மாநில அரசு ஒப்பளிப்பு செய்துள்ள வட்டியில்லா கடன் தொகை (ரூ.கோடியில்) | பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு விடுவிக்கப்பட்ட வட்டியில்லா கடன் தொகை (ரூ.கோடியில்) | பூஜ்ய நிலை கழிவு நீர் எட்டும் பணி முன்னேற்ற விபரம் (Physical target Completion) | உறுப்பினர்களின் பங்களிப்புத் தொகை (ரூ.கோடியில்) | நிதி நிறைவு (Financial Completion) | செயல்படும் திறன் (Consent to operate permitted by TNPCB) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | அருள்புரம் | 11.33 | 11.33 | 100% | 4.12 | 120% | 90% |
| 2. | பார்க் | 4.75 | 4.75 | 100% | 2.36 | 112% | 90% |
| 3. | மண்ணரை | 8.32 | 8.32 | 100% | 5.95 | 137% | 60% |
| 4. | சிறுபூலுவாப்பட்டி | 11.94 | 11.12 | 100% | 8.16 | 113% | 50% |
| 5. | வீரபாண்டி | 23.14 | 21.31 | 100% | 10.21 | 108% | 60% |
| 6. | கள்ளிக்காடு | 4.87 | 4.87 | 100% | 1.31 | 93% | 50% |
| 7. | காரைப்புதூர் | 12.84 | 12.83 | 95% | 5.23 | 92% | 70% |

| வ. எண் | பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பெயர் | மாநில அரசு ஒப்பளிப்பு செய்துள்ள வட்டியில்லா கடன் தொகை (ரூ.கோடியில்) | பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு விடுவிக்கப்பட்ட வட்டியில்லா கடன் தொகை (ரூ.கோடியில்) | பூஜ்ய நிலை கழிவு நீர் எட்டும் பணி முன்னேற்ற விபரம் **(Physical target Completion)** | உறுப்பினர்களின் பங்களிப்புத் தொகை (ரூ.கோடியில்) | நிதி நிறைவு **(Financial Completion)** | செயல்படும் திறன் **(Consent to operate permitted by TNPCB)** |
|---|---|---|---|---|---|---|---|
| 8. | ஈஸ்டர்ன் | 11.09 | 9.44 | 95% | 4.85 | 113% | 75% |
| 9. | ஆண்டிப் பாளையம் | 6.35 | 4.589 | 95% | 2.58 | 104% | 30% |
| 10. | காசிப்பாளையம் | 9.06 | 7.24 | 90% | 1.76 | 62% | 80% |
| 11. | ராயபுரம் | 11.33 | 9.54 | 90% | 2.72 | 68% | 50% |
| 12. | மங்களம் | 8.90 | 7.06 | 85% | 3.08 | 84% | 30% |
| 13. | சின்னக்கரை | 16.47 | 12.21 | 85% | 2.42 | 65% | 50% |
| 14. | அங்கேரி பாளையம் | 18.10 | 15.24 | 80% | 10.85 | 101% | 40% |
| 15. | வேட்டுவபாளையம் | 3.31 | 1.74 | 75% | 1.54 | 81% | 15% |
| 16. | முருகம் பாளையம் | 22.65 | 15.52 | 70% | 4.32 | 63% | 50% |
| 17. | குண்ணங்கல் பாளையம் | 11.32 | 9.05 | 70% | 1.58 | 61% | 50% |

| வ. எண் | பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் பெயர் | மாநில அரசு ஒப்பளிப்பு செய்துள்ள வட்டியில்லா கடன் தொகை (ரூ.கோடியில்) | பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களுக்கு விடுவிக்கப்பட்ட வட்டியில்லா கடன் தொகை (ரூ.கோடியில்) | பூஜ்ய நிலை கழிவு நீர் எட்டும் பணி முன்னேற்ற விபரம் **(Physical target Completion)** | உறுப்பினர்களின் பங்களிப்புத் தொகை (ரூ.கோடியில்) | நிதி நிறைவு **(Financial Completion)** | செயல்படும் திறன் **(Consent to operate permitted by TNPCB)** |
|---|---|---|---|---|---|---|---|
| **18.** | எஸ். பெரியபாளையம் | **7.52** | **2.18** | **50%** | **0.79** | **33%** | **15%** |
| மொத்தம் | | **203.29** | **168.34** | | **73.83** | | |



அருள்புரம் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள
வடிகட்டுதல் பிரிவு



அருள்புரம் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலுள்ள
நுண் வடிகட்டுதல் பிரிவு

## 5.5 ஒருங்கிணைந்த பதனிடுதல் மேம்பாட்டுத் திட்டம்

**11.08.2014** அன்று மாண்புமிகு தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், நாமக்கல், ஈரோடு, சேலம் மற்றும் கரூர் மாவட்டத்தில் உள்ள சிறு குறு மற்றும் நடுத்தர அளவில் ஜவுளி சாய சலவை மற்றும் அதன் உப தொழில் நிறுவனங்களை புனரமைக்க ஒரு திட்டத்தினை அறிவித்தார்கள். இத்திட்டமானது அப்பகுதியிலுள்ள ஆறுகள், நீர் நிலைகள் (ஓடைகள்) மற்றும் விவசாய நிலங்களில் சுத்திகரிக்கப்படாமல் வெளியேற்றப்பட்ட கழிவு நீரால் இயற்கை வளங்களான நீர், காற்று மற்றும் சுற்றுபுறச் சூழல் ஆகியவை மாசுபட்ட காரணத்தால் நீண்டகாலமாக மூடப்பட்ட அல்லது மூடப்படும் நிலையில் உள்ள ஜவுளி சாய சலவை நிறுவனங்கள் மூடப்படும் அபாயத்தை போக்கவும் அவற்றின் தேவையை பூர்த்தி செய்யும் வகையிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட திட்டத்திற்கான பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கு, கண்டறியும் ஆய்வு மற்றும் செயலாக்க நிலை அறிக்கை மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணியினை மேற்கொள்ள, தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக, கைத்தறி மற்றும்

துணிநூல் இயக்குநர், திட்ட முகமை அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்காக, தமிழ்நாடு உட்கட்டமைப்பு வளர்ச்சி வாரியம் தனது திட்ட தயாரிப்பு நிதியிலிருந்து இதுவரை ரூ.4.96 கோடியினை, கண்டறியும் ஆய்வு மற்றும் செயலாக்க நிலை அறிக்கை (ரூ.92.00 லட்சம்) மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக (ரூ.4.04 கோடி) தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனத்திற்கு வழங்கியுள்ளது.

தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், சாய மற்றும் சலவை தொழிலில் ஈடுபட்டுள்ள 1900 ஜவுளி சாயச்சாலைகளை நான்கு மாவட்டங்களிலுள்ள கீழ்க்கண்டுள்ள 12 குழுமங்களாக கண்டறிந்துள்ளது:-

| வ. எண் | குழுமத்தின் பெயர் | சாயச் சலவை சாலைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| ஈரோடு மாவட்டம் | | |
| 1 | காடையாம்பட்டி குழுமம் | 59 |
| 2 | பவானி குழுமம் | 82 |
| 3 | பெருந்துறை குழுமம் | 44 |
| 4 | ஈரோடு தாலுக்கா குழுமம் | 549 |
| 5 | சென்னிமலை குழுமம் | 33 |

| வ. எண் | குழுமத்தின் பெயர் | சாயச் சலவை சாலைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| **நாமக்கல் மாவட்டம்** | | |
| 6 | குமாரபாளையம் குழுமம் **–I** | 158 |
| 7 | பள்ளிப்பாளையம் குழுமம் | 150 |
| 8 | குமாரபாளையம் குழுமம் **–II** | 132 |
| 9 | இராசிபுரம் குழுமம் | 22 |
| **கரூர் மாவட்டம்** | | |
| 10 | மூடப்படும் நிலையிலுள்ள தற்போதைய பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்கள் – **8** | 238 |
| **சேலம் மாவட்டம்** | | |
| 11 | சேலம் குழுமம் | 283 |
| 12 | எடப்பாடி குழுமம் | 150 |
| **மொத்தம்** | | **1,900** |

தமிழ்நாடு நீர் முதலீட்டு நிறுவனம், இந்த **1900** சாயச் சலவை சாலைகளின் கணக்கெடுக்கும் பணியினை ஒவ்வொரு அலகு வாரியாக முடித்து கண்டறியும் ஆய்வு மற்றும் செயலாக்க நிலை அறிக்கை சமர்ப்பித்துள்ளது. மேலும், ஈரோடு மற்றும் நாமக்கல் மாவட்டங்களின் விரிவான திட்ட அறிக்கையும் சமர்ப்பித்துள்ளது.

ஈரோடு மாவட்டம், காடையாம்பட்டி பொதுக் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு ரூ.160 கோடி மதிப்பீட்டிலான விரிவான திட்ட அறிக்கைக்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள ஸ்ரீ பவானி டையிங் குழுமம், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள பசுமை சுற்றுச்சூழல் கழகம் மற்றும் விருதுநகர் மாவட்டத்தில் உள்ள தென் மாவட்ட ஜவுளி பதப்படுத்தும் குழுமம் (Southern Districts Textile Processing Cluster) ஆகியவைகளுக்கான விரிவான திட்ட அறிக்கைகள் முறையே ரூ.92.21 கோடி, ரூ.157.39 கோடி, மற்றும் ரூ.151.86 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, அவற்றில் ஸ்ரீபவானி டையிங் குழுமத்திற்கும், தென் மாவட்ட ஜவுளி பதனிடும் குழுமத்திற்கும் கொள்கை அளவிலான ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

### 5.6 ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டம்

மத்திய அரசு, நடைமுறையில் இருந்த ஆயத்த ஆடை ஏற்றுமதி பூங்கா திட்டம் மற்றும் ஜவுளித்தொழில் மைய உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் ஆகிய இரு திட்டங்களை இணைத்து ஜவுளித்தொழிலில் உலகத்தரத்துடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளை ஒரே இடத்தில் ஏற்படுத்தும் வகையில்

“ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காத் திட்டம்” என்ற திட்டத்தினை 2005-ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தியது.

இத்திட்டம் சர்வதேச தரத்துடன் கூடிய புதிய ஜவுளிப்பூங்காக்கள், வளர்ச்சியடையக் கூடிய மையங்களில் அமைக்க உதவும். இத் திட்டமானது பொது–தனியார் பங்களிப்புடன் திட்டத் தொகையில் 40 சதவீதம் அல்லது ரூ.40.00 கோடிக்கு மிகாமல் மத்திய அரசு மானியத்துடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் தமிழ்நாடு அரசு திட்டத் தொகையில் 9 சதவீதம் அல்லது ரூ.9.00 கோடிக்கு மிகாமல் மானியமாக வழங்குகிறது. இத்துறை, இதர துறைகளின் பல்வேறு அனுமதி பெறுதலுக்கும், நில பத்திரப் பதிவு செய்வதற்கு 50 விழுக்காடு சலுகை பெறுவதற்கும் தொழில் முனைவோர்கள் மற்றும் சிறப்பு நோக்கு முகமை நிறுவனங்களுக்கு உதவி புரிகிறது.

ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 8 ஜவுளிப் பூங்காக்கள் அமைக்க மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. தமிழ்நாட்டில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஜவுளிப் பூங்காக்களின் விவரம் பின்வருமாறு:-

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒப்பளிப்பு செய்யப்பட்ட வருடம் | திட்ட மதிப்பீடு | மத்திய அரசு மானியம் | மாநில அரசு மானியம் | நேரடி / மறைமுகமாக வேலைவாய்ப்பு பெறுவோர் எண்ணிக்கை | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | (ரூ. கோடியில்) | | | | |
| 1 | உயர் தொழில் நுட்ப நெசவுப் பூங்கா, பல்லடம், திருப்பூர் மாவட்டம் | 2006 | 55.42 | 22.17 | 4.98 | 6,000 | **திட்டம்:** நாடா இல்லா தறிகள் மூலம் பருத்தி துணி வகைகள் உற்பத்தி செய்தல், ஆயத்த ஆடைகள் மற்றும் உற்பத்தி.<br>**நிலை:**<br>கட்டுமான பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு அனைத்து 90 அலகுகளும் முழுமையாக செயல்படுகின்றன. |
| 2 | உயர்தொழில் நுட்ப நெசவுப் பூங்கா, குமாரப்பாளையம், நாமக்கல் மாவட்டம் | 2006 | 34.82 | 13.93 | 3.13 | 3,000 | **திட்டம்:** நெசவு, நூற்பு, பாவு தயாரித்தல் மற்றும் கஞ்சி தோய்த்தல்.<br>**நிலை:**<br>56 அலகுகளில் 52 அலகுகள் செயல்படுகின்றன. |
| 3 | மதுரை ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, வாடிப்பட்டி, மதுரை. | 2007 | 78.76 | 31.50 | 7.08 | 8,500 | **திட்டம்:** நெசவு, பதனிடுதல், ஆடை ஆகியவற்றை உள்ளடக்கிய ஜவுளிப் பூங்கா.<br>**நிலை:**<br>கட்டுமான பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு அனைத்து 18 அலகுகளும் முழுமையாக செயல்படுகின்றன. |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒப்பளிப்பு செய்யப்பட்ட வருடம் | திட்ட மதிப்பீடு | மத்திய அரசு மானியம் | மாநில அரசு மானியம் | நேரடி / மறைமுகமாக வேலைவாய்ப்பு பெறுவோர் எண்ணிக்கை | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | (ரூ. கோடியில்) | | | | |
| 4 | ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, கரூர், கரூர் மாவட்டம் | 2007 | 116.10 | 40.00 | 9.00 | 7,000 | **திட்டம்:** வீட்டு உபயோக துணிகள் நெசவு.<br>**நிலை:**<br>கட்டுமான பணிகள் முழுமையாக முடிக்கப்பட்டு அனைத்து 35 அலகுகளும் முழுமையாக செயல்படுகின்றன. |
| 5 | கில்ட் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா, செங்கப்பள்ளி, திருப்பூர் மாவட்டம் | 2006 | 149.45 | 40.00 | 9.00 | 12,500 | **திட்டம்:** நெசவு, பதனிடுதல், சாயமிடுதல் மற்றும் படுக்கை விரிப்புகள்.<br>**நிலை:**<br>20 அலகுகளில் 5 அலகுகள் தற்போது செயல்படுகின்றன. |
| 6 | சைமா பதனிடும் பூங்கா, கடலூர், கடலூர் மாவட்டம் | 2007 | 111.60 | 40.00 | 9.00 | 15,000 | **திட்டம்:** நெசவு துணி, பின்னலாடை மற்றும் நூல் பதனிடுதல்.<br>**நிலை:**<br>• உட்கட்டமைப்பு பணிகளான நிலம் மேம்படுத்துதல், உட்சாலைகள் மற்றும் கால்வாய் அமைக்கும் பணி ஆகியவை முடிக்கப்பட்டுள்ளன<br>• கழிவு நீரை கடலில் கலப்பதற்கு குழாய்கள் பூமியில் பதியும் பணி முடிக்கப்பட்டுள்ளது. |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | ஒப்பளிப்பு செய்யப்பட்ட வருடம் | திட்ட மதிப்பீடு | மத்திய அரசு மானியம் | மாநில அரசு மானியம் | நேரடி / மறைமுகமாக வேலைவாய்ப்பு பெறுவோர் எண்ணிக்கை | குறிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | (ரூ. கோடியில்) | | | | |
| | | | | | | | • தண்ணீர் தேவையை பூர்த்தி செய்யவும், தற்காலிகமாகவும் நிரந்தரமாகவும் தீர்வு செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. |
| 7 | காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா கைத்தறி பட்டுப் பூங்கா, கீழ்கதிர்பூர், காஞ்சிபுரம் மாவட்டம் | 2010 | 83.83 | 33.53 | 7.54 | 10,000 | **திட்டம்:** பட்டு கைத்தறி சேலைகள் நெய்தல், பட்டுக்கு சாயமிடுதல், பருத்திக்கு சாயமிடுதல், ஆயத்த ஆடைகள் மற்றும் எம்ப்ராய்டரி வேலைகள்.<br>**நிலை:**<br>கட்டுமான பணிகள் விரைவில் துவக்கப்பட உள்ளது. |
| 8 | பல்லவாடா தொழில் நுட்ப நெசவுப் பூங்கா, பல்லவாடா, ஈரோடு மாவட்டம் | 2011 | 106.27 | 40.00 | 9.00 | 5,300 | **திட்டம்:** ஆயத்த ஆடைகள் மற்றும் தொழில்நுட்ப ஜவுளிகள்.<br>**நிலை:**<br>• மத்திய அரசு முதல் தவணை விடுவித்துள்ளது.<br>• கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| | மொத்தம் | | 736.25 | 261.13 | 58.73 | 67,300 | |

## 5.7 சிறிய அளவிலான ஜவுளி பூங்காக்கள்

01.09.2015 அன்று மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110–இன் கீழ் சட்டமன்றப் பேரவையில் வெளியிடப்பட்ட அறிவிப்பின்படி, தமிழ்நாட்டில் தொழில் முனைவோர்கள் ஒருங்கிணைந்த சிறிய அளவிலான ஜவுளிப்பூங்கா அமைப்பதற்கான நிதியுதவி அங்கீகரிக்கப்பட்டு, அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்துவதற்கு திட்ட மதிப்பில் 50 விழுக்காட்டுத் தொகை ரூ.2.50 கோடி உச்சவரம்பிற்குட்பட்டு நிதி உதவியாக வழங்கப்படுகிறது. இத்திட்டமானது, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தெரிவிக்கப்பட்டு, சிறிய அளவிலான ஜவுளிப் பூங்கா அமைப்பது தொடர்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தொழில் முனைவோர்களுடன் கூட்டங்களை நடத்தியுள்ளனர். சாத்தியமுள்ள தொழில் முனைவோரைக் கண்டறிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## 5.8 மாநில ஜவுளி ஆலோசனைக் குழு

01.09.2015 அன்று மாண்புமிகு தமிழக முன்னாள் முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்ற பேரவையில், சட்டப்பேரவை விதி எண்.110–ன் கீழ் ஜவுளித்தொழிலின் பல்வேறு பிரிவுகளான கைத்தறி, விசைத்தறி, நூற்புப்பிரிவு, பின்னலாடை

மற்றும் ஆயத்த ஆடை போன்றவற்றின் முக்கிய நிலையைத் தக்க வைக்கவும், மேலும் வலுப்படுத்தும் வண்ணமாகவும் மாநில ஜவுளி ஆலோசனைக் குழு அமைக்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதன்படி, அரசாணை எண்.03, கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(டி1) துறை, நாள்.05.01.2016–ன்படி மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் கைத்தறி, விசைத்தறி, நூற்புப்பிரிவு, பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை பிரிவுகளைச் சார்ந்த பல்வேறு பங்குதாரர்களை உள்ளடக்கிய மாநில ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது.

மாநில ஜவுளித் தொழிலின் வளர்ச்சிக்கு தேவையான நடவடிக்கைகளை மாநில அரசுக்கு பரிந்துரைப்பது இக்குழுவின் முதன்மை நோக்கமாகும். இக்குழு, ஜவுளித்துறையின் ஆலோசனை அமைப்பாக செயல்படும் விதமாக மூன்று மாதங்களுக்கு ஒரு முறையோ அல்லது தேவைக்கேற்பவோ கூடி ஜவுளித் தொழில் சம்மந்தமான இடர்பாடுகளை நீக்கவும், அதன் வளர்ச்சிக்கும் ஆலோசனை வழங்கும்.

**மாநில ஜவுளி ஆலோசனைக்குழுவின் இரண்டாவது கூட்டம் 15.06.2017 அன்று மாண்புமிகு கைத்தறி மற்றும்**

**துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில், தலைமை செயலகத்தில் கைத்தறி, விசைத்தறி, நூற்புபிரிவு, பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை பிரிவினை சார்ந்த துணித்தொழில் பங்குதாரர்களுடன் நடத்தப்பட்டது.** ஜவுளி தொழில் மற்றும் அதன் தொடர்புடைய தொழில்களின் வளர்ச்சிக்கு அவர்களின் கோரிக்கையின் அடிப்படையில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 5.9 தொழில்நுட்ப ஜவுளிகள்

ஜவுளித்துறையில் தொழில்நுட்ப ஜவுளிகள் என்பது புதிதாக உதயமாகி வரும் ஒரு பிரிவாகும். இது உள்ளூர் நுகர்வுக்கு மட்டுமின்றி ஏற்றுமதிக்கும் நிறைய வாய்ப்புகளை ஏற்படுத்தி உள்ளது.

தொழில்நுட்ப ஜவுளிகள் கீழ்க்கண்ட 12 பயன்பாட்டு பகுதிகளை மையமாகக் கொண்டுள்ளது. விவசாயம் சார்ந்த தொழில்நுட்பம் (Agrotech), கட்டிடம் சார்ந்த தொழில்நுட்பம் (Buildtech), துணி சார்ந்த தொழில்நுட்பம் (Clothtech), புவி சார்ந்த தொழில்நுட்பம் (Geotech), வீட்டுத்தேவை சார்ந்த தொழில்நுட்பம் (Hometech), தொழில்சார்ந்த தொழில்நுட்பம் (Indutech), மருத்துவம் சார்ந்த தொழில்நுட்பம் (Meditech), வாகனம் சார்ந்த தொழில்நுட்பம் (Mobiletech), சுற்றுப்புறச் சூழல்

சார்ந்த தொழில்நுட்பம் (Oekotech), பேக்கேஜிங் சார்ந்த தொழில்நுட்பம் (Packtech), பாதுகாப்பு சார்ந்த தொழில்நுட்பம் (Protech) மற்றும் விளையாட்டு சார்ந்த தொழில்நுட்பம் (Sporttech).

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் **29.06.2017** அன்று சட்டப்பேரவையில் அறிவிக்கப்பட்டபடி, சர்தார் வல்லபாய் பட்டேல் சர்வதேச ஜவுளி மற்றும் மேலாண்மைக் கல்லூரியுடன் தமிழக அரசு இணைந்து தமிழ்நாட்டில் தொழில்நுட்ப ஜவுளிக்கென ஒரு பிரிவை உருவாக்கி, தொழில்நுட்ப ஜவுளி குறித்த முன்னோடி திட்டத்தில் தொழில்முனைவோருக்கு பயிற்சி அளிக்கும் பொருட்டு ரூ.**25.00** இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டம் மூன்று கட்டங்களாக செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. முதல் கட்டம்: தொழில் நுட்ப ஜவுளி குறித்த முன்னோடிப் பயிற்சி; இரண்டாவது கட்டம்: வணிகத் திட்டம் உருவாக்குதல், மூன்றாவது கட்டம் : வணிகத் திட்டத்தின் செயலாக்கம்.

முதல் கட்டமாக, தொழில்நுட்ப ஜவுளியின் இரண்டு நாள் பயிற்சி பட்டறையானது **10.03.2018** அன்று மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத்திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில்,

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் சர்தார் வல்லபாய் பட்டேல் சர்வதேச ஜவுளி மற்றும் மேலாண்மை கல்லூரி, கோயம்புத்தூரில் தொடங்கி வைக்கப்பட்டது.





மருத்துவம் சார்ந்த தொழில்நுட்பம் (Meditech), தொழில்சார்ந்த தொழில்நுட்பம் (Indutech), பேக்கேஜிங் சார்ந்த தொழில்நுட்பம் (Packtech) ஆகிய மூன்று முக்கிய தொழில்நுட்ப ஜவுளிப் பிரிவுகளில் துரித முன்னேற்றம் அடைவதற்கு உள்ள சாதகமான அமைப்பு மற்றும் வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு முதல் கட்டத்தில் இவற்றில் கவனம் செலுத்தி பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப ஜவுளியினை ஊக்குவிப்பதன் மூலம் துணிநூல் மதிப்பு கூட்டுத் தொடரில் இதுவரை பயன்படுத்தாத வாய்ப்புகளைப் பயன்படுத்தவும் வழி வகுக்கும்.

**2018–2019 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்**

**2018–2019** ஆம் ஆண்டில், தொழில்நுட்ப ஜவுளி உற்பத்தியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களைப் பார்வையிடுதல், மற்ற மாநிலங்களிலுள்ள சிறப்பு சந்தை மையங்களைப் பார்வையிடுதல், சந்தை பகுப்பாய்வு, முதலீட்டாளர்களின் சந்திப்பு, வாங்குபவர்–விற்பனையாளர்கள் சந்திப்பு, முதலியன செயல்படுத்தப்பட்டு தொழில்நுட்ப ஜவுளி பிரபலப்படுத்தப்படும்.

## 5.10 பவர்டெக்ஸ் இந்தியா (விரிவான விசைத்தறித்துறை வளர்ச்சி திட்டம்)

விசைத்தறி நெசவாளர்கள் சந்தித்து வரும் பல்வேறு சமூக, பொருளாதார பிரச்சனைகள் மற்றும் விசைத்தறி துறையிலுள்ள பழமையான தொழில்நுட்பம் போன்ற பிரச்சனைகளை கருத்தில் கொண்டு பன்முனைப்புள்ள பல்வேறு திட்டங்கள் மூலமாக ஒருங்கிணைந்த விசைத்தறித்துறை வளர்ச்சித்திட்டம் (ISPSD) 11–வது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலம் தொடங்கப்பட்டது மற்றும் கூடுதல் அம்சங்களுடன் 12–வது ஐந்தாண்டு திட்டத்திலும் நீட்டிக்கப்பட்டது. இத்திட்டம் பரவலாக்கப்பட்ட விசைத்தறிப்பிரிவிற்கு பெரிதும் பயனளிக்கிறது. இத்திட்டம் மூன்று ஆண்டுகளுக்கு 01.04.2017 முதல் 31.03.2020 வரை செயல்பாட்டில் இருக்கும்.

சாதாரண விசைத்தறிகளை நவீனப்படுத்தும் திட்டத்தில் விசைத்தறிகளை பகுதி தானியங்கி தறியாகவும், நாடா இல்லா ரேப்பியர் தறியாகவும் நவீனப்படுத்த ரூ.20,000/– லிருந்து ரூ.81,000/– வரை நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் 4,489 விசைத்தறிகள் நவீனப்படுத்தப்பட்டுள்ளன.

நூல் வங்கித் திட்டத்தில், சிறப்பு நோக்கக் குழுவினால் (Special purpose Vehicle) தொடங்கப்படும் நூல் வங்கிக்கு தேவையான மூலதனத்தற்கு (Corpus Fund) ரூ.**2.00** கோடி வரை வட்டியில்லா நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஈரோடு சரகத்திலுள்ள ஈரோடு விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், வீரப்பன்சத்திரம் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம், சிரகிரி வேலவன் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் ஆகிய மூன்று விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களில் நூல் வங்கி திட்டம் செயல்படுத்தப்பட்டு விசைத்தறி நெசவாளர்களுக்கு தேவையான நூல் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது.

விசைத்தறிகளுக்கான சூரிய மின்சக்தி திட்டத்தின் கீழ், ஆன் கிரிட் (பேட்டரி இல்லாமல்) மற்றும் (பேட்டரி பேக் அப் உடன்) என இரு வகையிலான சூரிய மின் திட்டங்களை நிறுவுவதற்கு ரூ.**2.25** இலட்சம் முதல் ரூ.**8.55** இலட்சம் வரை நிதி உதவி/ மானியம் வழங்கப்படுகிறது.

விசைத்தறி நெசவாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கான ஒருங்கிணைந்த குழு காப்பீட்டுத் திட்டத்தில், விசைத்தறி நெசவாளர்களுக்கு ஏற்படும் இயற்கை

மரணத்திற்கு ரூ.2,00,000/– வரையிலும், விபத்தினால் ஏற்படும் மரணத்திற்கு ரூ.2,00,000/– மற்றும் விபத்தினால் ஏற்படும் ஊனத்திற்கு ரூ.2,00,000/– வரையிலும் காப்பீடு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், தமிழ்நாட்டில் 57,100 விசைத்தறி நெசவாளர்கள் / தொழிலாளர்கள் பயனாளிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர். **இக்காப்பீட்டுத் திட்டத்தில் அதிகபட்ச பயனாளிகளைச் சேர்த்து தமிழ்நாடு தேசிய அளவில் முதலிடம் வகிக்கிறது.**

## 5.11 கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம், 1985

இந்திய அரசால் இயற்றப்பட்ட கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் 1985, மாநில அரசுகளால், அந்தந்த மாநிலங்களில் உள்ள கைத்தறி இயக்குநர் மூலம் அமலாக்க இயக்கத்தினை நிறுவி, மேற்படி சட்டத்தை விசைத்தறிகள் கடைபிடிப்பதை உறுதிபடுத்தவும், கைத்தறி நெசவாளர்கள் மற்றும் கைத்தறி தொழிலை விசைத்தறி ஆதிக்கத்திலிருந்து காப்பாற்றும் பொருட்டும், இந்நாட்டில் கைத்தறி தொழிலுக்கே உரித்தான மகத்தான பாரம்பரியம் மிக்க கலாச்சாரத்தை காக்கவும் மாநில அரசுகளால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்திய அரசால், மேற்படி சட்டத்தினை அமலாக்குவதற்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரகத்தில், பிரத்யேகமாக அமலாக்க

பிரிவு, சென்னையில், துணை இயக்குநர்/அமலாக்க அலுவலரை தலைமையாகக் கொண்டு, தலைமையிடமாகவும், சேலம், திருச்செங்கோடு, ஈரோடு, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய 5 துணை அமலாக்க அலுவலகங்களில், உதவி அமலாக்க அலுவலர்கள் மூலமாகவும் இச்சட்டம் தமிழக அரசின் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மூலம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

1985ம் ஆண்டு, மத்திய அரசால் இச்சட்டம் அறிமுகப்படுத்தப்படும் போது, 22 இரகங்கள் கைத்தறி இரகத்திற்கென இச்சட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2008ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 3ஆம் தேதி முதல், 11 இரகங்கள் மட்டுமே பிரத்யேகமாக கைத்தறிகளில் உற்பத்தி செய்வதற்கு ஒதுக்கீடு செய்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| (1) | சேலை | (2) | வேட்டி |
| (3) | துண்டு / கம்சா மற்றும் அங்கவஸ்திரம் | (4) | லுங்கி |
| (5) | ஜடார் மேகலா/ பாநெக் | (6) | ஜமக்காளம்/ டர்ரி (அ) டர்ரட் |
| (7) | டிரஸ் மெட்டீரியல் | (8) | பேரெக் பிளாங்கெட், கம்பல் (அ) கம்பளி |
| (9) | ஷால், லாய், மப்ளர், பங்கி முதலியன | (10) | உல்லன் ட்வீடு |
| (11) | கேஸ், பெட்ஷீட், பெட் கவர், கவுண்டர்பேன், பர்னிசிங் (டேப்பஸ்டிரி மற்றும் அப்ஹோல்ஸ்டிரி உட்பட) | | |

கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் **1985–ல்** உள்ள விதிகளை, விசைத்தறிகள் செறிந்துள்ள பகுதிகளிலுள்ள விசைத்தறி நெசவாளர்கள்/தொழிலாளர்களிடம் பரப்பும் வகையில் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. விசைத்தறிகள் செறிந்துள்ள பகுதிகளில், தொடர்ந்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, மேற்படி சட்டத்தினை மீறுபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் விதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு வருகிறது.

கைத்தறி இரக ஒதுக்கீடு சட்டம் **1985–ன்** கீழ், **2017–2018** ஆம் ஆண்டில் விசைத்தறிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டவை, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டவை, தண்டனை வழங்கப்பட்டவை, விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டவை ஆகிய விவரங்கள் பின்வருமாறு:-

| வ எண் | மண்டலத்தின் பெயர் | 2017–18 ஆம் ஆண்டுக்கு விசைத்தறிகள் ஆய்வு மேற்கொள்ள நிர்ணயிக்கப்பட்ட குறியீடு | விகிதாச்சார குறியீடு | விசைத்தறிகள் ஆய்வு மேற்கொள்ளப்பட்டவை | 2017–18 ஆம் ஆண்டில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை | தண்டனை வழங்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை (கடந்த ஆண்டு நிலுவையிலுள்ள வழக்குகளும் சேர்த்து) | விழிப்புணர்வு கூட்டங்கள் | கலந்து கொண்டவர்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | சென்னை | 744 | 744 | 782 | 1 | 1 | 1 | 25 |
| 2. | ஈரோடு | 16272 | 16272 | 16849 | 12 | 15 | 22 | 979 |
| 3. | மதுரை | 8400 | 8400 | 9789 | 31 | 22 | 14 | 458 |
| 4. | சேலம் | 12720 | 12720 | 13005 | 7 | 15 | 24 | 870 |
| 5. | திருச்செங்கோடு | 16032 | 16032 | 16640 | 14 | 22 | 25 | 730 |
| 6. | திருப்பூர் | 14940 | 14940 | 15208 | 9 | 9 | 24 | 542 |
| | மொத்தம் | 69108 | 69108 | 72273 | 74 | 84 | 110 | 3604 |

## 6. துறையால் செயல்படுத்தப்பட்டுவரும் நல்வாழ்வு திட்டங்கள்

## 6.1 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம்


தமிழ்நாடு அரசு, நெசவாளர்களிடம் சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கவும் அதன் மூலம் அவர்களது எதிர்கால பாதுகாப்பிற்கு உறுதி அளிக்கவும், **1975** ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும்

பாதுகாப்புத் திட்டம் என்ற திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது. கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக உள்ள நெசவாளர்கள் இத்திட்டத்தில் உறுப்பினராக சேர்க்கப்படுகின்றனர். இத்திட்டத்தின் கீழ், உறுப்பினராக உள்ள ஒரு நெசவாளர் சங்கத்தின் மூலம் தாம் ஈட்டும் கூலியில் ஒரு ரூபாய்க்கு எட்டு பைசா வீதம் திட்டத்திற்கு சந்தாவாக செலுத்தினால், அதற்கு ஈடாக, மாநில அரசு தனது பங்காக, நெசவாளர் ஈட்டும் கூலியில் ஒரு ரூபாய்க்கு **8** பைசா வீதம் வழங்குகிறது.

நெசவாளர்களால் செலுத்தப்பெறும் எட்டு பைசா சந்தா மற்றும் அதற்கு ஈடாக மாநில அரசால் செலுத்தப்பெறும் எட்டு பைசா சந்தா தொகையும் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்கள் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டு வருகிறது.

மாநில அரசால் வழங்கப்படும் மேற்படி சந்தா தொகையுடன் இத்திட்டக்கணக்கிலுள்ள இருப்பு தொகைக்கு மாநில அரசு **9.50** விழுக்காடு வட்டியும் வழங்கி வருகிறது. அதில், **6.50** விழுக்காடு வட்டித்தொகை மேற்படி திட்டக்கணக்கில் செலுத்தப்பட்டு, சம்மந்தப்பட்ட நெசவாளர்களின் கணக்கில் வரவு வைக்கப்பட்டும், எஞ்சிய **3** விழுக்காடு வட்டித்தொகை, தமிழ்நாடு

கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டங்களை செயல்படுத்த பயன்படுத்தப்பட்டு வருகிறது.




**நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயன் பெறும் நெசவாளர்கள்**

மேற்படி திட்டத்தின் கீழ் **62,519** நெசவாளர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு, திட்டத்தில் சந்தா செலுத்தி வருகின்றனர். **2016–2017** ஆம் ஆண்டில் நெசவாளர்கள் செலுத்திய தொகைக்கு ஈடாக மாநில அரசு **2017–2018** ஆம் ஆண்டில் ரூ.**11.74** கோடி விடுவித்துள்ளது. **31.03.2018** அன்று உள்ளபடி, ரூ.**344.76** கோடி சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் அரசுக் கணக்கில் இருப்பில் உள்ளது.

மேலும், தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் வைப்புக் கணக்கில் உள்ள தொகைக்கான **9.50** விழுக்காடு வட்டித் தொகையாக ரூ.**30.68** கோடியினை மாநில அரசு **2017–2018** ஆம் ஆண்டில் விடுவித்துள்ளது.

மேலும், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்ட மன்ற பேரவையில் **29.06.2017** அன்று கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் மானிய கோரிக்கை விவாதத்தின் போது அறிவிக்கப்பட்டவாறு, சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தில் உறுப்பினர் சேர்ந்த நாளிலிருந்து **10** ஆண்டுகளுக்குப் பின்னர் பகுதி இறுதித் தொகையாக பெறலாம் என்ற விதிமுறையானது, உறுப்பினர் திட்டத்தில் சேர்ந்த நாளிலிருந்து **5** ஆண்டுகளில் பெறலாம் என்று தளர்த்தி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதன் மூலம், இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ள **62,519** நெசவாளர்கள் பயனடைந்து வருகின்றனர்.

இத்திட்டம் **2018–2019** ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இதற்கென **2018–2019**–ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் அரசின் பங்கு சந்தா தொகைக்கென ரூ.**12.00** கோடியும், **9.50** விழுக்காடு வட்டித்


தொகைக்கென ரூ.28.00 கோடியும் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

## 6.2 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் முதியோர் ஓய்வூதியத் திட்டம்

கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு முதுமை காலங்களில் உதவும் நோக்கத்தோடு தமிழ்நாடு அரசால் முதியோர் ஓய்வூதியத் திட்டம் 1997 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது. கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக உள்ள நெசவாளர்களில் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்தில் உறுப்பினராக சேர்ந்துள்ள நெசவாளர்கள், 60 வயது எய்தும்போது முதியோர் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. தமிழ்நாடு அரசு 01.01.2012 முதல் கைத்தறி நெசவாளர்களுக்கான முதியோர் ஓய்வூதியத் தொகையினை மாதம் ஒன்றுக்கு ரூ.400–லிருந்து ரூ.1000/–ஆக உயர்த்தி வழங்கி வருகிறது. இதில், அரசு கணக்கிலிருந்து ரூ.800/–ம், சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட நிதிக்கு அரசால் வழங்கப்படும் மூன்று விழுக்காடு வட்டித் தொகையிலிருந்து ரூ.200/–ம் சேர்த்து வழங்கப்படுகிறது.

2017–2018 ஆம் ஆண்டில் 23,718 கைத்தறி நெசவாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் வழங்க தமிழ்நாடு

அரசு ரூ.29.08 கோடி விடுவித்துள்ளது. இதில், அரசுக் கணக்கிலிருந்து ரூ.23.19 கோடியும், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட கணக்கின் 3 விழுக்காடு வட்டித்தொகையிலிருந்து ரூ.5.89 கோடியும் வழங்கப்பட்டுள்ளது.




**முதியோர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை**


இத்திட்டம், **2018–19** ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். கைத்தறி நெசவாளர்களுக்கான முதியோர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் திட்டத்திற்கென **2018–19** ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.**25.00** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6.3 தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம்

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்தைச் சேர்ந்த கைத்தறி நெசவாளர்கள் காலமானால், அவரைச் சார்ந்துள்ள அவரது குடும்பத்தினரின் இன்னல்களை போக்கும் பொருட்டு தமிழ்நாடு அரசால் 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர் குடும்ப ஓய்வூதியத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அவ்வகையில், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராக இருந்து, கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டத்திலும் உறுப்பினராக உள்ள ஒரு நெசவாளர் 60 வயதிற்கு முன் இறக்க நேரிட்டால், காலமான நெசவாளரின் நியமனதாரருக்கு 10 ஆண்டுகள் வரையிலோ அல்லது மேற்படி நெசவாளர் உயிருடன் இருந்திருந்தால் 60 வயது எய்தக் கூடிய காலம் வரையிலோ, இதில் எது நெசவாளரின் குடும்பத்திற்கு அதிக பயனளிக்குமோ, அவ்வகையில் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. கைத்தறி நெசவாளர்களுக்கான குடும்ப ஓய்வூதியமானது 01.01.2012 முதல் மாதமொன்றுக்கு ரூ.550–லிருந்து ரூ.1000/–ஆக தமிழ்நாடு அரசால் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. இதில், அரசு கணக்கிலிருந்து ரூ.650/–ம், சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்ட

நிதிக்கு அரசால் வழங்கப்படும் மூன்று விழுக்காடு வட்டித் தொகையிலிருந்து ரூ.350/—ம் சேர்த்து வழங்கப்படுகிறது.

**2017—2018** ஆம் ஆண்டில் **1,477** கைத்தறி நெசவாளர் குடும்பங்களுக்கு குடும்ப ஓய்வூதியம் வழங்க தமிழ்நாடு அரசு ரூ.**1.79** கோடி விடுவித்துள்ளது. இதில், அரசுக் கணக்கிலிருந்து ரூ.**1.15** கோடியும், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்ட கணக்கின் **3** விழுக்காடு வட்டித்தொகையிலிருந்து ரூ.**0.64** கோடியும் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் **2018—2019** ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.




**குடும்ப ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் பயன்பெறும்**
**நெசவாளர் குடும்பங்கள்**

## 6.4 ராஷ்டிரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா (RSBY) திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம்

கைத்தறி நெசவாளர்கள் மற்றும் அவர்கள் குடும்பங்களுக்கு அதிக அளவில் மருத்துவ காப்பீடு வழங்குவதை உறுதி செய்யவும், மருத்துவ செலவினங்களை மேற்கொள்ளவும், தங்களின் உடல்நலத்தைப் மேம்படுத்தவும், "ராஷ்டிரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா" திட்டத்தின் அடிப்படையிலான கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம் **01.10.2014** முதல் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்ட ஒரு நெசவாளர் குடும்பத்தில் உள்ள **5** நபர்கள் ஆண்டொன்றுக்கு ரூ.**37,500/–** வரையில் மருத்துவ சிகிச்சைகள் பெற்றுக் கொள்ளலாம். இதில் உள்நோயாளிகளுக்கான மருத்துவச் சிகிச்சைகளுக்கு ரூ.**30,000/–** வரையிலும், புற நோயாளிகளுக்கான மருத்துவச் சிகிச்சைகளுக்கு ரூ.**7,500/–** வரையிலும் மருத்துவ சிகிச்சைகள் பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் **1,44,294** கைத்தறி நெசவாளர் குடும்பங்கள் உறுப்பினர்களாக

சேர்க்கப்பட்டுள்ளதுடன், 221 மருத்துவமனைகளும் அங்கீகரிக்கப்பட்டன. இக்காப்பீட்டு திட்டத்தில் சேர்க்கப்பட்ட உறுப்பினர்களுக்கு பயோ-மெட்ரிக் மின்னணு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. இந்த அடையாள அட்டையினை பயன்படுத்தி, மாநிலத்திலுள்ள அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் பணம் செலுத்தாமல், மருத்துவ சிகிச்சை பெற்று வந்தனர்.

இத்திட்டத்திற்கான காப்பீட்டு கட்டணமாக யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு ஒரு நெசவாளர் குடும்பத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ.179/– கட்டணம் செலுத்தப்பட்டு வந்தது. இதில், மத்திய அரசின் பங்கு காப்பீட்டுக் கட்டணமாக ரூ.107.40 (60%)–ம், மாநில அரசின் பங்கு காப்பீட்டுக் கட்டணமாக எஞ்சிய ரூ.71.60 (40%)–மும் செலுத்தப்பட்டு வந்தது. இது தவிர நெசவாளரால் செலுத்த வேண்டிய பதிவுக் கட்டணம் / புதுப்பிப்பு கட்டணமான ரூ.30/– நெசவாளர்களின் சார்பாக தமிழக அரசால் செலுத்தப்பட்டது.

“ராஷ்டிரிய ஸ்வஸ்திய பீமா யோஜனா” திட்டத்தின் அடிப்படையிலான நெசவாளர் நல்வாழ்வு காப்பீடு திட்டமானது 31.03.2017 வரை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இத்திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்துவதற்கு மத்திய அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளது.

இந்நிலையில், மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் அவர்களால், 01.02.2018 அன்று, 2018–2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட உரையில், 10 கோடி ஏழைகள் மற்றும் இடர்பாடுகளுக்குள்ளாகக்கூடிய குடும்பங்கள் (தோராயமாக 50 கோடி பயனாளிகள்) ஆண்டொன்றுக்கு தலா ரூ.5 இலட்சம் வரையில் இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை உள்ளிருப்பு சிகிச்சைக்கு கூடுதல் மருத்துவ காப்பீடு பெறும் வகையில் புதிய ‘‘தேசீய நல்வாழ்வு பாதுகாப்பு திட்டம்’’ அமுல்படுத்தப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இப்புதிய நல்வாழ்வு பாதுகாப்பு திட்டமானது எதிர்வரும் சுதந்திர தினம் அல்லது காந்தி பிறந்த தினத்தினை முன்னிட்டு, ஆகஸ்ட் 15, 2018 அல்லது அக்டோபர் 2, 2018 அன்று, மத்திய அரசால் அமுல் படுத்தப் படுமென எதிர்ப்பார்க்கப்படுகிறது.

கைத்தறி நெசவாளர்களுக்கும் கூடுதல் மருத்துவ காப்பீடு வழங்கும் பொருட்டு, அவர்களையும் இப்புதிய தேசீய நல்வாழ்வு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கொண்டு வருவது தொடர்பாக, மத்திய, மாநில அரசுகளால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. மத்திய அரசால் இப்புதிய தேசீய நல்வாழ்வு பாதுகாப்பு திட்டத்தின் வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்ட பின்னர், இது குறித்து

அரசால் உரிய முடிவுகள் எடுக்கப்பட்டு தமிழ்நாட்டிலுள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து மருத்துவ காப்பீடு வழங்கப்படும்.

இத்திட்டத்திற்கென, **2018–2019**ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.**1.50** கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 6.5 பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா, பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா மற்றும் மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா

### 6.5.1 கைத்தறி நெசவாளர் காப்பீட்டுத் திட்டங்கள்

கைத்தறி நெசவாளர்கள் மற்றும் உபத்தொழில் புரிவோர்களுக்கு ஆயுள் காப்பீடு மற்றும் விபத்தினால் ஏற்படும் உடல் ஊனத்திற்கான காப்பீடு வழங்கும் பொருட்டு மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தினை **2004–2005** ஆம் ஆண்டு முதல் மத்திய அரசின் நிதியுதவியுடன் இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்துடன் இணைந்து தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது. இக்காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் **18** வயது முதல் **59** வயது வரை உள்ள கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்கள், கூட்டுறவு அமைப்பு சாரா நெசவாளர்கள் மற்றும் உபதொழில் புரிபவர்கள் சேர்க்கப்பட்டனர். இத்திட்டங்களின் கீழ் ஒரு நெசவாளருக்கு ஆண்டொன்றுக்கு செலுத்தப்பட வேண்டிய

காப்பீடு கட்டணம் ரூ.330/– ஆயுள் காப்பீட்டு கழகத்துடன் இணைந்து மத்திய அரசு மற்றும் மாநில அரசால் வழங்கப்பட்டது. இத்திட்டமானது 31.05.2017 வரை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அதன் பின்னர், மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டமானது, 01.06.2017 முதல் பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா மற்றும் பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா ஆகிய திட்டங்களுடன் இணைக்கப்பட்டு, கூடுதல் காப்பீடு வழங்க வழி வகை செய்யப்பட்டுள்ளது. இம்மூன்று திட்டங்களும் இந்திய ஆயுள் காப்பீடு கழகத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**அ) 18 வயது முதல் 50 வயது வரை உள்ள நெசவாளர்கள்**

கூட்டுறவு அமைப்பின் கீழ் உள்ள நெசவாளர்கள் மற்றும் கூட்டுறவு அமைப்பு சாரா நெசவாளர்கள் மற்றும் உபதொழில் புரிபவர்களில் 18 வயது முதல் 50 வயது வரை உள்ளவர்கள் பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா மற்றும் பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா ஆகிய இரு திட்டங்களின் கீழ் உறுப்பினர்களாக சேர்க்கப்படுவர். இத்திட்டங்களின் கீழ் ஒரு நெசவாளருக்கு ஆண்டொன்றுக்கு செலுத்தப்படும் காப்பீடு

கட்டணம் விவரம் மற்றும் திட்டப் பயன்களின் விவரம் பின்வருமாறு:-

**காப்பீடு கட்டண அமைப்பு**

| பங்களிப்பு | வருடாந்திர காப்பீட்டு கட்டணம் (ரூபாய்) | | |
|---|---|---|---|
| | பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா | பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா | மொத்தம் |
| மத்திய அரசின் பங்கு | 150 | 12 | 162 |
| நெசவாளர் சார்பாக தமிழக அரசின் பங்கு | 80 | – | 80 |
| இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்தின் பங்கு | 100 | – | 100 |
| **மொத்தம்** | **330** | **12** | **342** |

பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா திட்டத்தின் கீழ் நெசவாளர்களால் ஆண்டொன்றுக்கு செலுத்தப்பட வேண்டிய காப்பீடு கட்டணம் தலா ரூ.80/– நெசவாளர்களின் சார்பாக தமிழக அரசால் செலுத்தப்படுகிறது.

**திட்டப் பயன்கள்**

**(i) பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா**

எக்காரணம் கொண்டும் இறக்க நேரிட்டால்: ரூ.2,00,000/–

### (ii) பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா

| விவரம் | பயன்கள் (ரூபாய்) |
|---|---|
| விபத்தினால் ஏற்படும் மரணம் | 2,00,000 |
| விபத்தினால் ஏற்படும் நிரந்தர முழு ஊனம் | 2,00,000 |
| விபத்தினால் ஏற்படும் நிரந்தர பகுதி ஊனம் | 1,00,000 |

கைத்தறி நெசவாளர்கள் மரணம் மற்றும் விபத்தினால் ஏற்படும் ஊனம் ஆகியவற்றிற்கு பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா திட்டத்தின் கீழ் ரூ.2,00,000/– வரை கூடுதல் காப்பீடு பயன்கள் வழங்கப்படுகின்றன.

**ஆ) 51 வயது முதல் 59 வயது வரை உள்ள நெசவாளர்கள்**

கைத்தறி நெசவாளர்கள் மற்றும் உபத்தொழில் புரிவோர்களில் பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா மற்றும் பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா திட்டங்களின் கீழ் சேர்க்க தகுதியில்லாத 51 வயது முதல் 59 வயது வரை உள்ளவர்கள், மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தின் கீழ் சேர்க்கப்படுவர். மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தின் கீழ் செலுத்தப்பட வேண்டிய காப்பீடு கட்டணம் மற்றும் காப்பீட்டு தொகை விவரங்கள் பின்வருமாறு:–

**காப்பீடு கட்டண அமைப்பு**

| பங்களிப்பு | மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்ட ஆண்டு காப்பீடு கட்டணம் (ரூபாய்) |
|---|---|
| மத்திய அரசின் பங்கு | 290 |
| நெசவாளர் சார்பாக தமிழக அரசின் பங்கு | 80 |
| இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்தின் பங்கு | 100 |
| **மொத்தம்** | **470** |

பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா திட்டத்தினைப் போலவே, மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்திலும் நெசவாளர்களால் ஆண்டொன்றுக்கு செலுத்தப்பட வேண்டிய காப்பீடு கட்டணம் தலா ரூ.80/– நெசவாளர்களின் சார்பாக தமிழக அரசால் செலுத்தப்படுகிறது.

**திட்டப் பயன்கள்**

| விவரம் | மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா பயன்கள் (ரூபாய்) |
|---|---|
| விபத்தினால் ஏற்படும் மரணம் | 1,50,000 |
| இயற்கை மரணம் | 60,000 |
| விபத்தினால் ஏற்படும் நிரந்தர ஊனம் | 1,50,000 |
| விபத்தினால் ஏற்படும் பகுதி ஊனம் | 75,000 |

கைத்தறி நெசவாளர்களின் மரணம் மற்றும் விபத்தினால் ஏற்படும் ஊனம் ஆகியவற்றிற்கு அவர்களின் நியமனதாரர்களுக்கு மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தின் கீழ் ரூ.1,50,000/– வரை காப்பீடு பயன்கள் வழங்கப்படுகின்றன.

பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா, பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா மற்றும் மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டங்களின் காப்பீடு காலமானது ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 1 முதல் அடுத்த ஆண்டு மே 31 வரை ஆகும். இது ஒவ்வொரு ஆண்டும் புதுப்பிக்கப்படும்.

தமிழ்நாட்டில், 2017–18 ஆம் காப்பீட்டு ஆண்டில், 18 வயது முதல் 50 வயது வரை உள்ள 77,944 நெசவாளர்கள் பிரதான் மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனா மற்றும் பிரதான் மந்திரி சுரக்ஷா பீமா யோஜனா திட்டங்களின் கீழும், 51 வயது முதல் 59 வயது வரை உள்ள 47,520 நெசவாளர்கள் மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தின் கீழும் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டில் ஆக மொத்தம் 1,25,464 கைத்தறி நெசவாளர்கள் மற்றும் உபதொழில் புரிபவர்களுக்கு கூடுதல் காப்பீட்டு பலன்கள் மற்றும் விபத்தினால் ஏற்படும் ஊனத்திற்கான காப்பீட்டு பலன்கள் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கென தமிழ்நாடு அரசால் **2017–2018** ஆம் ஆண்டிற்கான காப்பீட்டு கட்டணமாக **1,25,464** பயனாளிகளின் சார்பாக ரூ.**1,00,37,120** விடுவிக்கப் பட்டுள்ளது. **2017–2018** ஆம் ஆண்டில், இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்தால், **315** இறப்பு கோரிக்கைகள் தீர்வு செய்யப்பட்டு, பயனாளிகளுக்கு ரூ.**2.01** கோடி காப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இத்திட்டங்களுடன் சேர்த்து, காலமான கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களுக்கு கோ–ஆப்டெக்ஸ் நல்வாழ்வு தொகையாக ரூ.**25,000/–** வழங்கப்பட்டு வருகிறது. **2017–2018**–ஆம் ஆண்டில், கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்தால், **287** கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களை சேர்ந்த பயனாளிகளுக்கு ரூ.**71.75** இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

**2018–2019**–ஆம் ஆண்டிலும் இத்திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும், இதற்கென வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.**1.50** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 6.5.2. சிக்ஷா சஹாயக் யோஜனா கல்வி உதவித் தொகை

சிக்ஷா சஹாயக் யோஜனா திட்டத்தின் கீழ், மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தில் உறுப்பினர்களாக

சேர்க்கப்பட்டுள்ள கைத்தறி நெசவாளர்களின் இரண்டு குழந்தைகளுக்கு தலா ஆண்டொன்றுக்கு ரூ.1200/- வீதம் (ரூ.600 இரண்டு தவணைகளில்) ஒன்பதாம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு அதிகபட்சமாக நான்கு ஆண்டுகளுக்கு அல்லது 12ம் வகுப்பு முடிக்கும் வரை கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2017-2018ஆம் ஆண்டில், சிக்ஷா சஹாயக் யோஜனா திட்டத்தின் கீழ் இந்திய ஆயுள் காப்பீட்டு கழகத்தால், 20,824 மாணாக்கர்களுக்கு ரூ.1.25 கோடி கல்வி உதவி தொகை வழங்கப்பட்டுள்ளது.

**6.6 நெசவாளர் முத்ரா திட்டம்**

கைத்தறி நெசவாளர்களின் கைத்தறி தொழிலுக்கு தேவையான நடைமுறை மூலதனத்திற்கும், உபகரணங்கள் வாங்குவதற்கும் மானியத்துடன் கடன் வழங்கும் வகையில் முந்தைய நெசவாளர் கடன் அட்டை திட்டத்திற்கு மாற்றாக, ஜூன் 2016-முதல் மத்திய அரசால் கைத்தறி நெசவாளர்களுக்கென "நெசவாளர் முத்ரா திட்டம்" அறிமுகப்படுத்தப்பட்டு தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்கீழ், பருத்தி ரக தறிக்கு குறைந்த பட்சமாக ரூ.50,000 முதல் அதிக பட்சமாக ரூ.5,00,000

வரையிலும், பட்டு ரக தறிக்கு குறைந்த பட்சமாக ரூ.1,00,000 முதல் அதிக பட்சமாக ரூ.5,00,000 வரையிலும், 6 விழுக்காடு வட்டியில் வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படுகிறது. பெறப்படும் கடன் தொகையில் 20 விழுக்காடு, ரூ.10,000/–க்கு மிகாமல், விளிம்புத் தொகை மானியமாக மத்திய அரசால் வழங்கப்படுகிறது. மேலும் வங்கிகளால் விதிக்கப்படும் வட்டி விகிதத்திற்கும், பயனாளிகள் செலுத்தும் 6 விழுக்காடு வட்டிக்கும் உள்ள வித்தியாச தொகையில், 7 விழுக்காட்டிற்கு மிகாமல் வட்டி மானியமாக வழங்கப்படுகிறது. இது தவிர, வழங்கப்படும் கடன் தொகைக்கு, மத்திய அரசால் சிறு, குறு தொழில் நிறுவனங்களுக்கான கடன் பொறுப்புறுதிக் குழு நிதியில் இருந்து, (CGTMSE) கடன் பொறுப்புறுதி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ், 2017–2018 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில், 15,000 கைத்தறி நெசவாளர்களுக்கு கடன் வழங்க உத்தேசிக்கப்பட்டது. தமிழ்நாடு அரசின் சீரிய முயற்சிகள் மற்றும் தொடர் நடவடிக்கையின் பலனாக, நமது மாநிலத்தில் 2017-2018 ஆம் ஆண்டில் 18,488 நெசவாளர் முத்ரா கடன்கள் ரூ.90.12 கோடி அளவில் விடுவிக்கப்பட்டுள்ளது. இது 2016–2017ஆம் ஆண்டில் விடுவிக்கப்பட்ட 17,031 கடன்கள் மற்றும் ரூ.82.38 கோடி கடன் தொகையை விட அதிகமாகும்.




**கோயம்புத்தூரில் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்களால் முத்ரா கடன்கள் வழங்கப்பட்டது**

**2017–2018** ஆம் ஆண்டில் நெசவாளர் முத்ரா திட்டத்தின் சரக வாரியான முன்னேற்ற விவரம் பின்வருமாறு **:–**

| வ. எண் | சரகம் | வழங்கப்பட்டுள்ள முத்ரா கடன்களின் எண்ணிக்கை | விடுவிக்கப்பட்டுள்ள கடன் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் | 1,109 | 554.50 |
| 2 | திருநெல்வேலி | 500 | 241.05 |
| 3 | திருவண்ணாமலை | 1,323 | 661.50 |
| 4 | திண்டுக்கல் | 1,201 | 590.50 |
| 5 | மதுரை | 466 | 233.00 |
| 6 | வேலூர் | 633 | 316.50 |
| 7 | திருவாரூர் | 108 | 54.00 |
| 8 | சேலம் | 1,172 | 399.11 |

| வ. எண் | சரகம் | வழங்கப்பட்டுள்ள முத்ரா கடன்களின் எண்ணிக்கை | விடுவிக்கப்பட்டுள்ள கடன் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 9 | பரமக்குடி | 1,013 | 506.50 |
| 10 | திருப்பூர் | 1,013 | 506.50 |
| 11 | விருதுநகர் | 1,734 | 867.00 |
| 12 | காஞ்சிபுரம் | 1,607 | 803.50 |
| 13 | ஈரோடு | 2,141 | 1070.50 |
| 14 | கும்பகோணம் | 1,404 | 702.00 |
| 15 | கடலூர் | 512 | 256.00 |
| 16 | திருச்சிராப்பள்ளி | 401 | 200.50 |
| 17 | நாகர்கோவில் | 530 | 265.00 |
| 18 | திருச்செங்கோடு | 915 | 456.00 |
| 19 | கரூர் | 625 | 287.75 |
| 20 | திருவள்ளூர் | 81 | 40.50 |
| மொத்தம் | | 18,488 | 9011.91 |




ஐந்தாண்டுகளில் வழங்கப்பட்ட நெசவாளர் கடன் மற்றும் நெசவாளர் முத்ரா கடன்கள்

**2016–2017** மற்றும் **2017–2018** ஆம் ஆண்டுகளில் நெசவாளர் முத்ரா கடன் திட்டத்தினை செயல்படுத்துவதில் இந்தியாவில் தமிழ்நாடு முதல் இடத்தினை தக்க வைத்துள்ளது.

## 6.7 தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கான இணையவழி பொது கணக்கு மென்பொருள்

தமிழகத்தில் கைத்தறி தொழிலுக்கான "புத்துயிரூட்டுதல், சீர்திருத்தம் மற்றும் மறுசீரமைப்பு" திட்டத்தினை மத்திய அரசும், தமிழ்நாடு அரசும் இணைந்து **2012–2013** ஆண்டு முதல் செயல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின் கீழ், **718** கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்) மற்றும் **520** தனியார் நெசவாளர்களுக்கு மறுமூலதன நிதியுதவிக்கென ரூ.**147.71** கோடி வழங்கப்பட்டுள்ளது. இதில், மத்திய அரசு ரூ.**116.31** கோடியும், தமிழ்நாடு அரசு ரூ.**31.40** கோடியும் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் பயனடைந்த **718** தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் மேற்காணும் மறு மூலதன நிதியுதவி தவிர, கணினி மற்றும் உபகரணங்கள் மற்றும் பொது கணக்கு மென்பொருள் வாங்குவதற்கென கூடுதல் நிதியாக தலா ரூ.**60,000/–** வீதம் மொத்தம் ரூ.**430.80** இலட்சம் மத்திய

அரசால் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி, 718 கணினி மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், புத்துயிரூட்டுதல், சீர்திருத்தம் மற்றும் மறுசீரமைப்பு திட்டத்தின் கீழ் பயன்பெற இயலாத 166 தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மூலம் வட்டியில்லா கடன் வழங்கப்பட்டு, 166 கணினி மற்றும் உபகரணங்கள் கொள்முதல் செய்து வழங்கப்பட்டுள்ளது.

மேலும், நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ஒளிவுமறைவற்ற, சீரான, துல்லியமான முறையில் செயல்படும் பொருட்டு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் பொதுவான இணையவழி பொது கணக்கு மென்பொருளானது, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை நிறுவனத்துடன் இணைந்து உருவாக்கம் செய்யப்பட்டுள்ளது. இப்பொது கணக்கு மென்பொருளில் சங்க விவரங்கள், விரல் ரேகை பதிவுடன் கூடிய உறுப்பினர் விவரங்கள், மூலப்பொருள் கொள்முதல், சாயமிடுதல், விரல் ரேகை பதிவுடன் கூடிய அங்கீகாரத்துடன் மூலப்பொருள் விநியோகம் மற்றும் நெசவு செய்த ஜவுளிகள் பெறுகை, மூலப்பொருள் இருப்பு, மதிப்பீட்டாளர் சீட்டு, விலை நிர்ணயம், மின்னணு பட்டை குறியீட்டுடன் கூடிய

விற்பனை மேலாண்மை, அதன் மூலம் விற்பனை பட்டியல்கள் தயார் செய்தல், தீர்ந்த சரக்கிருப்பு, விற்பனையுடன் இணைந்த திட்டங்கள், நலத்திட்டங்கள், கணக்குகள், தகவல் மேலாண்மை அமைப்பு உள்ளிட்ட சங்கப் பணிகளில் துவக்கம் முதல் இறுதி வரையிலான அனைத்து நடவடிக்கைகளும் உள்ளடக்கிய ஒரே தீர்வாக அமைகிறது. இப்பொது கணக்கு மென்பொருளானது நிகழ்நேர அடிப்படையில் செயல்படுத்தி கண்காணிக்கும் வகையிலான இணையவழி மென்பொருளாகும்.

இம்மென்பொருளானது முன்னோட்ட அடிப்படையில் முதற்கட்டமாக பட்டு, பருத்தி, பட்டு மற்றும் பருத்தி மற்றும் தொழிலியல் ஆகிய வகைப்பாடுகளில் தேர்வு செய்யப்பட்ட **5** கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இம்மென்பொருளுக்கான மூன்றாம் தரப்பு பாதுகாப்பு தணிக்கையானது தமிழ்நாடு மின் ஆளுமை முகமை நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தால் முடிக்கப்பட்டுள்ளது.

இணையவழி பொது கணக்கு மென்பொருளுக்கான இணைய முகவரியானது, சென்னை, தேசிய தகவலியல் மையம் மூலம் பதிவு செய்யப்பட்டு, பாதுகாப்பான அணுகுதலுக்கான சான்றிதழ் (Secured Socket Layer Certificate) எல்காட்

நிறுவனத்தின் மூலம் பெறப்பட்டுள்ளது. இணையவழி பொது கணக்கு மென்பொருளின் பத்திரப்பட்ட இணைய முகவரியானது ``https://handtexcas.tn.gov.in'' ஆகும். பொது கணக்கு மென்பொருளை கையாளும் பொருட்டு துறை பணியாளர்கள் மற்றும் சங்க பணியாளர்களுக்கு கருத்தியல் பயிற்சி மற்றும் நடைமுறை பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், இப்பொது கணக்கு மென்பொருளை பயன்படுத்துவது குறித்து அதன் உபயோகிப்பாளர்கள் உடனடி குறிப்பு பெறும் பொருட்டு, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பயன்படுத்துபவர் கையேடு (user manual) தயார் செய்து வழங்கப்பட்டுள்ளது.

எல்காட் நிறுவனத்தின் ஆலோசனைப்படி, இம்மென்பொருளானது முதற்கட்டமாக தமிழ்நாடு மாநில தரவு மையத்தின் (Tamilnadu State Data Centre) மேகக் கணினியில் (CLOUD Environment) பதிவேற்றம் செய்யப்பட்டு, 1048 தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை, 58 சங்கங்கள் தங்களது கணக்குகளை பதிவேற்றம் செய்துள்ளன. மீதமுள்ள சங்கங்களால் தங்களது கணக்குகள் செப்டம்பர் 2018–க்குள் பதிவேற்றம் செய்யப்படும்.

ஒட்டுமொத்தத்தில், இந்த இணையவழி பொது கணக்கு மென்பொருளானது மாநிலத்தில் உள்ள அனைத்து தொடக்க கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களும் நிறைவான செயல்திறனுடன் செயல்படவும், பகுத்தாய்வு செய்யவும் மற்றும் அரசின் திட்டங்களை செயல்படுத்தவும், கண்காணிக்கவும், அவற்றின் கட்டுப்பாடுகளுக்கும் காரணியாக செயல்படுகிறது.

## 6.8 தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டு நெய்யும் தொழிலாளர் நலவாரியம்

நெசவாளர் சமூகத்தின் நலனை உறுதி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர் வாரியம் மற்றும் தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டுத் தொழிலாளர் வாரியம் உட்பட **9** நலவாரியங்கள் **2000–2001** ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டன. தமிழ்நாடு கைத்தறி மற்றும் கைத்தறி பட்டுத் தொழிலாளர் நல வாரியம் **21.07.2004** முதல் தமிழ்நாடு உடல் உழைப்பு வாரியத்துடன் இணைக்கப்பட்டது. இதன் பின்னர் அரசாணைப்படி இந்த வாரியம் தொழிலாளர் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் **01.09.2006** முதல் தனியே செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இவ்வாரியத்தின் தலைவராக உள்ளார். இந்த வாரியத்தில் ஏழு அரசுப் பிரதிநிதிகள், ஏழு தொழில் அளிப்பவர்களின் பிரதிநிதிகள்

மற்றும் ஆறு தொழிலாளர் பிரதிநிதிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இந்த வாரியத்தால் நிதியுதவி, கல்வி உதவி தொகை, இயற்கை மரணம் / விபத்து / உடல் ஊனம் ஆகியவைகளுக்கான காப்பீடு அளிக்கப்பட்டு வருகிறது. அதன் விபரம் பின்வருமாறு:-

| வ. எண் | | விவரம் | ஒரு நெசவாளர் உறுப்பினருக்கு வழங்கப்படும் நிதி உதவி (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | **விபத்து காப்புறுதி** | | |
| | i | விபத்தால் மரணம் | 1,00,000 |
| | ii | விபத்தால் ஊனம் (ஊனத்தின் தன்மையை பொருத்து) | 1,00,000 வரை |
| | iii | செயற்கை உறுப்புகள் மற்றும் சக்கர நாற்காலி | |
| 2. | **இயற்கை மரணம்** | | 15,000 |
| 3. | **ஈமச்சடங்கு உதவி** | | 2,000 |
| 4. | **கல்வி உதவி** | | |
| | i | 10ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை | 1,000 |
| | ii | 10ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,000 |
| | iii | 11ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை | 1,000 |
| | iv | 12ஆம் வகுப்பு பயிலும் பெண் குழந்தை | 1,500 |
| | v | 12ஆம் வகுப்பு தேர்ச்சி | 1,500 |
| | vi | இளநிலை பட்டப்படிப்பு | 1,500 |
| | vii | இளநிலை பட்டப்படிப்பு (விடுதி வசதி) | 1,750 |
| | viii | முதுநிலை பட்டப்படிப்பு | 4,000 |
| | ix | முதுநிலை பட்டப்படிப்பு (விடுதி வசதி) | 5,000 |

| வ. எண் | | விவரம் | ஒரு நெசவாளர் உறுப்பினருக்கு வழங்கப்படும் நிதி உதவி (ரூபாயில்) |
|---|---|---|---|
| | x | தொழில்நுட்ப படிப்பு | 4,000 |
| | xi | தொழில்நுட்ப படிப்பு (விடுதி வசதி) | 6,000 |
| | xii | தொழில்நுட்ப மேற்படிப்பு | 6,000 |
| | xiii | தொழில்நுட்ப மேற்படிப்பு (விடுதி வசதி) | 8,000 |
| | xiv | ஐடிஐ / பட்டயப்படிப்பு | 1,000 |
| | xv | ஐடிஐ / பட்டயப்படிப்பு (விடுதி வசதி) | 1,200 |
| 5. | **திருமண உதவி** | | |
| | (i) | ஆண் | 3,000 |
| | (ii) | பெண் | 5,000 |
| 6. | **மருத்துவ உதவிகள்** | | |
| | i) | மகப்பேறு உதவி | 6,000 |
| | ii) | கருக்கலைப்பு /கருச்சிதைவு | 3,000 |
| | iii) | மூக்குக்கண்ணாடிக்கான உதவி | **500** வரை |
| 7. | **ஓய்வூதியம்** | | 1,000 (மாதம் ஒன்றுக்கு) |

இதுவரை, இவ்வாரியத்தில் **2,81,843** நெசவாளர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்வாரியத்தின் மூலம் **2,84,572** நெசவாளர்களுக்கு மொத்தம் ரூ.**75.56** கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. **2017–2018** ஆம் ஆண்டில் **17,430** பயனாளிகளுக்கு ரூ.**8.46** கோடி அளவிற்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**6.9 தமிழ்நாடு விசைத்தறி நெசவுத் தொழிலாளர் நலவாரியம்**

விசைத்தறி நெசவுத் தொழிலாளர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை செயல்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைபடுத்துதல்) சட்டம் 1982 –ன் கீழ் "தமிழ்நாடு விசைத்தறி நெசவுத் தொழிலாளர் நலவாரியம்" என்ற அமைப்பினை தமிழக அரசு உருவாக்கியது. இந்த நலவாரியத்தின் மூலம் விபத்து காப்பீட்டுப் பயன், இயற்கை மரணத்திற்கான காப்பீட்டுப் பயன், ஈமச்சடங்கு செலவினத்திற்கான உதவித்தொகை, கல்வி, திருமணம், மகப்பேறு, கண் கண்ணாடி வாங்குவதற்கும் மற்றும் ஓய்வூதிய பயன் போன்றவற்றிற்கான உதவித்தொகைகள் விசைத்தறி நெசவு தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை, இவ்வாரியத்தில் **1,60,918** விசைத்தறி நெசவு தொழிலாளர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு, ரூ.**34.09** கோடி நிதியுதவியாக **1,35,847** பயனாளிகளுக்கு **31.03.2018** வரை வழங்கப்பட்டுள்ளது.

**2017–2018** ஆம் ஆண்டில் **2,353** விசைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் புதிய உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு, **13,184** பயனாளிகளுக்கு ரூ.**4.71** கோடி நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## 6.10 நெசவாளர்களுக்கான முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், **08.05.2013** அன்று சட்டமன்றப் பேரவை விதி **110**–ன் கீழ் அறிவிக்கப்பட்டவாறு, முதலமைச்சரின் சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் நெசவாளர்களுக்கு ரூ.**260** கோடி செலவில் **10,000** பசுமை வீடுகள் கட்டப்பட்டுள்ளது. நெசவாளர்களுக்கான பசுமை வீடுகள் ஒவ்வொன்றும் தலா **365** சதுர அடி பரப்பளவில் ரூ.**2.60** இலட்சம் (கட்டுமானத்திற்கு ரூ.**2.30** இலட்சம் மற்றும் சூரிய மின்சக்திக்கு ரூ.**0.30** இலட்சம்) செலவில், நெசவாளர்கள் தங்கள் இல்லங்களிலேயே கைத்தறிகளை நிறுவி தொழில் செய்யும் வகையில் கட்டி வழங்கப்பட்டுள்ளது.

நெசவாளர்களுக்கான **10,000** பசுமை வீடுகளும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையுடன் இணைந்து கட்டி முடிக்கப்பட்டுள்ளது. பசுமை வீடுகளில் சூரிய சக்தியுடன் கூடிய மின்விளக்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதே இத்திட்டத்தின் முக்கியமான அங்கமாகும்.

## 6.11 டாக்டர் எம்.ஜி.ஆர் கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளையின் கீழ் கல்வி உதவித் தொகை

நெசவாளர்களது வாரிசுகள் தொடர்ந்து உயர்கல்வி கற்பதை ஊக்குவிக்கும் பொருட்டு, டாக்டர் எம்.ஜி.ஆர்.கைத்தறி நெசவாளர் நல்வாழ்வு அறக்கட்டளை **1986**–ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. பன்னிரெண்டாம் மற்றும் பத்தாம் வகுப்பில் முதல் இரண்டு நிலை பெறும் மாணவர் மற்றும் மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

பன்னிரெண்டாம் மற்றும் பத்தாம் வகுப்பில் பெறப்பட்ட மதிப்பெண்கள் அடிப்படையில் முதல் இரண்டு நிலை பெறும் **33** பாடப்பிரிவுகளில் (மாணவர் மற்றும் மாணவியருக்கு) அவர்கள் அப்படிப்பினை நிறைவு செய்யும் காலம் வரையிலும் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் **132** மாணாக்கர்கள் (**66** மாணவர் + **66** மாணவியர்) கல்வி உதவித் தொகை பெற்று வருகின்றனர்.

**33** பிரிவுகளில் கல்வி உதவித் தொகை வழங்கப்படும் விபரம் பின்வருமாறு:-

| வ. எண் | படிப்பு | கல்வி தகுதி | ஆண்டு | தற்போது முதல் நிலை மாணவர் களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை (ரூபாயில்) | இரண்டாம் நிலை மாணவர் களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|
| 1 | எம்.பி.பி.எஸ். | +2 | 5 | 7,500 | 5,000 |
| 2 | பி.டி.எஸ். | +2 | 5 | 7,500 | 5,000 |
| 3 | பி.வி.எஸ்.சி. | +2 | 5 | 7,500 | 5,000 |
| 4 | எம்.எஸ். (தகவல் தொழில்நுட்பம்) | +2 | 5 | 7,500 | 5,000 |
| 5 | பி. இ. | +2 | 4 | 7,500 | 5,000 |
| 6 | பி.டெக். | +2 | 4 | 7,500 | 5,000 |
| 7 | வேளாண்மை / தோட்டக்கலை | +2 | 4 | 4,000 | 2,500 |
| 8 | பி.பார்ம் | +2 | 4 | 4,000 | 2,500 |
| 9 | பி.எஸ்.சி.நர்சிங் | +2 | 4 | 4,000 | 2,500 |
| 10 | எம். இ. | பி.இ. | 2 | 5,000 | 3,500 |
| 11 | எம்.டெக். | பி.இ /பி.டெக் | 2 | 5,000 | 3,500 |
| 12 | எம்.டி. | எம்.பி.பி.எஸ். /பி.டி.எஸ். | 2 | 5,000 | 3,500 |
| 13 | எம்.எஸ். | எம்.பி.பி.எஸ். /பி.டி.எஸ். | 2 | 5,000 | 3,500 |
| 14 | எம்.காம். | இளங்கலை பட்டப்படிப்பு | 2 | 5,000 | 3,500 |
| 15. | எம்.ஏ. | இளங்கலை பட்டப்படிப்பு | 2 | 5,000 | 3,500 |
| 16. | எம்.எஸ்சி. | இளங்கலை பட்டப்படிப்பு | 2 | 5,000 | 3,500 |
| 17. | எம்.பி.ஏ. | இளங்கலை பட்டப்படிப்பு | 2 | 5,000 | 3,500 |
| 18. | எம்.சி.ஏ. | இளங்கலை பட்டப்படிப்பு | 2 | 5,000 | 3,500 |

| வ. எண் | படிப்பு | கல்வி தகுதி | ஆண்டு | தற்போது முதல் நிலை மாணவர் களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை (ரூபாயில்) | இரண்டாம் நிலை மாணவர் களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|
| 19. | பி.ஏ. | +2 | 3 | 4,000 | 2,500 |
| 20. | பி.எஸ்சி. | +2 | 3 | 4,000 | 2,500 |
| 21. | பி.காம். | +2 | 3 | 4,000 | 2,500 |
| 22. | பி.பி.ஏ. | +2 | 3 | 4,000 | 2,500 |
| 23. | பி.பி.எம். | +2 | 3 | 4,000 | 2,500 |
| 24. | பி.சி.ஏ. | +2 | 3 | 4,000 | 2,500 |
| 25. | பி.எஸ்சி.(கணினி அறிவியல்) | +2 | 3 | 4,000 | 2,500 |
| 26. | பாலிடெக்னிக் | 10ம் வகுப்பு | 3 | 4,000 | 2,500 |
| 27. | இ.ஆ.ப./ இ.கா.ப.வங்கி அலுவலர் தேர்வு | பட்டப்படிப்பு | 1 | 4,000 | 2,500 |
| 28. | ஹோட்டல் நிர்வாகம் மற்றும் சமையல் தொழில் நுட்பம் | +2 | 3 | 4,000 | 2,500 |
| 29. | விலை மதிப்பீடு | பட்டப்படிப்பு | 3 | 4,000 | 2,500 |
| 30. | கைத்தறி தொழில்நுட்ப பயிற்சி (டிப்ளமோ) | +2 | 3 | 4,000 | 2,500 |
| 31. | பிசியோதெரபி (டிப்ளமோ) | +2 | 2 | 4,000 | 2,500 |
| 32. | +2 அதிக மதிப்பெண் | +2 | 1 | 4,000 | 2,500 |
| 33. | 10ம் வகுப்பு அதிக மதிப்பெண் | 10ம் வகுப்பு | 1 | 4,000 | 2,500 |

**2018–2019 ஆம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்படும்.**

**6.12 கூட்டுறவு நூற்பாலை மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்**

கூட்டுறவு நூற்பாலைகள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டம் கடந்த 2013-2014ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இந்த திட்டத்தின் கீழ், பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்புகளில் ஆலையளவில் அதிக மதிப்பெண்கள் பெற்று முதல் மூன்று நிலைகளில் வரும் தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு முறையே ரூ.5,000, ரூ.3,000, ரூ.2,000 மற்றும் ரூ.10,000, ரூ.7,500, ரூ.5,000 வீதம் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது.

**6.13 இந்திய கைத்தறி தொழில்நுட்ப பயிலகத்தில் பயிலும் மாணாக்கர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்குதல்**

சேலத்தில் உள்ள இந்திய கைத்தறி தொழில் நுட்ப பயிலகத்தில் பயிற்றுவிக்கப்படும் கைத்தறி மற்றும் துணிநூல் தொழில்நுட்ப கல்வி பயில கைத்தறி நெசவாளர்களின் வாரிசுகளை ஊக்குவிக்கும் விதமாக, மூன்று ஆண்டு பட்டயப் படிப்பிற்கு மாணவ/மாணவியர்கள் தேர்வு செய்யப்படும்போது

அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுகிறது. மேலும், தமிழக அரசு, சேலத்தில் உள்ள இந்திய கைத்தறி தொழில்நுட்ப பயிலகத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் தொழில்நுட்பத்தில் மூன்று ஆண்டுகள் பட்டயப்படிப்பு பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு **1977** ஆம் ஆண்டு முதல் கீழ்க்காணும் விவரப்படி கல்வி உதவித் தொகை வழங்கி வருகிறது:–

| **ஆண்டு** | **மாணவ/ மாணவியருக்கு வழங்கப்படும் உதவித் தொகை (ஒரு மாதத்திற்கு)** | **மைய அரசின் 50 விழுக்காடு பங்கு (ஒரு மாதத்திற்கு)** | **தமிழக அரசின் 50 விழுக்காடு பங்கு (ஒரு மாதத்திற்கு)** |
|---|---|---|---|
| | **(தொகை ரூபாயில்)** | | |
| முதல் ஆண்டு | 1,000 | 500 | 500 |
| இரண்டாம் ஆண்டு | 1,100 | 550 | 550 |
| மூன்றாம் ஆண்டு | 1,200 | 600 | 600 |

மேலும், புத்தகங்கள் வாங்குவதற்கு ஒரு மாணவ/ மாணவியருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1,000/– எதிர்பாராச் செலவினம் மற்றும் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இது தவிர, இரண்டாம் ஆண்டு மாணவ/மாணவியர்களுக்கு கல்விச் சுற்றுலா படியாக ஆண்டொன்றுக்கு ரூ.1,000/–ம் மற்றும் மூன்றாம் ஆண்டு பயிலும்

மாணவ / மாணவியர்களுக்கு திட்டப் பணிகளுக்கான உதவித் தொகை ரூ.500/–ம் வழங்கப்பட்டு வருகிறது. இக்கல்வி உதவித் தொகை, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கூட்டுறவு கல்வி நிதியிலிருந்து வழங்கப்படுகிறது.

கர்நாடக மாநிலத்திலுள்ள கடாக், ஆந்திரப்பிரதேச மாநிலத்திலுள்ள வெங்கடகிரி மற்றும் கேரள மாநிலத்திலுள்ள கண்ணூர் ஆகிய இடங்களிலுள்ள இந்திய கைத்தறி தொழில்நுட்ப பயிலகத்தில் தமிழக அரசு இட ஒதுக்கீட்டில் பயின்று வரும் மாணவ/மாணவியருக்கும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் கல்வி நிதியிலிருந்து கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

2017–2018ஆம் ஆண்டில் தமிழக அரசு இட ஒதுக்கீட்டில், இந்தியாவில் உள்ள பல்வேறு இந்திய கைத்தறி தொழில்நுட்ப பயிலகங்களில் மூன்று ஆண்டு கைத்தறி மற்றும் துணிநூல் தொழில்நுட்ப பட்டயப் படிப்பில் பயின்று வரும் 107 மாணவ மாணவியருக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.8,48,000/– வழங்கப்பட்டுள்ளது.

## 7. துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்கள்

### 7.1 கைத்தறி நெசவாளர்களுக்கும், கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கும் தேசிய விருது மற்றும் தேசிய தகுதிச் சான்றிதழ் வழங்குதல்

தேசிய கைத்தறி வளர்ச்சி திட்டத்தின் கீழ் கைத்தறி நெசவாளர்களுக்கு விருது வழங்கும் திட்டத்தை மைய அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மைய அரசு கைத்தறி தொழிலில் கைத்தறி நெசவாளர்களின் சிறப்புத் திறனுக்காக தேசிய விருது மற்றும் தேசிய தகுதிச் சான்றிதழ் ஆகியவற்றை பின்வருமாறு வழங்கி கௌரவிக்கிறது.

**அ) தேசிய விருது** – கைத்தறி நெசவாளர்களின் மிகச்சிறந்த கைத்திறன் வாய்ந்த பங்களிப்பினை அங்கீகரிக்கும் வகையிலும் கைத்தறி நெசவினை மேம்படுத்தும் வகையிலும் தேசிய விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது ரூ.1,50,000/– ரொக்கப் பரிசு, ஒரு தாமிரப் பத்திரம், ஒரு சால்வை மற்றும் ஒரு சான்றிதழைக் கொண்டதாகும்.

**ஆ) தேசிய தகுதிச் சான்றிதழ் –** மிகச்சிறந்த கைத்தறி நெசவாளர்களுக்கு தேசிய தகுதிச் சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது கைத்தறி இரகத்தின் வளர்ச்சி குறிப்பிடத்தக்க பங்களிப்பினை வழங்கிய தகுதி அளவீடுகளை

பூர்த்தி செய்த தனிச்சிறப்பான திறமை வாய்ந்த நெசவாளருக்கு வழங்கப்படுகிறது. தேசிய தகுதிச் சான்றிதழ் ரூ.75,000/– ரொக்கப் பரிசும் ஒரு சான்றிதழும் கொண்டதாகும்.

இவ்விரு விருதுகளை தவிர, மைய அரசு தேசிய விருது மற்றும் தேசிய தகுதிச் சான்றிதழ்களை கைத்தறியின் பின்வரும் இனங்களில் வழங்குகிறது.

(i) கைத்தறி இரக வளர்ச்சிக்கான வடிவமைப்பு மேம்பாடு

(ii) கைத்தறி இரகங்களை சந்தைப்படுத்துதல்

மைய அரசு, 2016ஆம் ஆண்டுக்கான தேசிய விருது, தேசிய தகுதிச் சான்றிதழ் மற்றும் கைத்தறி இரகங்களை சந்தைப்படுத்துவதற்கான தகுதிச் சான்றிதழ்களை பெற தகுதி பெற்ற சிறந்த நெசவாளர்களை தேர்வு செய்து பிப்ரவரி 2018ல் பின்வருமாறு அறிவித்துள்ளது.

(i) சிறந்த கைத்திறனுக்கான 2016ஆம் ஆண்டின் தேசிய விருது காஞ்சிபுரம் முருகன் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர் திருமதி கே. மகேஸ்வரி, (உறுப்பினர் எண் 966) என்பவருக்கு "**காஞ்சிபுரம் கோர்வை பட்டுப் புடவை**" இரகத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

(ii) சிறந்த நெசவாளருக்கான 2016ஆம் ஆண்டின் தேசிய தகுதிச் சான்றிதழ் காஞ்சிபுரம் முருகன் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர் திருமதி ப்பி. பார்வதி, (உறுப்பினர் எண் 1992) என்பவருக்கு "**காஞ்சிபுரம் பட்டுப் புடவை**" இரகத்திற்காக வழங்கப்பட்டுள்ளது.

(iii) கைத்தறி இரகங்களை சந்தைப்படுத்துவதற்கான 2016ஆம் ஆண்டின் தேசிய விருது காஞ்சிபுரம் அறிஞர் அண்ணா பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

(iv) கைத்தறி இரகங்களை சந்தைப்படுத்துவதற்கான 2016ஆம் ஆண்டின் தேசிய தகுதிச் சான்றிதழ் காஞ்சிபுரம் முருகன் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

## 7.2 தேசிய கைத்தறி தினம்

1905–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7ம் நாள் அன்று தொடங்கிய 110 ஆண்டுகள் பழமையான சுதேசி இயக்கத்தினை நினைவுகூறும் வகையிலும், கைத்தறி தொழிலின் முக்கியத்துவம் மற்றும் நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சிக்கு அதன் பங்களிப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், கைத்தறித்

தொழிலை மேம்படுத்தி கைத்தறி நெசவாளர்களின் வருவாயை உயர்த்தவும் அவர்களின் பெருமையை அதிகரிக்கவும் ஆகஸ்ட் 7-ஆம் தேதி தேசிய கைத்தறி தினமாக அனுசரிக்க மத்திய அரசு அறிவித்தது.

மத்திய அரசின் அறிவிப்பை தொடர்ந்து முதலாவது தேசிய கைத்தறி தினமானது **07.08.2015** அன்று சென்னையில் கொண்டாடப்பட்டு இந்தியா கைத்தறி வணிகமுத்திரை அறிமுகப்படுத்தப்பட்டது. கைத்தறி ஆடைகளின் தலையாய முக்கியத்துவம் மற்றும் கைத்தறி நெசவாளர்களின் பங்களிப்பினை அடையாளம் கண்டறியவும், அவர்களின் ஈடுபாட்டினை மேம்படுத்தவும், கைத்தறி நெசவாளர்களின் நலனை பாதுகாக்கும் முனைப்புடனும், தமிழக அரசு மூன்றாவது தேசிய கைத்தறி தினத்தை **01.08.2017** முதல் **07.08.2017** வரை வெகு சிறப்பாக கொண்டாடியது.

கைத்தறி தொழிலின் முக்கியத்துவம் மற்றும் மாநிலத்தின் சமூக பாதுகாப்பு வளர்ச்சிக்கு அதன் பங்களிப்பு குறித்த புகழ் பரப்பும் நோக்கத்துடன் மூன்றாவது தேசிய கைத்தறி தினத்தின் போது பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- **07.08.2017 அன்று நடைபெற்ற தேசிய கைத்தறி தின கொண்டாட்டத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர்**

**அவர்கள் பங்கேற்று** நெசவாளர்களுக்கு பரிசுகளும் விருதுகளும் வழங்கினார்.

- தேசிய கைத்தறி தினம் **2017**ஐ முன்னிட்டு கைத்தறி இரகங்களை விளம்பரப்படுத்தும் வகையில் மாநிலத்தின் **அனைத்து மாவட்ட தலைநகரங்களில் விற்பனை முகாம்கள் நடத்தப்பட்டு ரூ.11.43 கோடி மதிப்பிற்கு கைத்தறி ஆடைகள் விற்பனை மேற்கொள்ளப்பட்டன. ஈரோடு சரகத்தில் ரூ.106.68 இலட்சம் அளவிற்கு அதிக அளவில் கைத்தறி விற்பனை மேற்கொள்ளப்பட்டன.**

- **01.08.2017** முதல் **07.08.2017** முடிய சென்னை, கலைவாணர் அரங்கத்தில் கோஆப்டெக்ஸ் நிறுவனத்தின் மூலம் தேசிய கைத்தறி கண்காட்சி – “**ஹேண்ட்–டெக்ஸ் 2017**” நடத்தப்பட்டு ரூ.**1.62** கோடி மதிப்பிற்கு கைத்தறி இரகங்கள் விற்பனை மேற்கொள்ளப்பட்டன.

- தேசிய கைத்தறி தின கொண்டாட்டங்களின்போது கைத்தறி தொழிலை விளம்பரப்படுத்தும் வகையில் தேசிய ஆடை அலங்கார வடிவமைப்பு மையம் மூலம் ஆடை அலங்கார அணிவகுப்பும் நடைபெற்றது.



மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 07.08.2017 அன்று சென்னையில் நடைபெற்ற தேசிய கைத்தறி தின கொண்டாட்டத்தில் சிறந்த நெசவாளர் விருதினை வழங்குதல்



“ஹேண்ட்–டெக்ஸ் 2017” கண்காட்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர், மீன்வளம் அமைச்சர் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் காஞ்சிபுரம் பட்டுப் புடவையின் நேர்த்தியான கைத்திறனைப் பார்வையிடுதல்

## 7.3 தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்ட செயலாக்கம்

அரசு, **2015-2016**ஆம் ஆண்டில் "தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டத்தை" அறிமுகப்படுத்தியது. தமிழ்நாடு புதுமை முயற்சிகள் ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் ரூ.**9.00** கோடி மதிப்பில் **2015–2016** முதல் **2017-2018** முடிய மூன்று ஆண்டுகளுக்கு **6000** மின்மோட்டார் பொருத்திய சித்திர நெசவு இழுவை இயந்திரங்கள் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வழங்கியதோடு, "மாநில புதுமை முயற்சிகள் நிதி"யிலிருந்து ரூ.**675.00** இலட்சத்தை மாநில அரசின் பங்காக ஒப்பளிப்பு செய்து வழங்கியது. இதற்கிணங்க **2015–2016** முதல் **2017–2018** வரை **6000** மின் மோட்டார் பொருத்திய சித்திர நெசவு இழுவை இயந்திரங்கள் ரூ.**675.00** இலட்சம் செலவில் கீழ்க்காணும் சரகங்களில் உள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டது:-

| வ. எண் | சரகத்தின் பெயர் | ஆண்டு | | |
|---|---|---|---|---|
| | | 2015–16 | 2016–17 | 2017–18 |
| 1 | கோயம்புத்தூர் | 200 | 715 | 160 |
| 2 | திண்டுக்கல் | 100 | – | 80 |
| 3 | ஈரோடு | 400 | – | 350 |
| 4 | காஞ்சிபுரம் | 400 | 445 | – |
| 5 | கும்பகோணம் | 300 | 365 | 80 |
| 6 | பரமக்குடி | 100 | – | 80 |

| வ. எண் | சரகத்தின் பெயர் | ஆண்டு | | |
|---|---|---|---|---|
| | | **2015–16** | **2016–17** | **2017–18** |
| 7 | சேலம் | 100 | 380 | 200 |
| 8 | திருப்பூர் | 200 | 220 | 230 |
| 9 | திருவண்ணாமலை | 100 | 350 | 100 |
| 10 | விருதுநகர் | 100 | – | 80 |
| 11 | மதுரை | – | 5 | 40 |
| 12 | திருச்செங்கோடு | | 20 | 100 |
| **மொத்தம்** | | **2000** | **2500** | **1500** |

**2017–2018**ஆம் ஆண்டில் இரண்டு புதுமையான திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இதற்காக கீழ்க்கண்டவாறு **ரூ.33.00** இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது:-

| வ. எண் | திட்டத்தின் பெயர் | நிதி ஒதுக்கீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | நடமாடும் கைத்தறி ஊர்தி கொள்முதல் செய்தல் | 30.00 |
| 2 | துவைத்தல் மற்றும் நீர் பகுப்பாய்வு இயந்திரங்களை நிறுவுதல் | 3.00 |
| **மொத்தம்** | | **33.00** |

## 7.4 கைத்தறி உற்பத்தி இரகங்களை புவிசார் குறியீடு சட்டம் 1999-இன் கீழ் பதிவு செய்தல்

ஒரு குறிப்பிட்ட பகுதியில் கைத்றி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் தனித்தன்மை வாய்ந்த பொருட்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பினை வழங்கும் பொருட்டு கைத்தறி மற்றும் துணிநூல் துறையால் காஞ்சிபுரம் பட்டுச் சேலைகள், பவானி ஜமக்காளம், மதுரை சுங்குடி சேலைகள், சேலம் வெண்பட்டு, ஆரணி பட்டுச் சேலைகள் மற்றும் கோவை கோரா காட்டன் இரகங்கள் **1999**ஆம் ஆண்டு புவிசார் குறியீடு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சட்டம் புவிசார் குறியீடு பதிவு பெற்ற பொருட்களை அங்கீகரிக்கப்படாமல் உபயோகித்தல் மற்றும் தவறாக பயன்படுத்தாத வண்ணம் அதன் உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர்களை பாதுகாக்கிறது.

புவிசார் குறியீட்டுப் பதிவு, இத்தகைய பொருட்களின் ஏற்றுமதியை மேம்படுத்துவதுடன், உலக வர்த்தக அமைப்பு ஒப்பந்தத்தில் ஓர் அங்கமான அறிவுசார் சொத்துரிமை வர்த்தக ஒப்பந்தத்தின் கீழ் பிற நாடுகளிலும் தவறான பயன்பாடு மற்றும் விற்பனையிலிருந்து பாதுகாக்கிறது.

இதுவரை காஞ்சிபுரம் பட்டுச் சேலைகளை உற்பத்தி செய்யும் **21** கைத்தறி பட்டு நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், **10** தனியார் உற்பத்தியாளர்கள், **60** கோரா காட்டன் சேலைகள் உற்பத்தி செய்யும் சங்கங்கள், **30** பவானி ஜமக்காளம் உற்பத்தி செய்யும் சங்கங்கள் மற்றும் **8** சேலம் வெண்பட்டு உற்பத்தி செய்யும் சங்கங்கள் ஆகியவை புவிசார் குறியீடு சட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பயனாளிகளாக பதிவு செய்யப்பட்டுள்ளன.

**2018–2019**ஆம் ஆண்டில் திருபுவனம் பட்டுச் சேலைகள் மற்றும் கூறைநாடு பட்டுச் சேலைகளை புவிசார் குறியீடு சட்டத்தின் கீழ் பதிவு செய்ய துறையால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 7.5 கைத்தறி முத்திரை

உயர் மரபுடைமை மற்றும் இந்திய கைத்தறி இரகங்களின் பாரம்பரியத்தின் அடையாளமாக விளங்கும் ‘‘கைத்தறி முத்திரைத்

திட்டம்'' இந்திய அரசால் **28.06.2006** அன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் கைத்தறி உற்பத்திக்கு வணிகச்சின்னம் கிடைப்பதை உறுதி செய்வதோடு உள்நாடு மற்றும் சர்வதேச சந்தைகளில் கைத்தறி இரகங்களின் உயர்தர இடத்தை பாதுகாப்பதும் ஆகும். இத்திட்டம் கைத்தறி பொருட்களுக்கு தனித்தன்மையை உருவாக்குவதோடு, வாடிக்கையாளர்களுக்கு உண்மையான கைத்தறி பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்து, சந்தை தொடர்பினை பலப்படுத்தவும் உதவுகிறது.

தமிழ்நாட்டில், தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள், தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் (கோ–ஆப்டெக்ஸ்), தனி நபர்கள், தனியார் நெசவாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள், கைத்தறி முத்திரை திட்டத்தின் கீழ் பதிவு செய்து கைத்தறி முத்திரையினை உபயோகித்து வருகின்றனர்.

**2017–2018**ஆம் ஆண்டு முடிய, **8,650** நிறுவனங்கள்/தனியார்கள் கைத்தறி முத்திரை திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு **3.85** கோடி கைத்தறி முத்திரை வில்லைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

### 7.6 பட்டு முத்திரை

உள்ளூர் சந்தையிலும், சர்வதேச சந்தையிலும், பட்டு ரகங்களின் விற்பனையினை அதிகரிக்கும் பொருட்டு, மத்திய அரசு 17.04.2004 முதல் பட்டு முத்திரை திட்டத்தை அறிமுகப்படுத்தியது. சுத்தமான இயற்கை பட்டின் தரத்தை உறுதி செய்து தூய பட்டின் அடையாளமாக பட்டு முத்திரை இடப்படுகிறது.

இந்த பட்டு முத்திரைத் திட்டம், மத்திய அரசின் ஜவுளி அமைச்சகத்தின் மத்திய பட்டு வாரியத்தின் ஆதரவுடன் கர்நாடக சங்கங்களின் பதிவு சட்டம் 1960–இன் கீழ் பதிவு செய்யப்பட்ட இந்திய சில்க் மார்க் நிறுவனம் (SMOI) மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தனியார் நிறுவனங்கள், மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்கள், மாநில மற்றும் தனியார் நிறுவனங்கள் இந்திய

சில்க் மார்க் நிறுவனத்தில் உறுப்பினராகலாம். இந்த நிறுவனத்தின் உறுப்பினர்களாக பதிவு செய்துகொண்ட நிறுவனங்கள் மட்டுமே பட்டு முத்திரை வில்லைகளை பயன்படுத்த அங்கீகரிக்கப்பட்டுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் இது வரை, 77 பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் அங்கீகரிக்கப்பட்ட உபயோகிப்பாளர்களாக பதிவு செய்துள்ளன.

## 7.7 இந்தியா கைத்தறி வணிகச் சின்னம்

INDIA HANDLOOM

கைத்தறி தொழிலை மேம்படுத்தவும், சமூக சுற்றுச்சூழல் தன்மைகளுக்கு இணக்கமாக மூலப்பொருட்கள், பதனிடுதல், நிர்வாகம், நெசவு, வடிவமைப்பு மற்றும் இதர வழியலகுகள் அனைத்திலும் கைத்தறி இரகங்களின் தரத்தினை உறுதி செய்து

வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை பெறும் நோக்குடன் **07.08.2015** அன்று நடைபெற்ற முதல் தேசிய கைத்தறி தின விழாவின்போது ‘‘இந்தியா கைத்தறி வணிகச் சின்னம்’’ இந்திய அரசால் அறிமுகப்படுத்தப்பட்டது.

வாடிக்கையாளர்களின் நம்பகத்தன்மையை பெற ஏதுவாக புதிய வடிவமைப்புகளில் குறைபாடற்ற, நம்பகத்தன்மை மிக்க, தரமான, சுற்றுச்சூழல் பாதிப்பற்ற, நேர்த்திமிகு கைத்தறி இரக உற்பத்தியை உறுதி செய்வதே இவ்வணிகச்சின்னத்தை நிறுவியதன் முக்கிய நோக்கமாகும்.

“இந்தியா கைத்தறி வணிகச் சின்னம்” எனும் புதுமுயற்சி கைத்தறி வளர்ச்சி ஆணையரால் இந்திய அரசு, ஜவுளித் தொழில் அமைச்சகத்தின் கீழ் உள்ள ஜவுளிக்குழுவின் உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கைத்தறி வளர்ச்சி ஆணையரால் அமைக்கப்பட்ட சிறப்புப் பிரிவு மற்றும் நாடு முழுவதுமுள்ள **28** நெசவாளர் சேவை மையங்கள் இந்தியா கைத்தறி வணிகச் சின்னத்தின் கீழ் கைத்தறி இரகங்களை பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்களை பெற்றுக் கொள்கிறது.

காஞ்சிபுரத்திலுள்ள நெசவாளர் சேவை மையம் தமிழகத்தில் உள்ள கைத்தறி இரகங்களை இந்தியா கைத்தறி

வணிகச் சின்னத்தின் கீழ் பதிவு செய்ய விண்ணப்பங்களை பெறுகிறது.

இந்தியா கைத்தறி வணிகச் சின்னத்தின் கீழ் 28 பிரிவுகளில் கைத்தறி இரகங்களை உற்பத்தி செய்யும் ஏறக்குறைய 104 முகமைகள் / தொழிலகங்கள் பதிவு செய்துள்ளன.

இவ்வணிகச் சின்னத்தின் கீழ், சேலம் பட்டு வேட்டிகள், செட்டிநாடு பருத்தி சேலைகள், காஞ்சிபுரம் பட்டு சேலைகள், ஆரணி பட்டு சேலைகள், பட்டு அங்கவஸ்திரம், பருத்தி கைலி ஆடைகள், இயற்கை சாயமிட்ட துணிகள், தரை விரிப்பு, திரை சீலைகள், கோரா பருத்தி சேலைகள், திண்டுக்கல் பருத்தி சேலைகள் போன்ற இரகங்களை உற்பத்தி செய்யும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்துள்ளன.

## 7.8 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கான தேர்தல் – 2018

இந்திய அரசியலமைப்பின்படி (97வது சட்ட திருத்தம் 2011), ஒவ்வொரு நெசவாளர் கூட்டுறவு சங்கமும் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்களால் நிர்வகிக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டில், 2013ஆம் ஆண்டில், 1368 நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு (தொடக்க, மத்திய மற்றும் தலைமை சங்கங்கள்) மார்ச் 2013 முதல் ஜூலை 2013

முடிய 3 கட்டங்களாக தேர்தல் நடத்தப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழுவின் பதவிக்காலமான 5 ஆண்டுகள் ஏப்ரல் 2018 உடன் முடிவடைந்துள்ளன.

நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு தேர்தல் நடத்துவதற்கு தமிழ்நாடு மாநில கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் ஆணையத்தால் தேர்தல் திட்டம் வெளியிடப்பட்டுள்ளது. கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வரும் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில், 2018ஆம் ஆண்டு 3 கட்டங்களாக தேர்தல் நடத்தப்பட உள்ள நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை பின்வருமாறு:—

| முதற்கட்டம் | இரண்டாம் கட்டம் | மூன்றாம் கட்டம் | மொத்தம் |
|---|---|---|---|
| 1243 (தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்) | 20 (மத்திய நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள்) | 3 (தலைமை சங்கங்கள்) | 1266 |

தமிழ்நாடு மாநில கூட்டுறவு சங்கங்களின் தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ள தேர்தல் திட்ட அட்டவணையின்படி, முதற்கட்டமாக 1243 தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு 12.03.2018 முதல் 07.05.2018 வரை கீழ்க்கண்டவாறு நான்கு நிலைகளாக தேர்தல் நடத்தப்பட்டது.

| முதற்கட்ட நிலைகள் | தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை | தேர்தல் நாள் |
|---|---|---|
| நிலை-I | 298 | 02.04.2018 |
| நிலை -II | 315 | 07.04.2018 |
| நிலை -III | 322 | 27.04.2018 |
| நிலை -IV | 308 | 07.05.2018 |
| மொத்தம் | 1243 | |

முதற்கட்டம், நிலை-I-இன் கீழ் உள்ள தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்கள் **09.04.2018** அன்று பதவி பொறுப்பேற்றுள்ளனர்.

முதற்கட்டத்தில் இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் நிலைகளுக்கான தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கான தேர்தல்கள் நிறைவு பெற்று, மாண்புமிகு உச்ச நீதிமன்ற ஆணையின்படி முடிவுகள் அறிவிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

## 7.9 கைத்தறி உதவித் திட்டம்

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் **2018–2019**ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையினை சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்த போது, கைத்தறி பிரிவில் புதுமையான மற்றும் பல்வகையான தயாரிப்புகளை ஊக்குவிக்க

நிதி உதவியினை வழங்குவதற்காக "கைத்தறி உதவித் திட்டம்" என்ற புதிய திட்டத்தினை அரசு செயல்படுத்தும் என அறிவித்தார். இத்திட்டத்திற்காக 2018-2019ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், கைத்தறி பிரிவில் புதுமையான மற்றும் பல்வகையான தயாரிப்புகளுக்கு நிதி உதவியினை வழங்குவதற்கு தகுதியான திட்டங்களை அளிப்பதற்கு தேவையான நடவடிக்கையினை இத்துறை மேற்கொண்டு வருகிறது.

## 8. துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் நிறுவனங்கள்

### 8.1 கூட்டுறவு நூற்பாலைகள்

நமது மாநிலத்தில் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டும், தரமான நூலினை நியாயமான விலையில் கைத்தறி நெசவாளர்களுக்கு வழங்குவதற்கும் மற்றும் சிட்டா நூல் தேவையினை பூர்த்தி செய்வதற்கும் 1958 முதல் 1985 வரை 4.70 இலட்சம் நிறுவப்பட்ட கதிர் திறனுடன் 18 கூட்டுறவு நூற்பாலைகள் ஆரம்பிக்கப்பட்டது.

பழுதடைந்த இயந்திரங்களினாலும், நடைமுறை மூலதன பற்றாக்குறையினாலும் மற்றும் பாதகமான சந்தை நிலவரத்தினாலும் 13 கூட்டுறவு நூற்பாலைகள் செயலிழந்தன.

வறட்சி பகுதியான இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ஆதி–திராவிட தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு அதி நவீன இயந்திரங்களை நிறுவி இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலை மட்டும் மீண்டும் திறக்கப்பட்டது. இதை தவிர ஐந்து கூட்டுறவு நூற்பாலைகள் முறையே அண்ணா கூட்டுறவு நூற்பாலை, ஆண்டிப்பட்டி, பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டயபுரம், கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஆரல்வாய்மொழி, புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, அறந்தாங்கி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை, ஊத்தங்கரை ஆகியவை நவீனப்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றன.

### 8.1.1 நவீனப்படுத்தப்பட்ட கூட்டுறவு நூற்பாலைகள்

தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகம், புதுடெல்லி (NCDC) நிதி உதவியுடன் தமிழ்நாடு அரசு ரூ.147.21 கோடி மேற்படி இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகளை நவீனப்படுத்தும் பொருட்டு வழங்கியுள்ளது.

இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலையை முழுமையாக நவீனப்படுத்தும் பொருட்டு ரூ.28.02 கோடி

ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் விளைவாக, கூட்டுறவு நூற்பாலைகளின் தற்போதைய மொத்த நூற்பு கதிர்களின் திறன் **1,18,368** திறனாக உயர்த்தப்பட்டுள்ளது. உற்பத்தி **5,975** மெட்ரிக் டன்னிலிருந்து **13,140** மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. தற்பொழுது விலையில்லா வேட்டி சேலை திட்டம் மற்றும் விலையில்லா சீருடை திட்டம் ஆகியவற்றிற்கு தரமான நூல் உற்பத்தி செய்து வழங்கப்பட்டு வருகிறது.

இதை தவிர, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் **20.09.2016** அன்று அறிவித்தபடி, கூடுதலாக புதிய இயந்திரங்கள் கொள்முதல் செய்யும் பொருட்டு தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்தின் **(NCDC)** நிதியுதவியை பெற்று ரூ.**19.29** கோடி, **6** இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகளுக்கு அனுமதிக்கப்பட்டது. அதன் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | கூட்டுறவு நூற்பாலையின் பெயர் | ஒப்பளிக்கப்பட்ட திட்டத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | அண்ணா | 570.39 |
| 2. | பாரதி | 482.11 |
| 3. | கன்னியாகுமரி | 86.00 |
| 4. | புதுக்கோட்டை | 417.00 |
| 5. | கிருஷ்ணகிரி | 100.00 |
| 6. | இராமநாதபுரம் | 265.00 |
| மொத்தம் | | 1929.50 |

இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவும் பணி நடைபெறுகிறது.

இரண்டாம் கட்ட நவீனப்படுத்துதலின் கீழ் வாங்கப்படும் நவீன தொழில்நுட்பம் செறிந்த இயந்திரங்களான ஆட்டோ கோனர் (Auto Coner), கோம்பர்ஸ் (Combers), லேப் ஃபார்மர்ஸ் (Lab formers) மற்றும் டப்ளிங் மிஷின்ஸ் (Doubling Machines) போன்றவை கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்திறனை அதிகரிப்பது மட்டுமல்லாமல் விலையில்லா வேட்டி சேலை மற்றும் விலையில்லா சீருடை திட்டத்தின் கீழ் கைத்தறி மற்றும் விசைத்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்ய உள்ள துணிகளுக்கு தரமான நூலினை வழங்கவும் வழி வகுத்துள்ளது. மேலும், பாரதி கூட்டுறவு நூற்பாலை, எட்டயபுரத்தில் மட்டும் 135 KWp தரையில் பொறுத்தப்படும் சோலார் பவர் பேனல் (Ground Mounted Solar Power Panel) நிறுவப்பட்டு வருகிறது. இது மின்சேமிப்பில் பங்களிக்கும்.

**நவீனப்படுத்துதலுக்கு முன்னும், பின்னும் கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்திறன் விவரம்**

| வ. எண் | விவரங்கள் | நவீனப்படுத்துதலுக்கு முன்னர் | நவீனப்படுத்துதலுக்கு பின்னர் |
|---|---|---|---|
| 1 | கதிர்களின் எண்ணிக்கை | 1,13,000 | 1,18,368 |
| 2 | வருடாந்திர உற்பத்தியின் சராசரி (மெட்ரிக் டன்னில்) | சிட்டா : 1,188<br>கோன் : 4,787<br>------<br>மொத்தம்: 5,975<br>------ | சிட்டா : 2,613<br>கோன் : 10,527<br>------<br>மொத்தம்: 13,140<br>------ |
| 3 | உற்பத்தியின் மதிப்பு (ரூ. கோடியில்) | 90.68 | 220.61 |
| 4 | சராசரி கதிர்முனை உற்பத்தி (கிராமில்) | 85% | 110.00 |
| 5 | உற்பத்தியின் வழுத்தன்மை (CSP) | 2000 | 2,500 |



**தேனி மாவட்ட அண்ணா கூட்டுறவு நூற்பாலையில் உள்ள அசெம்பிளி வைன்டர்**



**இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு நூற்பாலையின் கார்டிங் பிரிவு**

## 8.1.2 2017–2018ஆம் ஆண்டிற்கான சாதனைகள்

- விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம், பொங்கல் **2018**–ன் கீழ் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு துணி வகைகளை உற்பத்தி செய்வதற்காக ரூ.**96.02** கோடி மதிப்புள்ள **3980.88** மெட்ரிக் டன் நூலினை **6** கூட்டுறவு நூற்பாலைகள் வழங்கியுள்ளன.

- இலவச சீருடை வழங்கும் திட்டம் **2017–2018**ன் கீழ் நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு துணி வகைகளை உற்பத்தி செய்வதற்காக ரூ.**87.28** கோடி மதிப்புள்ள **3,764.46** மெட்ரிக் டன் நூலினை **6** கூட்டுறவு நூற்பாலைகள் வழங்கியுள்ளன.

- நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழக்கமாக தேவைப்படும் சிட்டா நூல் இரகங்களான **20**நெ, **26**நெ மற்றும் **2/17**நெ முதலியவற்றையும் கூட்டுறவு நூற்பாலைகள் உற்பத்தி செய்து வழங்கி வருகின்றன. இக்கூட்டுறவு நூற்பாலைகள், **2017–2018** ஆம் ஆண்டில் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ.**41.62** கோடி மதிப்பிலான **11,399** பேல்கள் (**2175.97** மெட்ரிக் டன்) வழங்கியுள்ளன.

- வருங்காலங்களில் அரசால் நடைமுறைப்படுத்தவுள்ள நலத்திட்டங்களுக்கு முழு அளவில் உற்பத்தி செய்து வழங்க ஏதுவாக **60**நெ நூல் வகைகளையும் கூட்டுறவு நூற்பாலைகள் மூலம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

| வ. எண் | நூல் எண் | மொத்த உற்பத்தி திறன் ஆண்டு ஒன்றுக்கு (மெட்ரிக் டன்) |
|---|---|---|
| 1 | 20s சிட்டா | 340 |
| 2 | 26s சிட்டா | 65 |
| 3 | 40s சிட்டா | 1,300 |
| 4 | 60s சிட்டா | 4 |
| 5 | 2/17s சிட்டா | 2,160 |
| 6 | 2/30s சிட்டா | 650 |
| 7 | 2/40s சிட்டா | 650 |
| 8 | 2/60s சிட்டா | 4 |
| 9 | 40s கோன் | 8,760 |
| 10 | 60s கோன் | 720 |
| 11 | 2/30s கோன் | 1,200 |
| 12 | 2/40s கோன் | 800 |

**நவீனப்படுத்தப்பட்ட கூட்டுறவு நூற்பாலைகளின் நூல் இரகம் வாரியான உற்பத்தித் திறன்**

## 8.2 தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் லிமிடெட், சென்னை

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம் **1964** ஆம் ஆண்டு ஒரு அரசு பொதுத்துறை நிறுவனமாக, வங்கிகள் தேசீயமயமாக்கப்படுவதற்கு முன்னர் செயல்படத் துவங்கியது. இந்த நிறுவனம் கூட்டுறவு சாராத நெசவாளர்களின் தொழிலுக்கான முதலீட்டிற்கு நியாயமான வட்டி விகிதத்தில் கடன் வழங்குவதற்காகவும், உள்ளூர் பணமளிப்பவர்களின் பிடியிலிருந்து விடுவிப்பதற்காகவும் துவங்கப்பட்டதாகும். இந்த உயர்ந்த நோக்கத்தை செயல்படுத்த இந்நிறுவனம் அரசு மற்றும்

உறுப்பினர்கள் ஆகியோரிடமிருந்து பங்குத்தொகை மற்றும் கடன் ஆகியவை மூலம் நிதி ஆதாரங்களை பின்வருமாறு திரட்டியுள்ளது:-

**(ரூ.இலட்சத்தில்)**

| | | |
|---|---|---|
| அ) பங்கு மூலதனம் | | |
| (i) | அரசு | **267.00** |
| (ii) | உறுப்பினர்கள் | **162.24** |
| மொத்த பங்கு மூலதனம் | | **429.24** |
| ஆ) மாநில அரசின் கடன் | | **547.00** |
| **மொத்தம் (அ + ஆ)** | | **976.24** |

இக்கழகத்தில் மொத்தம் **11,841** உறுப்பினர்கள் உள்ளனர். மற்ற பிரிவினருக்கு கடன் தள்ளுபடி அளிக்கப்பட்டுள்ளதால், இக்கழகத்தில் கடன் பெற்ற உறுப்பினர்கள் கடன் தொகையை மீளச் செலுத்த தயக்கமாக இருப்பதால் கழகத்தின் நடைமுறை மூலதனம் பாதிக்கப்பட்டுள்ளது. கழகத்தின் உறுப்பினர்கள் பெற்ற கடனை மீளச் செலுத்தாததால் கழகத்தின் முதன்மை நோக்கமான கூட்டுறவு சாராத நெசவாளர்களுக்கு கடன் வழங்குதல் என்ற நோக்கம் பாதிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் பல்வேறு அரசு திட்டங்களை செயல்படுத்தி வருவதால் இக்கழகம் தொடர்ந்து செயல்பட்டு கொண்டு இருக்கிறது.

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சி கழகத்தினை பின்வரும் அரசு திட்டங்களை செயல்படுத்தும் / முகமை நிறுவனமாக அரசு நியமித்துள்ளது:–

| வ. எண் | **திட்டங்களின் பெயர்கள்** |
|---|---|
| 1 | திருச்சி மாபெரும் கைத்தறி குழுமம் |
| 2 | விருதுநகர் மாபெரும் கைத்தறி குழுமம் |
| 3 | கைத்தறித் துணிகளை லூம்வேர்ல்டு இணைய தளம் மூலம் வணிகப்பெயரில் விற்பனை மேற்கொள்ளுதல் |
| 4 | தேசிய அளவிலான கைத்தறி கண்காட்சி நடத்துதல் |
| 5 | விற்பனை ஊக்குவிப்புத் திட்டம் |

கடந்த **2017–2018**ஆம் ஆண்டில் உறுப்பினர்களின் கடனில் அசல் ரூ.**8.80** இலட்சம் மற்றும் வட்டி ரூ.**8.65** இலட்சம் வசூல் மேற்கொள்ளப்பட்டது.


இக்கழகத்தின் **2017–2018**ஆம் ஆண்டிற்கான தற்காலிக நிகர இலாபம் ரூ.**14.02** இலட்சம் ஆகும்.

**8.2.1 லூம்வேர்ல்டு விற்பனை நிலையம்**

தனித்த அடையாளத்தை உருவாக்கும் வகையிலும் மாநிலத்திலுள்ள கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் விற்பனை செயல்பாடுகளுக்கு உதவிபுரியும் வகையிலும்

**2000**ஆம் ஆண்டில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை "**லூம்வேர்ல்டு**" என்ற வணிகப் பெயரில் சிறப்பு விற்பனை

நிலையங்களை துவக்கியது. தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்களால் உற்பத்தி செய்யப்படும் கைத்தறி இரகங்களை கணிசமான அளவில் விற்பனை செய்ய லூம்வேர்ல்டு நிறுவனம் உதவிபுரிகிறது. தமிழ்நாட்டில் சென்னை அண்ணாநகர், சென்னை எழும்பூர், கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி, காஞ்சிபுரம் மற்றும் ஈரோடு ஆகிய 8 இடங்களில் “லூம்வேர்ல்டு” நிறுவனத்தின் விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. பிரதம கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களின் உற்பத்தி பொருள்களை கணிசமான அளவில் விற்பனை செய்வதற்கு இவ்விற்பனை நிலையங்கள் உதவியாக உள்ளன. லூம்வேர்ல்டு விற்பனை நிலையங்களின் 2017–2018ஆம் ஆண்டுக்கான விற்பனை மதிப்பு ரூ.12.91 கோடியாகும்.




**கடந்த மூன்றாண்டுகளில் லூம்வேர்ல்டு விற்பனை நிலையங்களின் விற்பனை செயல்பாடு**

சென்னை அண்ணாநகர் லூம்வேர்ல்டு விற்பனை நிலையத்தை நவீனமயமாக்க ரூ.25.00 இலட்சமும், கோவை லூம்வேர்ல்டு விற்பனை நிலையத்தை நவீனமயமாக்க ரூ.50.00 இலட்சமும் அரசு ஒப்பளிப்பு செய்துள்ளது. மேலும், 2017–2018ஆம் ஆண்டின் விற்பனை ஊக்குவிப்பு திட்டத்தின் கீழ் ரூ.100.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து மேற்காணும் விற்பனை நிலையங்கள் நவீனமயமாக்கப்பட்டு வருகின்றன.

**8.2.2 "லூம்வேர்ல்டு" வணிக பெயரிலான மின்வர்த்தக இணையதளம்**

லூம்வேர்ல்டு அமைப்பினை பிரபலப்படுத்தவும் வாடிக்கையாளர்களுக்கு மின்வணிக இணைய தள கொள்முதல் வசதியினை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் "லூம்வேர்ல்டு" வணிக பெயரிலான மின்வர்த்தக இணையதளம் www.loomworld.in 30.12.2015 அன்று அறிமுகப் படுத்தப்பட்டது.




2017–2018 ஆம் ஆண்டில் ரூ.16.64 இலட்சம் மதிப்புள்ள 1046 கைத்தறி துணி வகைகள் மின்வர்த்தக இணையதளம் மூலம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும் இந்த இணைய தள விற்பனையை அதிகரிக்க Gocoop Solutions and Services Private Ltd., என்ற தனியார் மின் வர்த்தக நிறுவனத்துடன் கூட்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் Amazon Seller Services Pvt Ltd., என்ற நிறுவனத்துடன் ஒரு வணிக ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு www.amazon.in என்ற வணிக இணைய தளம் வழியாக விற்பனை மேற்கொள்ளும் நடவடிக்கை 28.12.2017 அன்று தொடங்கப்பட்டது.



**லூம்வேர்ல்டு நிறுவனத்தின் இணையதள மின்வர்த்தகத்தினை அமேசான் வணிக இணைய தளம் மூலம் மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் அமைச்சர் அவர்கள் துவக்கிய போது**

தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகம், லூம்வேர்ல்டு நிறுவனத்தின் மின்வர்த்தக இணையதள வணிக நடவடிக்கைகளை செயல்படுத்தும் முகமை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது.

**8.2.3 2018–2019 ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம்**

- மேலே குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு மத்திய அரசு திட்டங்களை செயல்படுத்தும் / முகமை நிறுவனமாக தொடர்ந்து செயல்படுதல்.
- இக்கழகம் லூம்வேர்ல்டு மூலம் ரூ.25 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளது.

- உறுப்பினர்களின் கடனில் அசல் ரூ.75 இலட்சம் மற்றும் ரூ.100 இலட்சம் வசூல் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.
- ரூ.50 இலட்சம் மதிப்புள்ள கைத்தறித் துணிகளை இணையதளம் மூலம் ‘‘லூம்வேர்ல்டு’’ வணிகப்பெயரில் விற்பனை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

## 8.3 தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் லிமிடெட், கோயம்புத்தூர்

தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம் முழுவதும் அரசுடைமையாக்கப்பட்ட நிறுவனமாக 1969 ஆம் ஆண்டு, கம்பெனிகள் சட்டம் 1956-இன் கீழ் துவங்கப்பட்டது.

மேலும், தமிழ்நாடு பஞ்சாலைக்கழகம் நவீனமயமாக்கப் பட்டு, மேம்பட்ட தரம் கொண்ட துணிகளை உற்பத்தி செய்யவும், உற்பத்தி திறனை அதிகரிக்கவும், இந்நிறுவனத்தின் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு அளிக்கவும் 10 நவீன ஏர்ஜெட் தறிகளை கோயம்புத்தூரிலுள்ள குறிச்சியில் நிறுவியுள்ளது.

தற்போதுள்ள மூன்று விசைத்தறிகூடங்கள், தலா 36 விசைத்தறிகளுடன், அருப்புக்கோட்டை (விருதுநகர் மாவட்டம்), சிவகிரி (ஈரோடு மாவட்டம்) மற்றும் கோயம்புத்தூரிலுள்ள குறிச்சியிலும் செயல்பட்டு வருகின்றன.

இந்நிறுவனம், மேற்படி விசைத்தறி கூடங்கள் மற்றும் ஏர்ஜெட் தறிகூடம் ஆகியவற்றில் பாலியஸ்டர் காட்டன் சூட்டிங் மற்றும் சர்ட்டிங் துணி வகைகளை உற்பத்தி செய்து பல்வேறு அரசு நிறுவனங்களுக்கு விற்பனை செய்து வருகின்றது. மேலும் இந்நிறுவனம் பள்ளிகளுக்கு, விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ், சர்ட்டிங், கேஸ்மென்ட் மற்றும் டிரில் ஆகிய துணிகளையும், விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் வேட்டிகளையும் உற்பத்தி செய்து வழங்கி வருகின்றது.

மேலும், இக்கழகம் விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின் (கல்வியாண்டு **2017–2018**)ன் கீழ் ரூ. **10.88** கோடி மதிப்புள்ள **25.65** இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகளையும் மற்றும் விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம், பொங்கல் **2018**–ன் கீழ் ரூ.**97.67** இலட்சம் மதிப்புள்ள **1.00** இலட்சம் வேட்டிகளையும் உற்பத்தி செய்து வழங்க ஆணை பெறப்பட்டது.



**தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் குறிச்சி அலகின் தானியங்கி விசைத்தறி கூடம்**

மேற்படி துணி வகைகளை உற்பத்தி செய்வது தவிர, இந்நிறுவனம் அரசின் விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் சீருடைத் துணி மற்றும் விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்தின் கீழ் சேலை மற்றும் வேட்டிகளையும் கொள்முதல் செய்து விநியோகம் செய்யும் முகமை நிறுவனமாகவும் செயல்பட்டு வருகிறது. விலையில்லா சீருடை வழங்கும் திட்டம் (கல்வியாண்டு 2017–2018)ன் கீழ் ரூ. 119.80 கோடி மதிப்பீட்டில் 256.59 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகளையும், விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம், பொங்கல் 2018–ன் கீழ் ரூ.196.43 கோடி மதிப்பீட்டில் 78.72 இலட்சம் சேலைகள் மற்றும் 73.13 இலட்சம் வேட்டிகள்

ஆகியவற்றை விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து கொள்முதல் செய்து சம்மந்தப்பட்ட துறைகளுக்கு விநியோகம் செய்துள்ளது.

**2017–2018**ஆம் ஆண்டில், இக்கழகம் **6.38** இலட்சம் மீட்டர் அளவுள்ள பாலியஸ்டர் பருத்தி கலவை சீருடைத் துணிகள் விநியோகம் செய்ய மாநில போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு காவல் துறை, டெக்ஸ்கோ, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் (ICDS), நகராட்சிகள் மற்றும் இதர அரசு சார்ந்த பொதுத் துறை நிறுவனங்களிடமிருந்து ரூ.**573.58** இலட்சம் மதிப்பீட்டில் ஆணைகள் பெற்று துணிகளை விநியோகம் செய்துள்ளது.

இந்நிறுவனத்தின் **2017–2018**ம் ஆண்டிற்கான நிதி செயல்பாடுகள் விவரம் பின்வருமாறு:–

| ஆண்டு | மொத்த உற்பத்தி (இலட்சம் மீட்டர் களில்) | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | மொத்த விற்பனை (இலட்சம் மீட்டர்களில்) | மதிப்பு (ரூபாய் இலட்சத்தில்) | நிகர லாப/ நட்டம் (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 2017–2018 | 35.73 | 1551.08 | 36.92 | 1801.90 | (+) 66.84 |

### 8.3.1 2018–2019 ம் ஆண்டிற்கான செயல் திட்டம்

இக்கழகம், அரசின் விலையில்லா சீருடை வழங்கும் திட்டத்தின் கீழ் 25.16 இலட்சம் மீட்டர் சீருடைத்துணிகளையும், அரசுத் துறை நிறுவனங்களுக்குத் தேவையான சுமார் ரூ 10.84 கோடி மதிப்புள்ள துணிகளையும் தனது சொந்த அலகுகளில் உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது.

மேலும், இக்கழகத்தால் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடமிருந்து ரூ.131.26 கோடி மதிப்புள்ள 255 இலட்சம் மீட்டர் சீருடைத்துணிகள் மற்றும் ரூ.227 கோடி மதிப்புள்ள 80 இலட்சம் சேலைகள் மற்றும் 80 இலட்சம் வேட்டிகளையும் கொள்முதல் செய்து விநியோகம் செய்ய எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, 2018–2019ஆம் ஆண்டில் இக்கழகம் ரூ.34.15 கோடிக்கு வியாபாரம் மேற்கொண்டு நிகர இலாபமாக ரூ.1.5 கோடி ஈட்ட திட்டமிட்டுள்ளது.

## 8.4 தமிழ்நாடு சரிகை ஆலை லிமிடெட், காஞ்சிபுரம்

தமிழ்நாடு சரிகை ஆலை பட்டு சேலை உற்பத்திக்கான முக்கிய மூலப்பொருளான அசல் சரிகையினை உற்பத்தி செய்யும் நோக்கத்துடன் 1971ஆம் ஆண்டு, கம்பெனிகள் சட்டம் 1956–ன் கீழ் மாநில அரசு சார்ந்த பொதுத் துறை தொழில் நிறுவனமாக

தொடங்கப்பட்டது. இந்நிறுவனம் **1974–**ஆம் ஆண்டு தனது வணிக உற்பத்தியினை தொடங்கியது. இந்நிறுவனம் ISO:9001 : 2008 தரச்சான்று பெற்ற மாநில அரசின் ஒரு பொதுத்துறை நிறுவனமாகும். இந்நிறுவனம் பட்டு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்குத் தேவைப்படும் சரிகையினை உற்பத்தி செய்து நியாயமான விலையில் விநியோகம் செய்து வருகின்றது.

இந்நிறுவனம் காஞ்சிபுரத்தில் நிறுவியுள்ள “எக்ஸ்ரே ஊடுகதிர் பகுப்பாய்வு இயந்திரம்” (X-Ray Fluorescence analyzer) மூலம் சரிகை மாதிரிகள் மற்றும் சரிகையை கொண்டு தாயரிக்கப்பட்ட துணிகள் போன்றவற்றிற்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் (Non Destructive method) அவற்றில் உள்ள சரிகையின் தரத்தை சில நிமிடங்களில் தரப்பரிசோதனை செய்யும் பணியையும் மேற்கொள்கிறது.

இந்நிறுவனத்தில் **6** பணியாளர்களும் **76** தொழிலாளர்–களும் தற்போது பணிபுரிகின்றனர்.

தமிழ்நாடு சரிகை ஆலை நிறுவனத்தில் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.**50.00** இலட்சம் ஆகும். இதில் தமிழக அரசின் பங்கு முதலீடு ரூ.**34.40** இலட்சம் ஆகும். இந்நிறுவனம் தாம் ஈட்டிய இலாபத்தில் இது நாள் வயைில் ஈவுத்தொகையாக

(Dividend) ரூ.132.88 இலட்சத்தினை தமிழக அரசுக்கு செலுத்தியுள்ளது.

ஆலையில் உற்பத்தி செய்யப்படும் சரிகையின் தரத்தினை உயர்த்தும் பொருட்டு சூரத்திலிருந்து புதிய தொழிற்நுட்பத்துடன் கூடிய Vertical type Gilding Machine ஒன்று கொள்முதல் செய்து நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் ரிம் ரீலிங் பிராசஸ் தவிர்க்கப்பட்டு சரிகையின் நிறம் மற்றும் தரம் மேம்படுத்தப்பட்டுள்ளது.



**செங்குத்தான தங்க முலாம் பூசும் இயந்திரம், காஞ்சிபுரம்**



**தங்க இழை தட்டையாக்குதல்**

**2017–2018** ஆம் ஆண்டில் தமிழ்நாடு சரிகை ஆலை **30501** சரிகை மார்க்குகள் உற்பத்தியினை மேற்கொண்டு, ரூ.**3198.77** இலட்சம் மதிப்புள்ள **29,863** மார்க்குகள் விற்பனை செய்து, ரூ.**22.39** இலட்சம் (தோராயமாக) நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

**8.4.1 2018–2019 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம்**

**2018–19**–ம் ஆண்டில் தமிழ்நாடு சரிகை ஆலை சரிகை **36,000** மார்க்குகள் உற்பத்தி மற்றும் விற்பனையை செய்து, ரூ.**3,888** இலட்சம் விற்பனை அளவினையும் , ரூ.**15** இலட்சம் நிகர இலாபமாகவும் ஈட்ட திட்டமிட்டுள்ளது.

## 8.5 தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை, ஈரோடு

தமிழ்நாடு கூட்டுறவு துணிநூல் பதனிடும் ஆலை 06.07.1973ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்டு 05.09.1973 முதல் செயல்பட துவங்கியது. இவ்வாலை வெளுத்தல், சாயமிடல், மெருகேற்றல், அச்சிடல் போன்ற பல்வேறு துணி பதனிடும் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இவ்வாலை அதன் செயல்பாடு மற்றும் தர மேலாண்மைக்கானன ISO:9001–2008 தரச்சான்றிதழ் பெற்றுள்ளது. இவ்வாலை மாதம் ஒன்றிற்கு 21 இலட்சம் மீட்டர் துணிகளை பதனிடும் திறன் பெற்றுள்ளது.

இவ்வாலை அரசால் செயல்படுத்தப்பட்டு வரும் விலையில்லா சீருடைத்திட்டத்திற்கான துணிகளை பதனிடுவதனை முக்கிய பணியாக கொண்டுள்ளது. இதை தவிர கோ–ஆப்டெக்ஸ், தேசிய பஞ்சாலைக் கழகம், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகம், கோவை மத்திய சிறைச்சாலை, தமிழ்நாடு காதி கிராமத் தொழில் வாரியம், கேரளா மாநில கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம், கேரளா கைத்தறி வளர்ச்சிக் கழகம் மற்றும் தொடக்க நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் ஆகிய நிறுவனங்களின் துணிகளையும் பதனிடும் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

இவ்வாலை பூஜிய கழிவு நீர் வெளியேற்றும் நிலையினை அடைய எதிர் சவ்வூடு பரவல் முறையின் மூலம் சாயக்கழிவு நீரை சுத்திகரித்து மறு சுழற்சி மூலம் பயன்படுத்த கழிவு நீர் மேலாண்மை இயந்திரங்களை நிறுவியுள்ளது. இதன்மூலம் பூஜ்ய நிலை கழிவு நீர் வெளியேற்றும் முறையினை பயன்படுத்தியும் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் விதி முறைகளை பூர்த்தி செய்தும் துணிகளை தரமாக பதனிடு செய்து வருகிறது.

இவ்வாலையில் **2017–2018**ஆம் ஆண்டில் **129.62** இலட்சம் மீட்டர் துணிகள் பதனிடப்பட்டு ரூ.**24.59** கோடி வணிகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இக்காலகட்டத்தில் உத்தேச இலாபமாக ரூ.**2.00** இலட்சம் ஈட்டியுள்ளது.

### 8.5.1 நவீனப் படுத்தும் திட்டம்

இவ்வாலை **2008–2009** மற்றும் **2013–2014**ஆம் ஆண்டுகளில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டத்தின் மூலம் நவீனப்படுத்துதல் செயல்திட்டத்தினை ரூ.**7.67** கோடி மதிப்பில் செயல்படுத்தியுள்ளது. இதன்மூலம் இவ்வாலையின் பதனிடும் செயல் திறன் நாளொன்றுக்கு **50,000** மீட்டரில் இருந்து நாளொன்றுக்கு **70,000** மீட்டர் அதிகரிக்கப்பட்டது.



செங்குத்தான துணி உலர்த்தும் இயந்திரம்




சங்கிலியற்ற தொடர் மெர்சரைசிங் இயந்திரம்

**8.5.2 2018–2019 ஆம் ஆண்டுக்கான செயல் திட்டம்**

இவ்வாலை **173.00** இலட்சம் மீட்டர் துணிகளைப் பதனிட்டு, அதன் மூலம் ரூ.**29.82** கோடி வருவாயினை ஈட்ட திட்டமிட்டுள்ளது. எதிர்பார்க்கப்படும் நிகர இலாபம் ரூ.**1.70** கோடி ஆகும்.

**8.6 தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் லிமிடெட் (டான்ஸ்பின்), சென்னை**

தமிழ்நாடு கூட்டுறவு நூற்பாலைகளின் இணையம் (டான்ஸ்பின்), கூட்டுறவு நூற்பாலைகளின் பஞ்சு கொள்முதல் நடைமுறையினை முறைப்படுத்தும் பொருட்டு, டிசம்பர் **1994**–ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இவ்விணையத்தின் முக்கிய நோக்கம், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவு நூற்பாலைகளுக்கும் தேவையான தரமான பஞ்சினை, நியாயமான விலையில் நாடு முழுவதும் உள்ள பல்வேறு கூட்டுறவு நிறுவனங்கள், இணையங்கள், இந்திய பஞ்சு கழகம் மூலம் கொள்முதல் செய்து விநியோகிப்பதாகும். இதற்காக, தமிழக அரசு பங்கு மூலதனமாக, ரூ.**25.00** கோடியும், பஞ்சு சுழற்சி நிதியாக ரூ.**2.07** கோடியும் வழங்கியுள்ளது.




**டான்ஸ்பின் கடந்த ஆண்டுகளில் ஈட்டிய இலாபம்**

டான்ஸ்பின் நிறுவனம், இயங்கும் **6** கூட்டுறவு நூற்பாலைகளுக்கு பஞ்சு கொள்முதல் செய்வதற்காக ரூ.**7.55** கோடி கடனுதவி வழங்கியுள்ளது. இதன் மூலம் இவ்விணையம் சேவைக் கட்டணமாக ரூ.**135** இலட்சம் பெற்று **2017–2018**ஆம் ஆண்டில் ரூ.**79** இலட்சம் உத்தேச இலாபம் ஈட்டியுள்ளது.

## 8.7 தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட் (கோ–ஆப்டெக்ஸ்), சென்னை

“கோ–ஆப்டெக்ஸ்” என்று பெருமளவில் அறியப்படுகின்ற தமிழ்நாடு கைத்தறி கூட்டுறவு சங்கம் இந்திய அளவில் தலைமை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் மிகப்பெரியதாகும். அகில இந்திய அளவில் கைத்தறியில்

முதன்மை பெற்ற நிறுவனம். பல வண்ணங்களுடன் கூடிய பட்டாம்பூச்சியை தனது முத்திரையாக கொண்ட கோ-ஆப்டெக்ஸ், கைத்தறியின் தரத்தையும் மற்றும் வெளிப்படையான வியாபாரத்தையும் தனது வாடிக்கையாளர்களுக்கு நாடு முழுவதும் வழங்குகிறது. தமிழ் நாட்டின் ஆயிரம் ஆண்டுகள் பழமையான நெசவு பாரம்பரியத்தை எடுத்துரைக்கும் திறன் வாய்ந்த நெசவாளர்களைக் கொண்டு கலை நயத்துடன் கூடிய கைத்தறி இரகங்களை உற்பத்தி செய்வதோடு, சமுதாய நலனை கருத்தில் கொண்டு மாநிலத்தின் கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்புகளை இன்றளவும் வழங்கி வருகிறது.

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் கீழ்க்கண்ட முக்கிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகத் தொடர்ந்து பாடுபட்டு வருகிறது.

1. நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு சந்தை ஆதரவிற்கான உறுதுணையாக இருந்து, கைத்தறி இரகங்களை பிரபலபடுத்துதல்.
2. பல்வேறு வகையிலான புதுமையான திட்டங்களைச் செயல்படுத்துதல்.
3. கைத்தறி நெசவாளர்களுக்கு தொடர் வேலை வாய்ப்புகளை உருவாக்குதல்.

4. வாடிக்கையாளர்களின் மாறிவரும் இரசனைக்கேற்ப பாரம்பரியம் மற்றும் புதுமையுடன் கூடிய இரகங்களை உருவாக்குதல்.

1935 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட கோ–ஆப்டெக்ஸ், தனது 192 விற்பனை நிலையங்கள் வாயிலாக நாடு முழுவதுமுள்ள தனது வாடிக்கையாளர்களை சென்றடைகிறது. அகில இந்திய அளவில் அதிக உற்பத்தி செய்து, கைத்தறிக்கு மிகச் சிறந்த பங்களிப்பினை கோ–ஆப்டெக்ஸ் ஆற்றி வருகிறது.


அரசு திட்டங்களை கையாள்வதில் மிகச் சிறந்த அனுபவத்துடன் தன்னை ஈடுபடுத்தி உள்ளதால், விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டத்திற்கும், பள்ளி மாணவ மாணவியருக்கு, இலவச சீருடைகள் வழங்கும் திட்டத்திற்கும் முகமை நிறுவனமாக கோ–ஆப்டெக்ஸ் நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. முதியோர்களுக்கான விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்திற்கு பிரத்யேகமான முகமை நிறுவனமாக கோ-ஆப்டெக்ஸ் செயல்படுகிறது.

கோ–ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல், கோ–ஆப்டெக்ஸின் ஏற்றுமதிப் பிரிவு ஹோம்–டெக்ஸ்டைல் இரகங்களை ஜெர்மனி, பெல்ஜியம், ஸ்பெயின், இங்கிலாந்து, இத்தாலி மற்றும் பிரான்ஸ் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகிறது.


**சில்லரை விற்பனை 2017–2018**

கோ–ஆப்டெக்ஸ் **2017–2018**ஆம் ஆண்டில், ரூ.**316.15** கோடி மதிப்பிற்கு விற்பனை செய்துள்ளது. விழாக்கால கொள்முதல் என இருந்த நடைமுறையை மாற்றி ஆண்டு முழுவதும் தொடர் கொள்முதல் செய்ததன் மூலமாகவும், அதிக எண்ணிக்கையிலான விற்பனை நிலையங்களை கலைநயத்துடன் நவீனப்படுத்தியமையாலும், புதிய வடிவமைப்புகளுடன் கூடிய கைத்தறி துணிகளை அறிமுகப்படுத்தியதாலும், புதிய பணியாளர்களை நியமனம் செய்தல் மற்றும் ஊழியர்களை ஊக்குவித்தல் மூலமாகவும் இந்த விற்பனையை கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் எய்தியுள்ளது.

**ரூ. கோடியில்**




**கடந்த 3 ஆண்டுகளில் சில்லரை விற்பனை**





**2017-2018 இல் இரகவாரியான விற்பனை**

பேஸ்புக் மற்றும் சமூக வலைதளங்களை பயன்படுத்தி விளம்பரம் செய்வதின் மூலமாக இளம் வயது வாடிக்கையாளர்கள் முதன் முறையாக ஏராளமான கைத்தறி துணிகளை வாங்கிப்பயன்படுத்த தொடங்கியுள்ளனர்.

**மின் வணிகம்**

உலகம் முழுவதும் உள்ள அதிகமான வாடிக்கையாளர்களை கவரும் விதத்தில் மின் வணிக வியாபாரத்தை கோ–ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்தி உள்ளது. வாடிக்கையாளர்களின் ஆதரவுக்கேற்ப பட்டுச்சேலை/ பருத்திசேலைகள் முதல் லினன் சட்டைகள், குர்தீஸ், ஆர்கானிக் சேலைகள், படுக்கை விரிப்புகள் மற்றும் ஹோம்பர்னிஷிங் கோ–ஆப்டெக்ஸின் வணிக வலைதளத்தில் விற்பனைக்கு

வைக்கப்பட்டுள்ளன. இந்தியாவில் உள்ள அனைத்து தலைமை நெசவாளர் கூட்டுறவு சங்கங்களிடையே, மின் வணிகத்தில் அதிக விற்பனை செய்து கோ–ஆப்டெக்ஸ் முதலிடத்தில் உள்ளது. மின் வணிக விற்பனை வளர்ச்சி ஏற்றமிக்க வகையில் நடைபெற்று வருகிறது.




**மின் வணிக விற்பனை (ரூ.லட்சத்தில்)**

**பன்னாட்டு மின் வணிகம்**

வெளி நாட்டில் வாழும் கோ–ஆப்டெக்ஸின் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களின் துணி தேவையை பூர்த்தி செய்யும் விதமாக பன்னாட்டு மின் வணிக விற்பனையை **31.01.2018** அன்று கோ–ஆப்டெக்ஸால் அறிமுகம் செய்யப்பட்டது.

**2017–2018** ஆம் ஆண்டு விற்பனை கடந்த ஆண்டை விட இருமடங்கு அதிகரித்து ரூ.**1.02** கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.



மாண்புமிகு அமைச்சர் பன்னாட்டு மின் வணிகத்தின்
முதல் விற்பனையை துவக்கிவைத்தார்



மலேசிய நாட்டை சேர்ந்த வாடிக்கையாளர் சேலை வாங்கி
முதல் விற்பனையை பதிவிட்டார்

**2017–2018 ஆம் ஆண்டில் சந்தைபடுத்தலின் திட்டங்கள்**
**விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துதல்**

2017–2018ஆம் ஆண்டில் கோ–ஆப்டெக்ஸ் கீழ்க்கண்ட 5 விற்பனை நிலையங்களை நவீனப்படுத்தியுள்ளது.

1. தீபம், வேலூர்
2. திருவண்ணாமலை
3. தென்காசி
4. முத்துநகர், தூத்துக்குடி
5. ஸ்ரீவில்லிபுத்தூர்

கோ–ஆப்டெக்ஸ், சென்னை தியாகராய நகரில் ‘‘ஹோம்–டெக்ஸ்’’ என்ற விற்பனை நிலையத்தை திறந்து வாடிக்கையாளர்களின் ஏகோபித்த வரவேற்பை பெற்றதை தொடர்ந்து கோயம்புத்தூர், மருதம் விற்பனை நிலையத்திலும் ‘ஹோம்–டெக்ஸ்‘ விற்பனை நிலையம் திறக்கப்பட்டுள்ளது.




கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம், வேலூர்




கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம்,
தூத்துக்குடி




கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்



கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம்,
தென்காசி




**கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையம்,**
**திருவண்ணாமலை**

## வடிவமைப்பில் புதுமைகள்

கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம், வாடிக்கையாளர்களின் மாறிவரும் ரசனை மற்றும் தேவைகளை அறிந்து, அதற்கேற்ப கோ–ஆப்டெக்ஸ் நிறுவனமானது தனது வடிவமைப்பு நிலையத்தின் மூலம் எண்ணற்ற புதிய வடிவமைப்புகளை அறிமுகப்படுத்தி வருகிறது. **2017–2018** ஆம் ஆண்டில் **2000** புதிய வடிவமைப்புகளை பல்வேறு இரகங்களில் அறிமுகப்படுத்தியுள்ளது.



புதிய இரகங்களை அறிமுகப்படுத்துதல்

நகரங்களில் உள்ள வாடிக்கையாளர்களின் இரசனையை மனதில் கொண்டு கோ–ஆப்டெக்ஸ் 2017–2018 ஆண்டில் புதிய இரகங்களை அறிமுகப்படுத்தியுள்ளது,

## அகிம்சா பட்டுச் சேலைகள்

இச்சேலைகளில் உபயோகப் படுத்தப்படும் பட்டு நூல் பட்டு கூட்டில் உள்ள புழுவை கொல்லாமல் அது தானாகவே கூட்டை விட்டு வெளியேறிய பின் கிடைக்கும் பட்டு நூலில் இச்சேலை தயாரிக்கப்படுவதால் இந்த சேலைகள் அகிம்சா பட்டு சேலைகள் என அழைக்கப்படுகிறது. காஞ்சிபுரம் மற்றும் ஆரணி பகுதி கைத்தறி நெசவாளர்களால் இச்சேலை உற்பத்திச் செய்யயப்படுகிறது.




**இயற்கை சாயமிட்ட பருத்தி சேலைகள்**

இச்சேலையின் நூல்கள் இயற்கையாக கிடைக்கும் பூக்கள், மூலிகைகள், இதழ்கள், இலைகள் மற்றும் விதைகள் ஆகியவற்றின் சாறு கொண்டு சாயம் ஏற்றப்படுகிறது. இச்சேலைகளின் பாவு மற்றும் ஊடை நூல் உயர்தர பருத்தி நூல் கொண்டு பொள்ளாச்சி அருகே உள்ள வதம்பச்சேரி. திண்டுக்கல் மற்றும் திருச்சியில் உள்ள மணமேடு ஆகிய பகுதியில் உள்ள கைத்தறி நெசவாளர்களால் உற்பத்தி செய்யப்படுகிறது.




**நவீன காஞ்சி காட்டன் சேலைகள்**

பாரம்பரிய வடிவமைப்புகளில் சிறந்த நூல் வேலைப்பாடுகளுடன் வதம்பச்சேரி, திண்டுக்கல் மற்றும் பரமக்குடி பகுதிகளில் உள்ள தேர்ந்த நெசவாளர்களால், சிறப்பாக உருவாக்கப்பட்டு நவீன காஞ்சி காட்டன் சேலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. தரமிக்க 80s நெம்பர் நூலில் தற்காலத்திற்கேற்ப பாரம்பரிய வடிவமைப்புகளைக் கொண்டு இச்சேலைகள் நேர்த்தியுடன் நெய்யப்படுகின்றன.

இச்சேலைகள் நுண்ணிய நூல்வேலைப்பாடுகளுடன், பெரிய முந்தானையுடன் கூடிய காஞ்சி காட்டன் சேலைகளைப்போல உருவாக்கப்படுகின்றன.





**வேட்டி சட்டை செட் மற்றும் வெல்குரோ வேட்டிகள்**

ஆண் வாடிக்கையாளரின் தேவையை கருத்தில் கொண்டு வேட்டி மற்றும் அதற்கு பொருத்தமான வண்ணத்தில் சட்டைத்துணி உள்ளடக்கிய ''**வேட்டி சட்டைதுணி செட்**'' கோ–ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

வேட்டி உடுத்திக்கொள்ள ஆர்வமுள்ள, ஆனால் வேட்டி உடுத்தும் அனுபவம் இல்லாத வாடிக்கையாளரின் தேவையை அறிந்து கோ–ஆப்டெக்ஸில் வெல்குரோவுடன் தைக்கப்பட்ட வேட்டிகள் அறிமுகம் செய்யப்பட்டு உள்ளது.

இவ்வேட்டிகளில் பர்ஸ் மற்றும் கைப்பேசிகளை வைத்துக் கொள்வதற்கு ஏதுவாக பாக்கெட் தைக்கப்பட்டு உடல் அளவிற்கேற்ப வேட்டிகள் கிடைக்கின்றன.



''வேட்டி சட்டைத்துணி செட்''



வெல்குரோ'' வேட்டிகள்

**தேசிய கைத்தறி கண்காட்சி – ஹேண்டெக்ஸ் –2017**

கைத்தறி துணிகளின் பயன்பாட்டை அதிகப்படுத்தவும், வாடிக்கையாளர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தமிழக அரசு ஆகஸ்ட் 7–ம் தேதி கைத்தறி தினம் கொண்டாட தீர்மானித்தது. இதில் கோ–ஆப்டெக்ஸ், கைத்தறி மற்றும் துணிநூல் துறையுடன் இணைந்து தேசிய கைத்தறி கண்காட்சி ஹேண்டெக்ஸ் 2017 என்ற பெயரில் சென்னை வாலாஜா சாலையில் உள்ள கலைவாணர் அரங்கத்தில் நடத்தியது. 44 காட்சி அறைகள் அமைக்கப்பட்டு, கோ–ஆப்டெக்ஸ் மற்றும் மற்ற மாநில சங்கங்களும் பங்கு பெற்றன.

ஏழு தினங்கள் நடைபெற்ற இக்கண்காட்சி, ரூ 1.62 கோடி அளவிற்கு விற்பனை செய்து கைத்தறி ரகங்களின்விற்பனையை பெருக்க ஒரு பெரிய உந்து சக்தியாக விளங்கியது.

| வ. எண் | விவரங்கள் | மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கோ–ஆப்டெக்ஸ் செய்த விற்பனை | 96.13 |
| 2 | மற்ற மாநில சங்கங்களின் விற்பனை | 65.43 |
| | மொத்தம் | 161.56 |

**ஆடை அலங்கார அணி வகுப்பு**

கைத்தறி ஆடைகளின் முக்கியத்துவத்தை இளைஞர் சமுதாயம் மற்றும் ஆடை அலங்காரத்தில் மிக்க ஈடுபாடுடைய பிரிவினருக்கு கொண்டு செல்லும் வகையில் நேஷனல்

இன்ஸ்டியூட் ஆப்–பேசன் டெக்னாலஜி சென்னையுடன் இணைந்து ஆடை அலங்கார அணி வகுப்பு நடத்தப்பட்டது.

‘‘சிம்பனி ஆப் வீவ்ஸ்’’ என்ற பெயரில் நடத்தப்பட்ட ஆடை அலங்கார அணி வகுப்பில் தமிழகத்தின் பல்வேறு பகுதியில் தயாரிக்கும் ஆடைகளின் தொகுப்புகளையும் அனைவருக்கும் ஏற்ற நவீன படைப்புகளான ஆர்கானிக் பருத்தி சேலைகள், லினன் சட்டைகள், குர்தீஸ் மற்றும் வேட்டிகள் பயன்படுத்தப்பட்டன.





**நெசவாளர் அடையாள அட்டை**

கைத்தறி நெசவு என்பது ஒரு தலை முறையிலிருந்து அடுத்த தலை முறைக்கு கொண்டு செல்லப்படும் கைவினை செயல்பாடாக உள்ளதால். இதற்கு பொறுமையும், தனி திறனும் தேவைப்படுகின்றது. ஒரு நெசவாளி ஒரு சேலையை நெய்வதற்கு குறைந்தபட்சம் 15000 முறை தனது கைகளையும் கால்களையும் அசைக்க வேண்டியுள்ளது. எனவே கோ–ஆப்டெக்ஸ் அனைத்து கைத்தறி சேலைகளிலும் அதை நெய்த நெசவாளர்கள் குறித்து தெரியப்படுத்தும் விதமாக நெசவாளர் அடையான அட்டையை இணைத்து வழங்குகிறது. இந்த நெசவாளர் அடையாள

அட்டையானது வாடிக்கையாளர் மற்றும் நெசவாளரிடையே தொடர்பு ஏற்படுத்துகிறது.




**நெசவாளர் அடையாள அட்டை**

## வியபார யுத்திகள்

## இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம்

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களின் ஆலோசனையின்படி, **2011–2012** ஆம் ஆண்டில் "இரண்டு வாங்கினால் ஒன்று இலவசம்" என்ற புதுமையான திட்டம் துவக்கப்பட்டது. வாடிக்கையாளர்களின் பேராதரவினால் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலமாக 2017–2018ஆம் ஆண்டு ரூ.35 கோடி அளவிற்கு விற்பனை நடைபெற்றுள்ளது.

பல்வேறு வணிக நிறுவனங்கள் ஆடி மாதத்தில் வழங்கும் சிறப்புத் தள்ளுபடி சலுகைகளுடன் போட்டியிடும் வகையில் முதல் முறையாக 2016ஆம் ஆண்டில் தமிழ் மாதமாகிய ஆடி மாதத்தில் “ஆடியில் அதிர்ஷ்டம்” என்ற திட்டத்தை 14.01.2017 முதல் 13.08.2017 வரை கோ–ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்தி கடந்த 2017ஆம் ஆண்டில் ரூ.20.13 கோடி அளவிற்கு விற்பனை எட்டியுள்ளது.

**கனவு நனவு திட்டம்**

‘‘கனவு நனவு திட்டம்’’என்னும் பிரபலமான மாதாந்திர சேமிப்புத் திட்டத்தினை கோ–ஆப்டெக்ஸ் வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் வாடிக்கையாளர்கள், குறைந்தபட்சம் ரூ.300 மற்றும் ரூ.100 இன் மடங்குகளில் மாதத் தவணையாக செலுத்தப்படுகிறது. வாடிக்கையாளர்கள் 9 தவணைகள் செலுத்திய பிறகு, 10 ஆவது தவணை தொகை கோ–ஆப்டெக்ஸால் செலுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் வாடிக்கையாளர்கள் தாங்கள் செலுத்தும் 9 மாத மொத்த தவணை தொகையின் மீது 58 விழுக்காடு கூடுதல் பணப் பலனைப் பெறுகிறார்கள். 36,000 வாடிக்கையாளர்கள்

இத்திட்டத்தில் சேர்ந்துள்ளனர். 2017–2018 ஆம் ஆண்டில் இத்திட்டத்தில் ரூ.13.62 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும் 2018–2019ஆம் ஆண்டில் ரூ. 24 கோடி மதிப்பிற்கு விற்பனை நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தங்கமழைத் திட்டம்**

தீபாவளி, கிறிஸ்துமஸ் மற்றும் பொங்கல் ஆகிய விழாக்காலங்களில் ரொக்க விற்பனையை அதிகரிக்கும் நோக்கில், "**தங்க மழைத் திட்டம்**" என்னும் திட்டத்தினை (15.09.2017 முதல் 31.01.2018 வரை), வாடிக்கையாளர்களுக்கு கோ–ஆப்டெக்ஸ் அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் ரூ.2,000 மதிப்பிற்கும் மற்றும் அதன் மடங்குகளிலும், ரொக்கத்திற்கும், வங்கி அட்டைகளின் மூலமும் ஜவுளிகளை வாங்கும் ஒவ்வொரு வாடிக்கையாளரும் இந்த போட்டியில் கலந்து கொள்ள இயலும். ஒவ்வொரு ரூ.2,000க்கும் அதன் மடங்குகளிலான ரொக்க விற்பனைக்கு, வாடிக்கையாளர்–களுக்கு போட்டி கூப்பன்/கூப்பன்கள் வழங்கப் படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 1.10 கிலோ தங்ககாசுகள் 220 வாடிக்கையாளர்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

**புதிய ஆட்கள் பணியில் சேர்ப்பு மற்றும் பயிற்சி**

2017–2018 ஆண்டில் 50 நபர்கள் உதவி விற்பனையாளர்/உதவி பெண் விற்பனையாளர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டனர். கணினியில் அனுபவமுள்ள இந்த புதிய விற்பனையாளர்கள் இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு விற்பனை நிலையங்களில் பணியில் அமர்த்தப்பட்டனர்.

விற்பனையாளர்களுக்கு விற்பனைத் திறன், வாடிக்கையாளர்களை வரவேற்றல் மற்றும் துணி இரகங்கள் பற்றிய விழிப்புணர்வு குறித்து பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

**சர்வதேச கண்காட்சிகள்**

கோ–ஆப்டெக்ஸ் இண்டர்நேஷனல், பிரான்ஸ் நாட்டிலுள்ள பாரிஸ் நகரில் நடைபெற்ற ஹுஸ் நெக்ஸ்ட், 2017 மற்றும் ஜனவரி–2018ல் ஜெர்மனி நாட்டிலுள்ள ஃபிராங்க்பர்ட் நகரில் நடைபெற்ற ஹெய்ம்டெக்ஸ்டைல் கண்காட்சிகளில் கலந்து கொண்டதின் மூலம் ரூ.1.02 கோடி மதிப்பிற்கு விற்பனை செய்ய வாய்ப்பினை பெற்றது.



கோ–ஆப்டெக்ஸ் காட்சி அறை,பாரிஸ், பிரான்ஸ்



கோ–ஆப்டெக்ஸ் காட்சி அறை, ஹெய்ம்டெக்ஸ்டைல் , ஜெர்மனி

**அரசு திட்டங்களை செயல்படுத்துதல்**

**விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம் பொங்கல் 2018**

விலையில்லா வேட்டி சேலை வழங்கும் திட்டம் பொங்கல் **2018**ன் கீழ் சேலைகள் மற்றும் வேட்டிகளை வழங்கும் பணிகளுக்கான முகமை நிறுவனங்களில் ஒன்றாக கோ-ஆப்டெக்ஸ் செயல்பட்டு வருகிறது. **76.11** லட்சம் சேலைகளையும், **81.71** லட்சம் வேட்டிகளையும் பொங்கல் **2018**ற்கு தாலுக்கா அலுவலகங்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

**விலையில்லா பள்ளிச் சீருடைத் துணி விநியோகம்**

பள்ளி சிறார்களுக்கு, விலையில்லா சீருடைத் துணி வழங்கும் திட்டத்தின் கீழ் முகமை நிறுவனங்களில் ஒன்றாக கோ-ஆப்டெக்ஸ் செயல்பட்டு வருகிறது. டிரில் இரகங்கள் **71.71** லட்சம் மீட்டர், கேஸ்மென்ட் **119.66** லட்சம் மீட்டர் மற்றும் துப்பட்டா **69.42** லட்சம் மீட்டர் சமூக நலத்துறைக்கு **2017–2018** ஆண்டிற்கு விநியோகம் செய்யப்பட்டன.

**முதியோர் ஓய்வூதிய திட்டத்தின் கீழ் விலையில்லா வேட்டி சேலைகள் வழங்கல்**

கோ–ஆப்டெக்ஸ், முதியோர் ஓய்வூதியத்திட்டத்தின் கீழ் விலையில்லா வேட்டி, சேலை விநியோகம் செய்யும் முகமை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. கடந்த தீபாவளி **2017**ல், **20.24** இலட்சம் சேலைகள் மற்றும் **7.91** இலட்சம் வேட்டிகளை கோ–ஆப்டெக்ஸ் முதியோர் ஓய்வூதியதாரர்களுக்கு விநியோகம் செய்துள்ளது. இதேபோல், பொங்கல் **2018**ல் **20.45** இலட்சம் சேலைகள் மற்றும் **7.91** இலட்சம் வேட்டிகள் விநியோகிக்கப்பட்டது. இதன் மொத்த மதிப்பு சுமார் ரூ.**84.83** கோடிகளாகும்.

**2018–2019 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டம்**

**விற்பனை இலக்கு**

புதிய வடிவமைப்புகளை உருவாக்குதல், புதிய இரகங்களை அறிமுகம் செய்தல், விற்பனை நிலையங்களை நவீனப்படுத்துதல், அரசுத்துறை நிறுவனங்களின் துணித் தேவைகளை வழங்குதல், பரவலான விளம்பரங்கள் ஆகிய நடவடிக்கைகள் மூலம் **2018–2019** ஆம் ஆண்டிற்கு ரூ.**340** கோடி விற்பனை இலக்கை அடைய கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

## 9 2018–2019ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு

மாநில அரசு 2018–2019 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கு பின்வரும் விவரப்படி ரூ.1240.72 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது:-

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2018–2019 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | விலையில்லா சேலைகள் மற்றும் வேட்டிகள் வழங்கும் திட்டம் | 49045.00 |
| 2 | கைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்கும் திட்டம் | 484.05 |
| 3 | விசைத்தறி நெசவாளர்களுக்கு விலையில்லா மின்சாரம் வழங்கும் திட்டம் | 43644.45 |
| 4 | கைத்தறி உதவித் திட்டம் | 4000.00 |
| 5 | வட்டி மானியம் வழங்கும் திட்டம் | 1050.00 |
| 6 | கைத்தறித் துணிகள் விற்பனைக்கு தள்ளுபடி மானியம் வழங்குதல் | 15000.00 |
| 7 | மகாத்மா காந்தி புங்கர் பீமா யோஜனா திட்டத்தின் கீழ் தமிழ்நாடு கூட்டுறவு கைத்தறி நெசவாளர்களுக்கு காப்பீட்டுக் கட்டணம் செலுத்துதல் | 150.00 |
| 8 | கூட்டுறவு கைத்தறி நெசவாளர் சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம் | 1200.00 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2018–2019 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 9 | கைத்தறி நெசவாளர்களுக்கான நல்வாழ்வு காப்பீட்டுத் திட்டம் | 150.00 |
| 10 | முதியோர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்கும் திட்டம் | 2500.00 |
| 11 | சிறந்த நெசவாளருக்கு பரிசு வழங்கும் திட்டம் | 1.00 |
| 12 | மாநில ஜவுளி ஆலோசனைக் குழு – அலுவலகச் செலவுகள் மற்றும் அரசு சார்பற்ற உறுப்பினர்களுக்குப் பயணப்படி நாட்படி | 10.00 |
| 13 | விரிவான கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் குழும வளர்ச்சித் திட்டம் | 200.00 |
| 14 | விரிவான கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் விற்பனை ஊக்குவிப்புத் தொகை | 3000.00 |
| 15 | ஈரோட்டிலுள்ள விசைத்தறி சேவை மையத்திற்கு வாடகை மானியம் | 3.12 |
| 16 | கைத்தறி மற்றும் துணிநூல் துறைக்கு புதிய அலுவலகக் கட்டடம் கட்டுதல் | 50.00 |
| 17 | செயல்படாத கூட்டுறவு நூற்பாலைகளுக்கு வழிவகை முன்பணம் – கைத்தறி – துணிநூல் ஆணையர் / இயக்குநரின் பொறுப்பிலுள்ளவை | 100.00 |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு 2018–2019 (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 18 | சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள் | 2847.20 |
| 19 | அமலாக்கப் பிரிவின் சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள் | 240.72 |
| 20 | சம்பளம் மற்றும் நிர்வாகச் செலவுகள் – கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை, தலைமை செயலகம் | 396.77 |
| 21 | இதர இனங்கள் | 0.18 |
| மொத்தம் | | 124072.49 |

**ஓ.எஸ்.மணியன்**
**கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்**